நெய்தல்

தொகுதி 04

1981 - 2006
SILVER JUBILEE YEAR

எண் 01

கலை, கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை.
2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EASTERN UNIVERSITY SRI LANKA

PER ARDUA AD SCIENTIAM

1981 - 2006

SILVER JUBILEE YEAR

நெய்தல்

பிரதம ஆசிரியர்

வேலுப்பிள்ளை குணரத்தினம்

நிர்வாக ஆசிரியர்

செல்லையா சிவநாயகம்

ஆசிரியர் குழு

கலாநிதி செ.யோகராசா

வெ.அழகரத்தினம்

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு	:	மார்கழி 2006
தொடர்புகளுக்கு	:	**செ.சிவநாயகம்** சமூக விஞ்ஞானத்துறை கலை, கலாசார பீடம் கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலை, செங்கலடி.
தொலைபேசி	:	065 - 2240583
மின்னஞ்சல்	:	deanarts@yahoo.com
விலை	:	ரூ.100/=
அச்சுப்பதிப்பு	:	**சண் அச்சகம்** இல.05, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு. 065-2222597

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

		பக்கம்
01.	ஆசிரியர் குறிப்பு	(iv)
02.	ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகளும் நவீன கவிதையின் தோற்றமும் : மறுமதிப்பீடு - செ.யோகராசா	01 - 06
03.	H.A.கிருஸ்ணபிள்ளையின் இலக்கிய ஆக்கங்களில் நாயன்மார், ஆழ்வார் பாசுரங்களின் செல்வாக்கு - றூபி வலன்ரீனா பிரான்சிஸ்	07 - 16
04.	*Impact of industrial land use on the Water Quality of the Batticaloa lagoon.* - எ.ஜே.திசைராஜா	17 - 33
05.	உலக நீர் : மாசுபடுதலும் பயன்பாடும் பற்றாக்குறையும் - ம.வர்ணகுலசிங்கம்	34 - 44
06.	இஸ்லாத்தின் பார்வையில் முஸ்லிம் - முஸ்லிமல்லாதோர் தொடர்புகள் - ஏ.ஜ.ஃபர் ஹூஸைன்	45 - 50
07.	மத்துவ வேதாந்த மூலதத்துவங்கள் இராமனுஜ வேதாந்தத்துடன் ஓர் ஒப்பீடு - வெ.அழகரத்தினம்	51 - 68
08.	இலங்கையில் மலையகத் தமிழர்களும் குடியுரிமைப் பிரச்சினையும் - வே.குணரத்தினம்	67 - 79
09.	19ம், 20ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த சமயத் தோற்றம் குறித்த கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகளும் வியாக்கியானங்களும் - ஒரு நோக்கு. - பே.சச்சிதானந்தன்	80 - 86
10.	இந்து அறிவியற்புலத்தில் மருத்துவ இயல் - ஒரு நோக்கு - ச.முகுந்தன்	87 - 102
11.	நவீனத்துவம் அல்லது பின்னியம் - ஒரு சமூகவியல் நோக்கு - ச.சசிதரன்	103 - 111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குறிப்பு

உங்கள் பார்வைக்குப் புகுகின்ற ''நெய்தல்'' ஓரளவு குறைந்தகால இடைவெளியில் வெளிவருவது மகிழ்ச்சியளிக்கின்ற விடயமாகின்றது. மேலும் முன்னைய இதழ்கள் வெளிவந்த சூழலைவிட முக்கியமானதொரு சூழலில் இவ்விதழ் வெளிவருகின்றது. அதாவது, கிழக்குப் பல்கலைக்கழகம் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடிவரும் வேளையில் இது வெளிவருவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும் அதேவேளையில் அது சிந்தனையைத் தூண்டுகின்றதொரு விடயமுமாகின்றது. ஏனெனில், கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் இப் பல்கலைக்கழகம் பற்றி அவர்களின் தகுதிநிலை எண்ணிக்கை பற்றி சிந்தித்துப் பார்ப்பதற்கு இவ்விதழின் தற்போதைய வரவு வழிகோலியுள்ளது என்றே கருத வேண்டியுள்ளது.

அத்தகையோர் சிந்தனை ஒருபுறமிருக்க, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதுபற்றி யாது கருதுகின்றோம் என்பதனை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன். அவ்விதத்தில் இவ்விதழில் தமிழ் சார்ந்த இரண்டு கட்டுரைகளும் புவியியல் சார்ந்த இரண்டு கட்டுரைகளும் அரசியல் விஞ்ஞானம், ஒப்பீட்டுச் சமயம், இஸ்லாம், மெய்யியல், சமூகவியல், இந்துப் பண்பாடு என்பன சார்ந்து ஒவ்வொரு கட்டுரையும் இடம்பெற்றுள்ளமை மூலம் இப்பீடத்திலுள்ள கணிசமான துறைகள் சார்ந்தோர் எழுதியுள்ள கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது என்ற திருப்தி ஏற்பட்டுள்ளது.

அதனைவிட திருப்தி தருகின்ற விடயம், இக்கட்டுரை வழங்கியவர்களுடன் ஐந்து பேர் நீங்கலாக ஏனையோர் 'நெய்தல்' முதல் இதழ் வெளிவந்த காலத்தில் இளம் விரிவுரையாளராக - இளம் ஆய்வாளர்களாக இருந்து இன்று முதுநிலை விரிவுரையாளராக உள்ளனரென்பது.

அதனைவிட திருப்தி தருகின்ற விடயம் இவ்விதழுக்குக் கட்டுரை தந்த இளம் ஆய்வாளர்களுள் மூவர் இப் பல்கலைக்கழகத்தின் அறுவடைகளென்பது!

நெய்தலின் வரலாற்றில் இம்மலர் விசேட சிறப்பொன்றினையும் பெறுகின்றது. அதாவது, இம்மலரில் வெளிவந்துள்ள அனைத்துக் கட்டுரைகளும் அவ்வத் துறைசார்ந்த பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்களினால் பரிசீலனை செய்யப்பட்டு பிரசுரமாகியுள்ளன. அந்த வகையில் இம்மலர் புலமையாளர்களினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட சஞ்சிகையாக *(Refereed Journal)* அமைந்துள்ளமை மேலும் திருப்தி தருகின்ற விடயமாகும்.

இவ்விதங்களிலெல்லாம் பெருமிதமடைவது நியாயமெனினும் ஆய்வுலகிலும் ஒவ்வொரு கற்கை நெறிகளிலும் துரிதமாக மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதையும் அவை பற்றி நாம் நன்கறிந்து எம்மை மேன்மேலும் புடம்போட்டுக் கொள்ள வேண்டுமென்பதையும் மறந்துவிடாதிருப்பது அவசியமாகின்றது.

ஒரு பல்கலைக்கழக ஆய்வாளர் குழாத்தின் இருப்பும் இருப்பின் அடையாளமும் நன்கு வெளிப்படுவதென்பது அர்ப்பணிப்புடனான ஆய்வுச் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளமை கண்கூடு. அத்தகையோராகிய உங்களுக்கு 'நெய்தல்' என்றென்றும் கைகொடுத்துதவும்; அதேவேளை நெய்தலின் தரமான வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஒழுங்கானதும் தொடர்ச்சியானதுமான வரவிற்கும் உங்களது ஒத்துழைப்பும் அவசியமாகின்றது என்பதை இச்சந்தர்ப்பத்தில் வற்புறுத்த விரும்புகின்றேன்.

ஆசிரியர் - நெய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையாளர்கள்

01) *கலாநிதி.செ.யோகராசா* **B.A(Hons), Dip in Ed., M.A, Ph.D.**

சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

02) *றூபி வலன்ரீனா பிரான்சிஸ்* **B.A(Hons), Dip in Ed., M.Phil,**

சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

03) *கலாநிதி.செல்வி.எ.ஜே.திசைராஜா* **B.A(Hons), Dip in Ed., M.A, Ph.D.**

சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல் துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

04) *ம.வர்ணகுலசிங்கம்* **B.A(Hons), Dip in Ed., M.A.**

விரிவுரையாளர், புவியியல் துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

05) *ஏ.ஜாஃபர் ஹூஸைன்* **B.A(Hons), M.A**

விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

06) *வெ.அழகரத்தினம்* **B.A(Hons), Dip in Ed., M.Phil.**

சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

07) *வே.குணரத்தினம்* **B.A(Hons), M.Phil**

சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

08) *பே.சச்சிதானந்தன்* **B.A(Hons)**

விரிவுரையாளர், சமய ஒப்பீட்டு சமூக நல்லுறவுத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

09) *ச.முகுந்தன்* **B.A(Hons), M.A**

விரிவுரையாளர், இந்து நாகரிகப் பிரிவு, கிழக்குப்பல்கலைக்கழகம்.

10) *சி.சசிதரன்* **B.A(Hons)**

வருகைதரு விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகளும் நவீன கவிதையின் தோற்றமும் : மறுமதிப்பீடு

கலாநிதி.செ.யோகராசா

1. ஈழத்தில் நவீன கவிதை தோற்றம் பெற்ற பின்புலத்தில் யாழ்ப்பாணத்தில் (1943ல்) நிறுவப்பட்ட 'மறுமலர்ச்சிச் சங்கம்' முக்கியபங்கு வகிக்கின்றது[1]. இவ்வழி மறுமலர்ச்சிச் சங்கம் வெளியிட்ட 'மறுமலர்ச்சி' சஞ்சிகைக்கும் மிக முக்கிய பங்குள்ளது[2]. ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளான மஹாகவி, நாவற்குழியூர் நடராஜன், 'சாரதா' முதலானோரின் கவிதைகள் மறுமலர்ச்சிச் சஞ்சிகையிலே இடம்பெற்றுள்ளன. இவர்களது கவிதைகள் ஆரம்ப நிலையில் காதல், இயற்கை, கிராமிய வாழ்க்கை முதலான விடயங்களை அனுபவஞ் சார்ந்த நிலையில் வெளிப்படுத்துவனவாக விளங்கின; இக்கவிதைகளில் பேச்சோசைப் பண்பும் முகிழ்க்கத் தொடங்கியது. ஆய்வாளர்கள் இவற்றையே ஈழத்தின் ஆரம்பகால நவீன கவிதைப் பண்புகளாக இனங்கண்டு வந்துள்ளனர். அதேவேளையில் இக்காலப் பகுதியில், ஈழத்தின் வேறு பிரதேசங்களிலிருந்தும் 'பாரதி' (கொழும்பு), பாரதி (மண்டூர்) எரிமலை (திருகோணமலை) முதலான இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இவை போதியளவு ஆய்வாளரது கவனத்திற்குட்படவில்லை என்றே கூறவேண்டும்[3]. இவற்றில் வெளிவந்துள்ள கவிதைகள் நவீன கவிதைக்குரிய வேறு சில பண்புகளை வெளிப்படுத்தக் கூடியன. எனவே, இப் பின்னணியில், ஈழத்து நவீன கவிதையின் தோற்றமென்பது மறுமதிப்பீட்டிற்குள்ளாக வேண்டியுள்ளது. இதுபற்றி அவதானிப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகின்றது.

2. மேற்கூறிய அடிப்படையில் முதலிற் கவனத்திற்குள்ளாக வேண்டிய இலக்கியச் சஞ்சிகை கொழும்பிலிருந்து (கே. கணேஷ், கே இராமநாதன் ஆகியோரை இணையாசிரியர்களாகக் கொண்டு) வெளிவந்த 'பாரதி' (1946 ஜனவரி- 1948 டிசம்பர்) என்பதாகும். ஈழத்தின் முதல் முற்போக்குச் சஞ்சிகை இதுவே. எனினும் ஈழத்தின் முற்போக்கு அணிசார்ந்த விமர்சகர்கள் முற்போக்குச் சஞ்சிகையான இச்சஞ்சிகையை கவனத்திற்குட்படுத்தத் தவறியுள்ளமை வியப்பிற்குரிய விடயமாகிறது. ஆதலின், ஈழத்தின் நவீன கவிதையின் தோற்றத்தில் 'பாரதி'க்குரிய இடம்பற்றி அவதானிக்க வேண்டியது[4] அவசியமாகின்றது.

2.1 மார்க்சியச் சித்தாந்தச் சார்புடைய - சமூகநோக்குடைய - முற்போக்குச் சார்ந்த கவிதைகள் பிரக்ஞைபூர்வமாக, 'பாரதி' சஞ்சிகையிலேயே முதன்முதலாக வெளிவந்தன. இவ்விதத்தில் கவீந்திரன் (அ.ந. கந்தசாமி) எழுதிய மலையகத் தொழிலாளர் பற்றிய கவிதை விதந்துரைக்கப்பட வேண்டியது. 'தேயிலைத் தோட்டத்திலே" என்ற தலைப்பிலான அக்கவிதை 'காலையிலே சங்கெழுந்து பம்மும்' என்று ஆரம்பித்து, இவ்வாறு முடிகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பானையிலே தண்ணீரில் இட்டிருந்த
பழயதனை எடுத்தே உண்டு மிஞ்ச
மானை நிகர் கண்ணாள் தன் மணவாளர்க்கு
மற்றதனை வைத்துவிட்டு விரைந்து சென்று
கானகத்து மூங்கிலிலே வேய்ந்த கூடை
கழுத்தினிலே பின்புறமாய்த் தொங்கவிட்டு
தானெழுந்து விரைவாள் தன் வேலைக்காக
தன் கண்ணின் துயரத்தைத் துடைத்துக் கொள்வாள் "

'பாரதி' சஞ்சிகையில் வெளிவந்த மேற்கூறிய கவிதை, (i) பிரக்ஞை பூர்வமாக ஈழத்து மக்களது பிரச்சினை முதன்முதலாக பேசப்படுதல் (ii) ஈழத்துக் கவிஞரது சமூகப்பார்வை யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு வெளியே முதன்முதலாக வெளிப்படுதல் (iii) மலையகத் தொழிலாளரது பிரச்சினை (தமிழில்) நவீன கவிதையூடாக முதன்முதலாக வெளிப்படுதல் என்ற விதங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இக்கவிதைக் குரியவரான அ.ந.கந்தசாமி – 'கவீந்திரன்' - மறுமலர்ச்சிச் சங்கத்துடனும் 'மறுமலர்ச்சி'யுடனும் நெருங்கிய தொடர்புடையவராயிருந்தாலும் இக்கவிதை 'பாரதி'யில் வெளிவந்துள்ளது என்பதும் மறுமலர்ச்சியில் அன்னார் எதுவும் எழுதவில்லை என்பதும் சிந்தனைக்கும் வியப்பிற்குமுரியதான விடயங்களாகின்றன). கே.கணேஸும் (கலாவிநோதன், ராம், வித்யா முதலான) பல புனைப்பெயர்களில் பாரதியில் கவிதை எழுதியிருக்கின்றார்!

2.2 'பாரதி' சஞ்சிகையில் எழுதிய கவிஞர்கள் சர்வதேச விவகாரங்களிலே நாட்டம் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர் (கேரளாவிலுள்ள) கய்யூர்க் கிராமத்தில் அநியாயமாகத் தூக்கிவிடப்பட்ட தொழிலாளர்கள் பற்றிய கவிதையொன்றினை இவ்வழி எடுத்துக்காட்டலாம்.

" எப்படி இறந்தனர் பார்!
எங்களருந் தோழர் நால்வர்
செப்பரிய சேவை செய்தார்
செருக்களத்தில் மாயவில்லை
.... "

என்பது அத்தகைய கவிதையினொரு பகுதியாகும்.

2.3 முற்போக்குச் சார்புடைய மொழிபெயர்ப்புக் கவிதைகளும் முதன்முதலாக 'பாரதி'யில் இடம்பெறுகின்றன. வங்கக் கவிஞரான கௌதம சடோபாத்யாவின் கவிதைகளின் மொழிபெயர்ப்பு இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கதொன்று. அக்கவிதையின் ஒரு பகுதியை மாதிரிக்காக இங்கு எடுத்தாள்வது பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என் அருமைத் தோழனே,
நான் வாழும் இடமறியாய்
நகரின் தெருக்களிலே
நாலுமரம் சேருமிடம்
நான் உறங்கி வாழ்வதுண்டு
என்வீடு சிதைந்த கூடு
என் உயிரோ ஓய்வின்றி
ஓங்காரம் செய்யத் துடிக்குது
லட்சணக் கணக்கான பாட்டாளிகள்
பாடுபடுவோர் இடையில்
நான் அலைந்து திரிவேன்
....................................."

2.4 தொகுத்து நோக்கும் போது, 'பாரதி' சஞ்சிகையினூடாக வெளியிடப்பட்ட மேற்கூறியவாறான கவிதைத் தடங்கள், 'மறுமலர்ச்சிச் சஞ்சிகை வெளிப்படுத்திய கவிதைத் தடங்களிலிருந்து வேறுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதத்தில், 'பாரதி' சஞ்சிகையூடாக, ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் பிறிதொரு தடத்தில் சென்றுள்ளமை தெளிவாகப் புலப்படுவதும் கவனத்திற்குரியது.

3 இக்காலப் பகுதியிலே மற்றொரு இலக்கியச் சஞ்சிகையும் அண்மைக்காலம் வரையும் பரவலாக அறியப்படாத இலக்கியச் சஞ்சிகையுமானதொரு சஞ்சிகை மண்டூரிலிருந்து 'பாரதி' என்ற பெயரில் வெளிவந்துள்ளது[5].

3.1 இப்'பாரதி'யிலும் சமூக நோக்குடைய கவிதைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கவி ஜி எம் செல்வராஜ் எழுதிய 'இதுவா பொங்கல்?' என்பது இவ்வித்தில் கவனத்திற்குரியதொரு படைப்பாகும். அக் கவிதையின் ஒரு பகுதி, இது:

" ஏழைகளைக் கூப்பிட்டு ஏசிப்பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
நாளைவா கூலிதர வென்று சொல்லி
நாட்டாண்மை காட்டி யெந்நாளும் தங்கள்
பேழையிலே நிரப்பிவிட்ட பணத்தைக் கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கலிட்டு
வாழையிலை வெட்டியதில் புக்கை கட்டி
வறியவர்க்கு வழங்குவதும் பொங்கலாமோ?"

ஆக, நவீன கவிதையின் முக்கியமான பண்புகளுளொன்றான 'அதிகார எதிர்ப்பு' என்பது 'பாரதி'யின் கவிதைகளில் முகிழ்க்கத் தொடங்குவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி, ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றத்தில் மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்திலிருந்தும் கவிஞர் குழாமொன்று உருவாகி பொது ஓட்டத்துடன் இணைந்து கொள்வதையும் அவதானிக்க முடிகின்றது.

3.1. மேலும், இப்'பாரதி'யானது, கவிதை தொடர்பான பரிசோதனை முயற்சிகளுக்கும் இடமளித்துள்ளது. இவ்வழி, 'பாரதி'யில் இடம்பெற்ற 'வசன கவிதை' முயற்சி குறிப்பிடத்தக்கது. 'கற்பனைக் காதலிக்குக் கலைக்கடிதம்' என்ற பெயரில் எஸ்.கே.ராஜு எழுதிய கவிதையொன்று பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

"தளிர்க்கரங் கொண்டு தங்கத் தாளில்
களிப்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது
விழிப்புடன் இருந்து மீண்டும் மீண்டும்
சலிப்படையாது படித்துப் பார்த்தேன்
படித்துப் பயன் என் பதில் எழுத வேண்டாமோ
கண்ணே மணியே கனியே
என்றெழுத எனக்குத் தெரியாது"

4 தவிர, இக்காலப்பகுதியில், அ.செ.முருகானந்தத்தினை ஆசிரியராகக் கொண்டு திருகோணமலைப் பிரதேசத்திலிருந்து 'எரிமலை' என்றொரு சஞ்சிகையும் வெளிவந்துள்ளது. ஆயினும், அதுபற்றிய மேலோட்டமான கட்டுரைகூட எதுவும் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. திருகோணமலைப் பிரதேச எழுத்தாளர் சிலர் 'எரிமலை' ஊடாக வெளிப்பட்டிருப்பரென்று ஊகிக்கலாமாயினும் இதழ்கள் பார்வைக்குக் கிட்டும் போதுதான் அத்தகைய ஊகங்கள் உறுதிப்பட வாய்ப்புள்ளது!

5 ஆயினும், 'எரிமலை' தவிர, மேற்குறிப்பிட்ட 'பாரதி' சஞ்சிகைகளே ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் தொடர்பாக இதுவரை கூறப்பட்டு வந்துள்ள கருத்துக்களை மறுமதிப்பீடு செய்யப் போதிய வாய்ப்பளித்துள்ளன என்பது இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது எனலாம்.

6 இந்நிலையில் நவீன கவிதை தோற்றம் பெற்ற காலப்பகுதியை 'மறுமலர்ச்சிக் காலம்' என்று கூறப்பட்டுவருவது பற்றியும் சிந்திக்க வேண்டி உள்ளது. அதாவது, 'மறுமலர்ச்சி'ச் சஞ்சிகையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அவ்வாறு கூறப்பட்டிருக்குமாயின், இப்போது, அதனை மேலும் விரிவுபடுத்தி 'மறுமலர்ச்சி'யுடன் 'பாரதி' (கொழும்பு) பாரதி (மண்டூர்) முதலானவற்றையும் சேர்த்துக் கொள்வதே பொருத்தமானது எனலாம்.

7 அதுமட்டுமன்றி, இத்தொடர்பிலே பிறிதொரு விடயத்தையும் அழுத்திக் கூற வேண்டியுள்ளது. அதாவது, ஈழத்து நவீன கவிதை உருவாக்கத்திலே மேற்குறிப்பிட்ட இலக்கியச் சஞ்சிகைகளுக்கு மட்டுமன்றி, 'ஈழகேசரி' பத்திரிகைக்கும் முக்கிய இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.1 மறுமலர்ச்சிச் சஞ்சிகையோடு தொடர்புபட்டுள்ள படைப்பாளிகளும் அவ்விதத்தில் மறுமலர்ச்சிச் சங்கமும் உருவானதிலே 'ஈழகேசரி'யின் 'கல்வி அனுபந்த'ப் பகுதியும் 'இளைஞர் சங்க'மும் மறைமுகமாகச் செல்வாக்குச் செலுத்தியிருந்தன[6].

7.2 தவிர, முற்குறிப்பிட்ட இலக்கியச் சஞ்சிகைகளிலே எழுதிய பலரும் "ஈழகேசரி'யின் சமகால இதழ்களிலும் எழுதி வந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, கவீந்திரனின் (அ.ந.கந்தசாமி) சிறந்த கவிதைகளுள் சில, "ஈழகேசரி'யில் வெளி வந்திருப்பதைக் குறிப்பிடலாம். மேலும், பரிசோதனை முயற்சி என்ற விதத்தில் 'ஈழகேசரி'யிலும் வசன கவிதைகள் இடம்பெற்றுள்ளன[7]. இவ்விதத்தில் 'வரதர்' 'ஜோதி' முதலானோரின் ஆக்கங்கள் முக்கியமானவை. இவ்வாறான முக்கியத்துவத்தை அறிவதற்காக, 'ஜோதி' எழுதிய வசன கவிதையொன்றின் ஒரு பகுதியை இங்கு எடுத்தாள்வது பொருத்தமானது. அது பின்வருமாறு:

" சூரியன் வந்த வேலையைச் செய்யட்டும்
கூட்டு பவளைப் போல
பணக்காரன் ஏழையை வதைக்கட்டும்
அறிவாளைப் போல...."

எழுபதுகளளவில், தமிழ்நாட்டுப் புதுக்கவிஞரான மீராவின் காதற் காவியமான "கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்" தொகுப்பிலே மேற்கூறியவாறு உவமையூடாக முற்போக்குச் சிந்தனையை வெளிப்படுத்துகின்ற இதுபோன்ற பகுதிகள் சில வெளிவந்துள்ளமையையும் இவ்வேளை நினைவுகூர்வது அவசியமானது.

தமிழ்நாட்டு முற்போக்கு விமர்சகர்[8] சிலர் 'மீரா'வின் தொகுப்பினை இத்தகைய பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பாராட்டியுள்ளதோடு, அன்னாரை முற்போக்குக் கவிஞராக இனங்காண்பதற்கும் அடிப்படையாக இவ்வாறுள்ள 'மீராவின்' கவிதைப் பகுதிகளே காரணமாக அமைந்துள்ளமை சுவாரஸ்யமான விடயமாகும். அது எவ்வாறாயினும் இத்தியாதி உவமைசார் வெளிப்பாட்டு முறை, நாற்பதுகளளவிலேயே (1940) ஈழத்துக் கவிஞர்களிடம் வெளிப்பட்டுள்ளது என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமாகின்றது!

7.2. மேற்கூறியவற்றை நோக்கும்போது, ஈழத்திலே மறுமலர்ச்சிக் காலம் என்ற ஒன்றை இனங்காண்கின்ற போது, முற்குறிப்பிட்ட இலக்கியச் சஞ்சிகைகளை மனங்கொள்வது மாத்திரமன்றி, 'ஈழகேசரி' பத்திரிகையும் கவனத்திற் கொள்ள வேண்டுமென்பது தெளிவாகின்றது!

அடிக்குறிப்புக்கள்

1. மௌனகுரு. சி. நுஃமான். எம்.ஏ, சித்திரலேகா.மௌ. (இணை ஆசிரியர்கள்), இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம், வாசகர்.வட்டம், கல்முனை, 1976, பக் 19 – 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி, ஈழத்தில் தமிழ் இலக்கியம், நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட், சென்னை, இரண்டாம் பதிப்பு, செப். 1987, ப.187.

3. எடுத்துக்காட்டாக, மேற்குறிப்பிட்ட இரு நூல்களிலும் "பாரதி" சஞ்சகை பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

4. இதுபற்றிய விரிவான விளக்கத்திற்கு, பார்க்க : செ.யோகராசா "ஈழத்து முற்போக்கு இலக்கியச் சஞ்சிகை, 'பாரதி', புதுமை இலக்கியம், இலக்கியப் பேரரங்கு, 2002, பக் 26 – 31.

5. இதுபற்றிய விரிவான விளக்கத்திற்கு, பார்க்க : செ.யோகராசா, நெஞ்சில் நிலைத்துள்ள சில இதழ்கள் ; தொகுப்பாசிரியர் டொமினிக் ஜீவா, மல்லிகைப் பந்தல், கொழும்பு, ஜூலை 2006, பக் 26 – 31.

6. மே.கு. நூ, பக். 28.

7. இது பற்றிய விரிவான விளக்கத்திற்கு, பார்க்க : செ.யோகராசா, ஈழத்தில் வசனகவிதையின் ஆரம்பகாலம்' நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி நினைவுமலர், கொழும்பு 1979, பக்.75

8. வானமாமலை, நா, நூல் விமர்சனம் மீராவின் 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்', ஆராய்ச்சி, இதழ் 6, 1972 பாளையங்கோட்டை.

உசாத்துணை நூல்கள்

1. 'பாரதி' கொழும்பு இதழ்கள் 1-4, 1946 ஜனவரி - 1948 நவம்பர்.
2. 'பாரதி' (மண்டூர்) : இதழ்கள் 1, 3, 7, 8. - 1948
3. ஈழகேசரி, யாழ்ப்பாணம். 1940 - 1950 வரையான இதழ்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

H.A. கிருஷ்ணபிள்ளையின் இலக்கிய ஆக்கங்களில் நாயன்மார், ஆழ்வார் பாசுரங்களின் செல்வாக்கு

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

நோக்கம் :

'கிறிஸ்தவக்கம்பர்' என்னும் சிறப்புப் பெயருக்கு உரியவரான H.A.கிருஷ்ணபிள்ளை பிறப்பால் வைணவர். பின்னர் கிறிஸ்தவராக மதம் மாறியவர். கிறிஸ்தவ சமயக் கருத்துக்கள் அடங்கிய இலக்கிய ஆக்கங்கள் பலவற்றை இவர் எழுதியுள்ளார். இவ்வாக்கங்கள் பலவற்றில் இந்து மதச் செல்வாக்கினைக் காண முடிகின்றது. இதனை வெளிக்கொணருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறிமுகம் :

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பல்வேறு சமயங்களும் காலாகாலமாகப் பங்களிப்புச் செய்து வந்திருக்கின்றன. சைவம், வைஷ்ணவம் , சமணம், பௌத்தம் என்னும் சமயங்களின் கருத்துக்களாலும் அவ்வச்சமயப் படைப்பாளிகள் / புலவர்கள் அறிமுகப்படுத்திய புதிய வடிவங்களாலும் தமிழ் இலக்கியம் பல்வேறு பரிணாமங்களையும் பரிமாணங்களையும் பெற்றுவளர்ந்து வந்திருப்பதை யாவரும் அறிவர்.

இந்த வரிசையில் இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய இரு சமயங்களின் வருகையும் தமிழ் இலக்கியத்திற்கு அவை மேலும் வளம் சேர்த்தமையும் நினைவுகூரத்தக்கன. வணிக நோக்கத்திற்காகவும் மதப்பிரசார நடவடிக்கைக்காகவும், அரசியல் லாபங்களிற்காகவும் கீழைத்தேசங்களிற்கு ஐரோப்பியர் வருகை தந்தபோதும் இலக்கிய உத்வேகத்திற்குத் துணை நின்ற மேற்குறித்த நிலைமைகள் காரணமாக இச்சமயங்களைச் சார்ந்தோரின் இலக்கிய ஆக்கங்களிலும் கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாதது.

மேனாட்டுக் கிறிஸ்தவக் குருமார் தமிழ் நாட்டிற்கு வந்தபோது தமிழ் மொழியைக் கற்பதிலும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப தமது பழக்க வழக்கங்கள் சிலவற்றைக் (உதாரணம் : உணவு, உடை முதலியன) கடைப்பிடிப்பதிலும் ஆர்வங்காட்டினர். தமிழில் இலக்கிய மற்றும் இலக்கண நூல்கள் பலவற்றை இயற்றினர். மறுபுறத்தில் கிறிஸ்தவர்களாக மதம்மாறிய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாலும் தமிழில் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. மயூரம் வேதநாயகம் பிள்ளை, தேவநேயப்பாவாணர், கிருஷ்ணபிள்ளை வேதநாயக சாஸ்திரியார் போன்ற பலர் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

H .A.கிருஷ்ணபிள்ளை :

வாழ்க்கைப்பின்னணி

தமிழ்நாடு திருநெல்வேலியில் பாளையங்கோட்டைக்கு அருகேயுள்ள இரட்டியாபட்டி என்னும் கிராமத்திலே (கரையிருப்பு எனவும் சிலர் கூறுவர்.) சங்கர நாராயணபிள்ளைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வநாயகி அம்மாளுக்கும் மகனாக 1827ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி கிருஷ்ணபிள்ளை பிறந்தார். இவரது தந்தை வைஷ்ணவ சமயத்தினர்: வேளாள குலத்தினர்.

கிருஷ்ணபிள்ளையின் இயற்பெயர் கிருஷ்ணன் என்பதாகும். ஆரம்பத்தில் தமிழ்க்கல்வியைத் தனது தந்தையிடம் கற்ற இவர், மாணிக்கவாசகத் தேவரிடம் இலக்கணத்தையும்,பிலவண ஜோஸியரிடம் சமஸ்கிருதத்தையும், மகா வித்துவான் திருப்பாற்கடனாதக் கவிராயரிடம் யாப்பு முதலியவற்றையும் கற்றார். 1841இல் (பதினான்கு வயதில்) முத்தம்மாள் (ஒன்பது வயது)என்பவரைத் திருமணம் செய்தார். வைஷ்ணவ மதத்தில் அதிக வைராக்கியமுடையவராக இருந்த இவர், பஞ்ச லோகத்தாற் செய்யப்பட்ட சங்கு சக்கரமாகிய முத்திரையைப் பழுக்கக் காய்ச்சித் தன் இரு தோள்களிலும் சூடுபோட்டிருந்தவரென அறிய முடிகின்றது. கிறிஸ்தவ மதம் திருநெல்வேலியில் பரப்பப்பட்டபோது இதற்கெதிராகத் தீவிரமாக இவர் செயற்பட்டார். நல்லூர் என்னும் கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். இவற்றை அவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து அறிய முடிகின்றது.

இத்தகைய மதப்பற்றாளராய் இருந்த கிருஷ்ணபிள்ளை மதம் மாறக் காரணமாய் இருந்தது, சாயர்புரம் மிஷன் கலாசாலையாகும். கிருஷ்ணபிள்ளை 1852 இல் இக் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராகத் தெரிவு செய்யப்பட்டு கால்டுவெல் ஐயரால் பணிக்கு அமர்த்தப்பட்டார். அக்காலமுதல் கிறிஸ்தவ மதச்செல்வாக்கினால் இவர் படிப்படியாக ஈர்க்கப்பட்டார். இக்காலகட்டத்தில் திருநெல்வேலியில் உயர்குலத்தவரும் கல்வியிற் சிறந்தோருமாகிய அநேக இந்துக்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவத் தொடங்கினர். குறிப்பாக இவருடன் ஒரு சாலை மாணாக்கராயிருந்தவரும் அக்காலத்தில் பாளையங்கோட்டைக் கல்விச்சாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்தவருமாகிய சண்முகநாதக்கவிராயரும் மற்றும் தனக்கோடிராஜு, மணக்காவலப் பெருமாள்பிள்ளை, முத்தையாபிள்ளை (இவர் கிருஷ்ணபிள்ளையின் சகோதரர்) ஆகியோரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதுடன், இவரிடமும் அம் மதக் கொள்கைகளை வற்புறுத்திப் பேசியும் வந்தனர். 1857 இல் கிருஷ்ணபிள்ளை தினவர்த்தமானி பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றியபோது பேர்சிவல் குருவானவருக்குத் தமிழ் கற்பித்தார் எனவும் கூறப்படுகிறது.

இந்தப் பின்னணியில் கிருஷ்ணபிள்ளை 1858 இல் கிறிஸ்தவராக மதம் மாறி ஹென்றி அல்பிரட் (Hentry Alfred - H. A.) என்னும் பெயரினைச் சேர்த்துக் கொண்டார். 1860 இல் இவரது பிள்ளைகளும் கிறிஸ்தவமதத்தைத் தழுவினர். கிருஷ்ணபிள்ளை 1886 இல் திருவனந்தபுரம் மன்னர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அங்கு பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. 1900 மாசி மாதம் 03ம் திகதி கிருஷ்ணபிள்ளை இறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றிய நூல்கள்

"கடவுள் என் இருதயத்தைத் திறந்தார். நான் அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன்".

எனக் கூறுகின்ற கிருஷ்ணபிள்ளை இயற்றிய நூல்கள் வருமாறு :

(அ) செய்யுள் நூல்கள் :

1. போற்றித் திரு அகவல் - 1884
2. இரட்சணிய யாத்திரிகம் - 1894
3. இரட்சணிய மனோகரம் - 1899
4. இரட்சணியக் குறள்.
5. இரட்சணிய பால போதனை.

(ஆ) உரைநடை நூல்கள் :

1. இலக்கண சூடாமணி - 1883
2. இரட்சணிய சமய நிர்ணயம் - 1898
3. கிருஷ்ணபிள்ளை கிறிஸ்துவரான வரலாறு - 1893

இவர், வேதமாணிக்க நாடார் எழுதிய வேதப்பொருள் அம்மானை நூலையும், கால்டுவெல் ஐயர் எழுதிய பரத கண்ட அம்மானை என்னும் நூலையும் பதிப்பித்துமுள்ளார். இவர் இயற்றிய நூல்களுள் இரட்சணியக் குறள், இரட்சணிய பாலபோதனை ஆகிய நூல்கள் கிடைத்தற்கரிதாகி இழக்கப்பட்டு விட்டன என ஆய்வாளர் கூறுவர்.

இலக்கிய ஆக்கங்களில் இந்துமதச் செல்வாக்கு :

மேற்குறிப்பிட்ட இவரது நூல்களுள் போற்றித் திருவகவல், இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய சமய நிர்ணயம் ஆகிய நான்கு நூல்களே இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

போற்றித் திருவகவல் :

1884 இல் எழுதப்பட்ட இந்நூல், இவரது முதல் நூலாகக் கருதப்படுகின்றது. 53 கண்ணிகளையும் , 106 அடிகளையும் உடையதாக விளங்கும் இந்நூல், கிறிஸ்தவ இலக்கியப் பாரம்பரியத்தில் முக்கியம் பெறுகின்றது. இந்நூலின் கையெழுத்துப் பிரதியில் அகவல் என்ற தலைப்பு மாத்திரமே உள்ளதென்றும், மாணிக்கவாசகரது போற்றித் திருவகவல் மரபினையொட்டி எழுதப்பட்ட காரணத்தால் இரட்சணிய அகவல் எனப் பெயரிடாது போற்றித் திருவகவல் எனத் தாம் பெயர் சூட்டியுள்ளதாகவும் அதன் பதிப்பாசிரியர் வீ.ஞானசிகாமணி (பதிப்பு : 1977) விளக்கம் தந்துள்ளார். மாணிக்கவாசகரின் போற்றித் திருவகவலில் 93ஆம் வரியிலிருந்தே 'போற்றி' என்னும் சொல்லுடன் முடியும் வரிகள் உள்ளன. அதைப் போலவே இந் நூலிலும் 93ஆம் வரியிலிருந்தே 'போற்றி' என்னும் சொல் எடுத்தாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இதிலுள்ள பாடல் வரிகளை ஒப்பிட்டு நோக்குமிடத்து இந்து மதச் செல்வாக்கிற்கு உட்பட்டனவாய் அவை அமைந்திருப்பதனையும் அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் :

(அ) **மூவா நான்மறை முதல்வா போற்றி**
சேவார் வெல் கொடிச் சிவனே போற்றி
(94-95) என்னும் திருவாசக அடிகளையொட்டியதாய் கிருஷ்ணபிள்ளையின் போற்றித் திருவகவலில் வரும்,

மூவா ஏக முதலே போற்றி
இலங்கு சுடராம் ஈசா போற்றி
என்னும் அடிகள் அமைந்திருப்பதனைக் காணலாம்.

(ஆ) இவரது இந்நூலில் இறுதியடிகளாக வருகின்ற
நாயினுங் கடையாய் நன்றி கொன்றேற்குத்
தாயினுமினிய தற்பரா போற்றி
என்னும் பகுதி , சிவபுராணத்தில் வருகின்ற

நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயின் சிறந்த தயாவான தத்துவனே
என்பதனை நினைவூட்டுவதனைக் குறிப்பிடலாம். நூற் பொருளைப் பொறுத்தவரை திருவாசகத்தைப் போல உருக்கமாக அமைந்துள்ள இந்நூல், வடிவத்தில் இராமலிங்க அடிகளாரது அருட்பெருஞ்சோதி அகவலை ஒத்துள்ளது. அதாவது ஈரடி ஓரெதுகையாக இது எழுதப்பட்டுள்ளது.

இரட்சணிய யாத்திரிகம் :

தமிழின் முதல் முற்றுருவகக் காப்பியமான இரட்சணிய யாத்திரிகம், ஜான் பன்யன் (John Banyon) என்பவர் ஆங்கிலத்தில் (உரைநடையில்) எழுதிய The Pilgrim's Progress (திருப்பயணியின் முன்னேற்றம்) என்னும் நூலின் தழுவலாகும். செய்யுள் நடையில் இயற்றப்பட்ட இரட்சணிய யாத்திரிகம், மூல நூலிலில்லாத பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளமையுடன் தமிழ் நாட்டுச் சூழலுக்கேற்ற விவரணங்களைப் பெரும்பாலும் பெற்றிருப்பதும் குறிப்படத்தக்கதாகும். சுமார் 4000 விருத்தப் பாக்களையுடைய இக்காப்பியம்,1894 இல் வெளிவந்தது.

இக்காப்பியத்தில் தேவார மற்றும் பாசுரங்களின் செல்வாக்கைக் காணலாம். பெரிய புராணத்தின் இடையிடையே தேவாரப்பதிகங்கள் இடம் பெற்றிருப்பதனைப் போல இக் காப்பியத்துள்ளும் கிறிஸ்தவத் தேவாரப் பதிகங்கள் பலவற்றைக் காணலாம்.அத்துடன் ஆழ்வார் , நாயன்மார்களின் செய்யுள்களைப் போலவே இந்நூற் செய்யுள்களும் உருக்கமான முறையில் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் :

> மூவாத முதல்வனை முது சுருதி மொழிப் பொருளை
> ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்துஞ்
> சாவாத படிகாக்கத் தனுவெடுத்துத் துஜங்கட்டுந்
> தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே!

(இர.யா.ஜீவபுஷ்கரிணிடப்படலம்: தேவாரம்:5)

இரட்சணிய யாத்திரிகம் இகபர சந்திப்படலத்தின் ஈற்றில் காணப்படும் 36 செய்யுள்கள் அடங்கிய போற்றித் திருவிருத்தங்கள் திருவாசகத்தின் போற்றித் திருவகவலை ஒத்துள்ளன.

உதாரணம் :

(அ) **சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர்**
தாமே ஆகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியனாகி வினைகெடக்
கைதரவல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

(திருவாசகம் : போ.திரு.அகவல் : 86-90)

என்னும் பகுதியினை ஒத்ததாய்

அன்னை போற் கசிந்தந் தந்தைபோற் கடிந்துமாம்
பரிசுணர்த்தினாய் போற்றி
நன்னெறி யிகந்த மன்னரைச் செகுத்து
நலம்புனை நம்பனே போற்றி

(இர.யா.இகபரசந்திப் படலம்: 12)

என்னும் பகுதி அமைந்திருப்பதனை ஒப்பிட்டு நோக்கலாம்.

(ஆ) **நாயினுங் கடைப்பட்டேனை நன்னெறி காட்டியாண்டாய்**
ஆயிரமரவ மார்த்தவ முதனேயமுதம்......

என்னும் திருநாவுக்கரசரது தேவாரச் செய்யுளின் சாயலை

நாயினுங் கடைய பாவியேனை எரிநரக வாயிலு நடுக்குறும்
பேய்கொடுங் கையிலு நின்றிழுத்தழிவில் பேறழித்த பெருமான்

என வரும் இரட்சணிய யாத்திரிக அடிகள் ஒத்திருப்பதனைக் காணலாம்.

(இ) **குறைவிலா நிறைவே கோதிலா வமுதே**
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறைசிவனே
இறைவனே நீ என் உடலிடங் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் கோயில் திருப்பதிக ஐந்தாம் செய்யுளை ஒத்ததாக இரட்சணிய யாத்திரிகம், விசிராந்திப்படலம் , 12 ஆம் செய்யுளாக வரும் பின்வரும் செய்யுள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வேதமே வேத விளக்கமே விளக்கின்
விழுத்தரு ஜோதியே விமல
போதமே போதங் கடந்த மெய்ப் பொருளே
பொருள் புலப்பட வெளிவந்த
நாதமே யூதகுல நராதிபனே
நன்னெறி பிழைத்துலகுழலும்
ஆதனா னடியேனின் சரணடைந்தேன்
அஞ்சலென் றடைக்கல மருளே!

என்பதே அச் செய்யுளாகும்.

(ஈ) **புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி**
அறிவழிந்திட்டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்.....

என்ற திருஞானசம்பந்தரின் தேவாரத்தினை இரட்சணிய யாத்திரிகத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் இரு செய்யுள்கள் இயல்பாகவே நினைவூட்டுகின்றன.

(1) **மையார் கண்ணிருண்டு செவி வாயடைத்துக் குழறி**
ஐயான் மூச்சொடுங்கி யுயிராக்கை விட்டேகிடுநாள்
நையேல் கைநெகிழே லுனைநானுண் டஞ்சலென்

(2) **மரணாந்த வல்லிருண் மூடிமெய் வசமற்றுயிர் மறுகிக்**
கரணங்களும் பொறியாதியுங் கலங்கித் திகைத்தயருந்
தருணங் கிறிஸ்தரசே யெனையஞ்சேலெனத் தாங்கு
அரணம் பிறிதிலையே யுனையல்லாற் கடைக்கணி

(இர.யா.இகபர ச.படலம்: தேவாரம்)

பாவத்தின் கொடுமையையும், பாவ உணர்ச்சியின் தன்மையையும் பாவமீட்சியின் ஆனந்தத்தையும் இரட்சணிய யாத்திரிகத்தில் அதிகமாகக் காணமுடிகிறது. இத்தன்மையில் திருமங்கையாழ்வாரின் பெரியதிருவாய்மொழியை ஒத்ததாகவும் இந்நூல் காணப்படுகிறது.

இரட்சணிய மனோகரம் :

1899 இல் வெளிவந்த இந்நூல், 566 செய்யுள்களையுடையது. 34 பிரிவுகள் இதிலுள்ளன.தேவத்துதி, தோத்திரம், செபம், மன்றாட்டு, பாவ அறிக்கை, பால்ய பிரார்த்தனை, குமாரனுபூதி, ஒப்படை, சந்நிதி முறை, ஆன்ம பிரலாபம் என்பன இவற்றுட் குறிப்பிடத்தக்கவை. வைகறையில் பாடுவதற்கு உகந்தனவாகவும், கல்மனத்தையும் உருகச் செய்யும் வகையில் உருக்கம் நிறைந்தனவாகவும் இவை உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை இசையுடன் பாடினால் மனமுருகி இயேசுவின்பால் அன்பு பெருகுமென இந்நூலின் முகவுரையில் கிருஷ்ணபிள்ளை கூறியுள்ளார். ஆன்ம பிரலாபம் என்னும் பகுதியில் 29 செய்யுள்கள் உள்ளன. பரமான்மாவிற்கும் ஜீவான்மாவிற்குமிடையிலுள்ள தொடர்பினை உணர்த்துவனவாக இச்செய்யுள்கள் அமைந்துள்ளன. அத்துடன் அகப் பொருளிலக்கணத்தை இவை அடியொற்றிப் பாடப்பட்டுள்ளமையானது திருக்கோவையாரையும், தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணியையும் நினைவூட்டுவதாக உள்ளது. சந்நிதி முறை என்னும் பகுதியும் தாயுமானவரின் பாடல்களை ஒத்துள்ளது.

பால்ய பிரார்த்தனை என்னும் பகுதி 45 செய்யுள்களை உடையது. சிறு குழந்தைகளும் இலகுவில் மனனம் செய்யக் கூடியவகையில் எளிமையானதாக இப்பகுதி அமைந்துள்ளது.

இரட்சணிய மனோகரத்திலும் இந்து மத தேவார, பாசுரங்களின் செல்வாக்கைக் காண முடிகிறது. சில உதாரணங்கள் வருமாறு:

(அ) **பக்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி**
எத்தினாற் பக்தி செய்தேன் என்னை நீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லையம்பலத் தாடுகின்ற
அத்தா வுன்னாடல் காண்பானடியனேன் வந்தவாறே

என்னும் திருநாவுக்கரசரின் தேவாரத்தினை ஒத்ததாய் இரட்சணிய மனோகரத்தில் வரும் பின்வரும் செய்யுள் அமைந்திருப்பது அவதானிக்கத்தக்கது.

பக்தனாய்ப் பாடேன் சுத்தனா யொழுகேன்
பகலெல்லாம் பாவமே பழகி
எத்தனாய்க் கழித்தே னின்றுளேன் நாளையிலன்
என வெண்ணவும் படுவேன்
பித்தனேற் குனது பேரருளல்லாற்
பிழைக்கு மாறில்லை யாதலினால்
அத்தனே யடியேன் நின் சரணடைந்தேன்
அஞ்சலென்று அடைக்கலமருளே என்பதே அச் செய்யுளாகும்.

(ஆ) தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
....
கண்காள் காண்மின்களே ....
....
செவிகாள் கேண்மின்களே ....
....
வாயே வாழ்த்து கண்டாய் ....
....
நெஞ்சே நீ நினையாய் ....
....
கைகாள் கூப்பித் தொழீர் ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தினை ஒத்ததாய் இந்நூலின் இறுதிச் செய்யுளாக வரும்,

சிந்திக்க நெஞ்சடியேன் சென்னியிறைஞ்சக் கரங்கள்
வந்திக்க எஞ்ஞான்றும் வாழ்த்துகவாய் - புந்திக்குள்
வீற்றிருக்கும் ஜேசுவிரைமலர்ப் பூஞ்சேவடிக்கே
ஆற்றுக மெய் அன்பின் பணி

என்பது அமைந்துள்ளது.

போற்றி என நிறைவுறும் செய்யுள்கள் இந் நூலிலும் இடம் பெற்றுள்ளன. உதாரணம் :

ஆதிமெய்த் திருவாக்காய அகில காரணனே போற்றி
கோதிலாக் குணங்கள்பூத்த குவலயத் தொளியே போற்றி
பாதுவித்தாகி இந்த மாநிலம் புரப்பல் என்று
தாதைபால் பரிந்துநின்ற தற்பரா போற்றி போற்றி

கிறிஸ்தவர்களின் தேவாரம் எனச் சிறப்பிக்கப்படுகின்ற இந்நூல் தேவார ,பாசுரங்களின் செல்வாக்கிற்கு அதிகம் உட்பட்டுள்ளது. இது குறித்து A.V.S. ஐயர் பின்வருமாறு கூறுகின்றார்.

> "இரட்சணிய மனோகரப் பாடல்களில் இயேசுவைப் பற்றிப் பாடியிருக்கிறார் என்று ஒருவனுக்குச் சொல்லாவிட்டால், அவைகளைத் தேவாரப் பாடல் களாகவே அவன் கருதுவான். பாட்டுக்களின் பண்ணும் கட்டும் நன்றாய் அமைந்திருக்கின்றன. ஆசிரியர் மனங்கசிந்து பாடியிருக்கிறார் என்றும் வெறும் இமிடேஷன்கள்/போலிப் பாட்டுக்கள் இல்லை என்றும் அவை தெளிவாகக் காட்டுகின்றன."

இரட்சணிய மனோகரம் 293 ஆம் செய்யுளாக வரும் பின்வரும் செய்யுளை ஒத்த பல செய்யுள்கள் திருவாய்மொழிச் செய்யுள்கள் சிலவற்றை நினைவூட்டுகின்றன.

முத்திமா முதல்வன் என்கோ? மூலகாரணனாய் நின்ற
சத்துவம் என்கோ?லோக சரணியன் என்கோ? ஆன்ம
நித்திய ஜீவன் என்கோ? நெறிநின்றார் நினைவில் நிற்கும்
சத்தியம் என்கோ? யூதசாதி மாணிக்கத்தையே

(இர.மனோ.293)

திருவாய்மொழியில் இடம்பெறும் செய்யுள் வருமாறு :

புகழுநல் ஒருவன் என்கோ? பொருவில் சீர்ப்பூமி என்கோ?
திகழும் தண்பரவை என்கோ? தீ என்கோ? வாயு என்கோ?
நிகழும் ஆகாசம் என்கோ? நீள்சுடர் இரண்டும் என்கோ?
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ? கண்ணனைக் கூவுமாறே

(திருவா.மொ.3ம் பத்து: 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தில் வரும்

மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ?

(சிலம்பு.புகார்.மனை.ப.காதை.77-79)

என்பதனை இவை இயல்பாகவே நினைவூட்டுவது கவனிக்கத்தக்கது.

இரட்சணிய சமய நிர்ணயம் :

உரைநடையிலமைந்த இந்நூல், 1898 இல் வெளிவந்தது. உலகத்தில் வழங்கிவருகின்ற சமயங்களுள் ஆன்ம ஈடேற்றத்தை அருளத்தக்க மெய்யான மார்க்கம் எதுவென்று ஆராய்ச்சி செய்து தீர்மானிப்பதாதலின் இப் பெயர் கொண்டது என இந்நூலின் பெயர் குறித்து முகவுரையில் கிருஷ்ணபிள்ளை கூறுகிறார்.

சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்னும் சைவ சித்தாந்த நூல்களின் போக்கை இந்நூலிற் பெருமளவு காணலாம். சிவஞானபோதம் 12 சிறு சூத்திரங்களைக் கொண்டு சைவ மத அம்சங்களைக் கூறுவது போல இந்நூல் 10 செய்யுள்களைக் கொண்ட உண்மை வற்புறுத்தல் என்னும் பகுதியில் கிறிஸ்தவ மத அம்சங்களைச் சுருக்கமாகத் தருகின்றது.

சிவஞான சித்தியார் தன் காலத்து இதர மதங்களை ஆராய்ச்சி செய்து அவற்றின் குறைகளைக் காண்பித்துத் தன் மதமாகிய சைவ மார்க்கத்தின் தன்மையை விளக்கிக் காட்டுவதுபோல ஏனைய மதங்களின் குறைகளைக் காட்டி கிறிஸ்தவ மத அம்சங்களை இந் நூல் கூறுகிறது.இத்தகைய உத்தியினை அவர் கையாளுவதற்கு மேற்குறித்த சைவசித்தாந்த நூல் பெருமளவு உதவியிருப்பதனையும், அவர் அதில் ஆழ்ந்த ஈடுபாடுடையவராக இருந்திருக்கிறார் என்பதையும் அறியலாம்.

மதிப்பீடு :

H.A.கிருஷ்ணபிள்ளையின் இலக்கிய ஆக்கங்களைத் தொகுத்து நோக்கும் போது பக்தி இலக்கிய வளர்ச்சிக்குத் துணையாயும், தூணாயும் நின்ற சைவ, வைஷ்ணவ அடியார்களது புலமைச் சாயல் அவற்றிற் காணப்படுவதை மறுக்க முடியாது. அவர் வளர்ந்ததும், வளர்த்தெடுக்கப்பட்டதுமான சூழலை மத மாற்றம் பெற்ற பின்னர்கூட அவரால் புறந்தள்ளிவிட முடியவில்லை என்பதற்கான சான்றுகளாக அவர் பயன்படுத்திய வடிவங்கள் அமைந்திருக்கின்றன. சொல்லாட்சியும், அமைப்புமுறையும் கூட இந்து மத தேவார,பாசுரங்களின் உள்ளார்ந்த அனுபவ ஈடுபாட்டுடனான திளைப்பிலிருந்தே முகிழ்த்திருப்பதனையும் நுனித்துணர முடிகின்றது .கிறிஸ்தவமதக் கருத்துக்களும், புதிய உள்ளடக்கமுமே இவற்றிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. இதனால் தமிழில் கிறிஸ்தவ இலக்கியப் பாரம்பரியத்தில் புதிய வரவுகளுக்கு இவரது ஆக்கங்கள் காரணமாய் அமைந்திருப்பதனையும் மறுபுறமாகச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. போற்றித் திருவகவல், தேவாரங்கள் ஆகிய அம்சங்கள் ஊடாகக் கிறிஸ்தவக் கருத்துக்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கிய வடிவத்திற்கு அறிமுகம் செய்த வகையில் இவரது ஆக்கங்கள் முக்கியம் பெறுவதனையும் குறிப்பிடுவது பொருத்தமானது.

இவ்விதம் இந்து மதச் செல்வாக்கிற்குட்பட்டனவாக இவரது இலக்கிய ஆக்கங்கள் அமைந்திருப்பினும் உள்ளடக்க அம்சத்தைப் பொறுத்தவரை கிறிஸ்தவத்தின் விழுமிய கருத்துக்களை அவை தாங்கி நிற்பதையும், கிறிஸ்தவத்தின் அடிப்படை விசுவாசத்தினை வெளிப்படுத்தும் அதேவேளை அதற்கு அரணாகவும், செயற்படும் விதத்திலான செய்யுள்களையும் பெருமளவிற்குக் கொண்டிருப்பதையும் காணலாம்.

உசாத்துணை நூல்கள்

- ஜேக்கப் R.S. 1977 : 'கிறிஸ்தவக் கம்பன் கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவரானதேன்?' - சென்னை.
- கிரேஸ் செல்வராஜ் 1985 : 'வளரும் கிறிஸ்தவத்தில் மலரும் தமிழ்' – சென்னை.
- சுப்பிரமணிய ஐயர் A.V. : 1942 (ஓம் பதிப்பு) 'தற்காலத் தமிழ் இலக்கியம்' – சென்னை.
- வரதராசன் . மு. 1972 : 'தமிழ் இலக்கிய வரலாறு' – சென்னை.
- வேங்கடசாமி மயிலை சீனி : 1950 'கிறிஸ்தவமும் தமிழும்' சென்னை.
- கிறிஸ்தவ இலக்கியத் திரட்டு : 1955, கிறிஸ்தவ இலக்கிய சங்கம் – சென்னை.
- கிருஷ்ணபிள்ளை H.A. : (1884 – 1ம் ப) – 1931 (2ம் ப) 'இரட்சணிய யாத்திரிகம்', கிறிஸ்தவ இலக்கிய சங்கம் : சென்னை.
- கிருஷ்ணபிள்ளை H.A. : 1899 : 'இரட்சணிய மனோகரம்' கிறிஸ்தவ இலக்கிய சங்கம் – சென்னை.
- கிருஷ்ணபிள்ளை H.A. : 1898 : 'இரட்சணிய சமய நிர்ணயம்' கிறிஸ்தவ இலக்கிய சங்கம் – சென்னை.
- திருவாசகம்
- நாலாயிர திவ்ய பிரபந்தம்
- தேவார திருப்பதிகங்கள் (திரட்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Impact of industrial land use on the water quality of the Batticaloa lagoon

Dr.Miss.A.J.Thisairajah

1. Introduction :

The Batticaloa district is situated between the longitudes of 81^0 13' E and 81^0 49'E and the latitudes of $7^0$24' N and 8^0 15' N, covers an area of 2663.1 sq.km and it has inland water resources of about 229.2 sq.km. The land area of the Batticaloa district is about 3.8% of the total area of Sri Lanka. The boundaries of the district are the Verugal Aru in the North (Trincomalee), Polonnaruwa in the West, Amparai in the South and the Bay of Bengal in the East (Secretariat, Batticaloa district, 1998). The coastal low land of the Batticaloa district consists of bays and lagoons. In the southern part of the coastal land is a sand bar 35 km long extending northwards and at its widest part, its width is about 9 km. This sand bar forms the Batticaloa lagoon. Valaichchenai and Uppar (Panichchankerni) lagoons are situated north of the Batticaloa lagoon.

The Batticaloa lagoon is located between $7^0$25'34"-$7^0$46'22" northern latitudes and $81^0$34'05"-$81^0$49'05" eastern longitudes. That is, the lagoon is in the southern part of the Batticaloa district and its southern tip intrudes into the northern part of the Amparai district. This small portion in the Amparai district is only $1/7^{th}$ of its total length that is about 8 km in length. The area of the lagoon is about 1,418 hectares and it is about 56 km long from Eravur in the North to Natpiddimunai in the South. This lagoon is open to the sea in two places. One is at Palameenmadu and the other is at Koddaikkallar. During the dry season, the width of the mouth is about one meter and during the rainy season this expands to about 200 meters. With the outbreak of the southwest monsoon, more sand is deposited in the bar mouth and this causes the mouth to be closed. Later, with the beginning of the rainy season, i.e., with the outbreak of the northeast monsoon, the water level increases with the rainfall and is

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

guided by the slope of the land; water tends to run towards the sea. In a situation of this nature, in order to avoid flooding of the roadways, the Highways Department normally opens the mouths of the lagoon to allow the flow of water into the sea (Shanmugaratnam, N., 1995). But nowadays, for a small rain even defense forces who put up their camps along the lagoon, open the bar mouth to avoid the lagoon water penetrating into their camps.

2. History of industrial land use in the study area

In the study area, from ancient times people were engaged in trade and manufacture. People in ancient Tamil settlements at Thirukketheeswaram, Thirukkoneswaram and Thirukkovil were engaged in trade, agriculture and fisheries (Arasaratnam, S., 1964), the Tamil traders established temporary settlements in ports and major towns (Indrapala, K., 1969) and Arabian traders came and settled in Batticaloa by the 8th century A.D (Canagaratnam, S.O., 1921).

There were a considerable number of weavers at Koddaimunai, Kattankudi, Maruthamunai and Eravur and a very large number of looms were in operation in the manufacture of cotton goods for the Colombo and Galle markets. Some locally manufactured clothes were sent to the Imperial Institute, London during 1867. Brass household utensils and coarse pottery were manufactured in several parts of the study area mainly for local use. Grass mats were made mostly by moor women in Miravodai, Kattankudi, Maruthamunai, Sainthamaruthu, Kalmunai, Sammanthurai and Akkaraippattu. Drying fish was another industrial activity; mostly resorted to by Sinhalese fishermen. Later Tamils and Moors living along the coast encouraged by the Sinhalese example, followed suit. Considerable amount of fish was caught in the lagoons and estuaries of the study area (Canagaratnam, S.O., 1921).

3. Present status of industrial land use in the study area

A large number of industrial establishments are situated mainly in Batticaloa town and Kattankudy. All these are on a small scale except for the garment factories in Batticaloa town (Secretariat, 1997). The Table 1 shows the statistics of industries in the year 2000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Table 1

Industries in the study area

Industries	G.S Divisions									Total
	M.N	K.K	M.P	M.S. E.P	P.P	M. S. W	M.W	E.T	E.P	
Rice mills	20	6	9	26	90	70	75	19	19	334
Chillie grinding mills	7	8	0	5	0	0	0	0	0	20
Bakeries	23	18	7	6	4	4	2	16	3	83
Pappadam	0	0	0	0	0	0	0	1	0	3
Dried fish	0	0	0	0	0	0	0	0	4	4
Poultry mash	0	0	0	0	0	0	0	0	1	1
Ice-cream	2	8	0	0	0	0	0	3	1	14
Sewing	77	248	10	11	11	5	33	30	20	445
Garments	2	0	0	0	0	0	0	0	0	2
Shoe and other leather products	2	18	0	0	0	0	0	0	0	20
Jewellery	40	17	2	56	14	0	0	4	8	141
Brass and bronze wares	0	0	0	1	2	0	0	0	0	3
Handloom	11	4	21	5	3	1	0	0	1	46
Mat weaving	1	335	14	3	0	2	25	5	0	385
Palmyrah products	1	8	9	1	0	0	0	0	0	19
Coir products	2	0	36	0	0	0	1	0	3	42
Ekel broom	0	0	0	0	1	0	0	2	3	6
Pottery	0	0	0	3	0	0	0	75	2	80
Fiber glass boats	1	0	0	0	0	0	0	0	0	1
Brick	1	0	0	0	6	5	15	201	3	231
Stone	1	0	0	35	0	3	4	0	71	114
Cement blocks, grilles and vases	9	7	0	1	1	0	0	1	0	19
Concrete fence post	2	0	0	2	0	0	0	0	0	4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hume pipe	1	0	0	0	0	0	0	0	0	1
Lime kiln	3	0	11	12	0	0	0	0	0	26
Carpentry and Furniture and Fixture	10	27	1	67	1	1	6	9	20	143
Welding, Iron smiting and cane products	33	11	4	17	2	0	0	4	4	75
Cushion and upholstery works	4	4	0	0	0	0	0	1	0	9
Aluminium products	1	2	0	0	0	0	0	1	0	4
Lathe works	3	1	0	1	0	0	0	0	0	5
Picture framing	4	3	0	1	0	0	0	3		11
Cigar/ Beedi wrapping	0	0	0	0	0	0	0	2	1	3
Tooth powder	1	4	0	0	0	1	0	0	6	9
Face powder	0	1	0	0	0	0	0	0	0	1
Mosquito net	0	1	0	0	0	0	0	0	0	1
Rose water/ Oma water	1	1	0	0	0	0	0	1	0	3
Paper bag	0	7	0	0	0	0	0	1	0	8
Printing	8	0	0	0	0	0	0	1	0	9
Total	271	741	124	253	135	92	161	380	9164	2322

Source: District planning secretariat and District Statistical office, Batticaloa, (2000).

From Table 1, it is seen that industries flourish in Kattankudi and Eravur. These two areas are concentrated by Muslim population (Secretariat, 2000). Manmunai South West is in fourth place in industrial activities. Eighty percentage of rice mill, pappadam production, sewing, jewellery, mat weaving, palmyrah products, coir products, cane products, ekel broom, pottery, stone, carpentry and furniture and fixture, aluminium products, picture framing, cigar wrapping, tooth paste, face powder, mosquito net, rose water/oma water and paper bags are one - man (cottage) industries. Anchenaya and East Lanka Garment factories in Batticaloa are large-scale industries. Most of the brick making industries are done on a very small scale in remote areas (Secretariat, 2000). Prior to1990, a large paddy-milling complex was operated by the Paddy Marketing Board in Batticaloa. The factory had a production capacity of 4 MT/day (Secretariat, 1993).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In the southern part of the lagoon, in Navithanveli and Kalmunai Tamil & Muslim divisions, there are not many industries, like in the northern part of the study area. At Navithanveli, a handloom centre, a carpentry centre, a cadjan weaving centre and five poultry centres are the only industries along the lagoon, and at the Kalmunai Tamil and Muslim divisions, along the lagoon, 68 handloom weaving centres, 23 poultry centres, 20 carpentry centres, 4 Palmyrah centres, 2 mat-weaving centers and two coir centres are the only industries. These are functioning as cottage industries.

Another important industry along the Batticaloa lagoon is prawn farming. There are many suitable locations for prawn culture. Among 6,000 hectares of suitable locations for prawn culture in the lagoons of Sri Lanka, about 1500 hectares are in Batticaloa. In 1975, under the private entrepreneurship, prawn culture was undertaken in Puliyanthivu. This was profitable and in 1982, Seafoods Ltd, with the help of the World Bank, invested in the prawn farms at Mahiladithivu and Kokkaddichcholai. Even though this was successful and provided employment opportunity for many youngsters, they were abandoned due to the ethnic problems, in 1990 (CORD and Mandru, 1996). At present, prawn farms are functioning along Periyaurani and Thirupperunthurai. Most parts of the eastern coast of the lagoon are not suitable for agriculture as the salinity is higher than on the western side. More than fifteen thousand families depend solely on the lagoon for their livelihood and some fish in the lagoon during their leisure time. About nine thousand families are dependant on lagoons for their livelihood and among them; about 6500 families depend on the Batticaloa lagoon (CORD and Mandru, 1996).

4. Impact of industries on the water quality

Until very recently the methods of disposing of industrial wastes have not been properly planned. Laws and by-laws relating to pollution problems have not been well implemented. Liquid waste disposed directly to the surface drainage or the subsurface, lead to the pollution of surface and ground water (Mubarak, A.M., 2000).

In the study area, most rice mills are located in the Porathivu Pattu, Manmunai South West and Manmunai West. Out of the 362 mills in the Batticaloa District, 90 are in Porathivu Pattu, 75 are in Manmunai west and another 75 are in Manmunai South West Pattu. In Eravur Town, the rice mills are very close to the lagoon. As these industries are situated along the Batticaloa lagoon,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

wastes are disposed of directly into the lagoon, resulting in pollution. In Arayampathi, coconut husks are soaked in the lagoon for use in the coir industry. This affects the quality of the water in the lagoon and also allows the breeding of mosquitoes. The prawn farms at Periyaurani and Thirupperunthurai areas, contribute to the water pollution in the lagoon, by discharging untreated farm effluents. Untreated farm effluents lead to increased saltwater intrusion and increasing eutrophication in water sources, caused by the leaching of acidic substances during farm construction (Coast Conservation Department, Ministry of Fisheries and Aquatic Resources Development, 1997). The disposal of animal wastes from the slaughter-house at Periyaurani, pollutes the water and the obnoxious odour and the stagnation of black colour water deteriorates the aesthetic beauty of the lagoon.

4.1 Methodology

4.1.1 Objective : The objective of this study is to find how the land use along the Batticaloa lagoon affects the quality of water in the Batticaloa lagoon

4.1.2 Data collection :

In this study, primary data regarding land use, water quality,and economic activities of the local people was collected by field work, laboratory techniques, personal interviews and questionnaires. Secondary data was gathered from the Meteorological Department, the Survey Department, the Fisheries Department and the Department of Census and Statistics and books, magazines and reports. Four sample sites were selected, according to the land use distribution, to study the impact of industrial land use in the water of the Batticaloa lagoon. These places are Eravur town (L1), Periyaurani (L 2), Kattankudi (L 3) and Arayampathi (L4). The results of the analysis of physico-chemical parameters are discussed below.

Monthly water samples were collected between July 1997 and June 1998. Prior to this, a pilot study was carried out in May and June 1997 to determine the manner in which the water samples should be taken for this. pH, electrical conductivity, salinity and temperature were measured in the field, for once in each month, for a period of one year. pH measurements were made by using a Kent EIL7020 model pH meter. Electrical conductivity was measured by Griffin model Microprocessor LF196 conductometers. Salinity measurements were made by Microprocessor LF196 Salinometers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The calcium and magnesium contents, total hardness, the chloride, phosphate and sulphate and the biochemical oxygen demand were measured every four months during the period of the study. The alkalinity was measured twice in the study period. These tests were carried out with the help of the staff of the Chemistry Departments of the Faculty of Agriculture and the Faculty of Science, of The Eastern University; Sri Lanka.

4.2 Results and Discussion

4.2. 1 Colour

Along the Eravur town (L1), the colour of the sample water was yellow. This was due to the closeness of the rice mills to the lagoon and the accumulation of paddy husks in the lagoon. At Periyaurani (L2) and Kattankudi (L 3), the water appears black in colour. Most small-scale industries are along the lagoon at Kattankudi. Their wastes are dumped along the lagoon. At Arayampathi (L4) the colour of the sample water appears bluish green due to algae growth.

4.2.2 Odour

No odour was found in any of the water samples taken at these locations, except at Periyaurani (L5). The New Bridge (causeway) and the Vavunathivu Bridge (causeway) hinder the free flow of water. A slaughterhouse and prawn farms are close to this location (L5). The stagnated water with the effluents from prawn farms and animal wastes from the slaughterhouse create the obnoxious odour of the water samples taken at Periyaurani.

4.2.3 pH

The pH value ranges from 6.01 - 10.76. The highest value was recorded at Eravur (L1) in April 1998. Due to the accumulation of paddy husks, the water in the Eravur area is alkaline in nature. The lowest value (6.01) was recorded at Kattankudi (L3) in August 1997. Sri Lanka standards (SLS) for the tolerance limits for industrial and domestic effluents discharge into marine coastal areas for pH is from 6.0 to 8.5. But in all sites this level was exceeded in February and March 1998. This may be due to the dry weather conditions during this period. In April 1998, this further increased to 10.76, 10.3, 8.74 and 9.10 at Eravur (L1), Periyaurani (L2), Kattankudy (L3) and Arayampathy (L4) respectively. From May 1998, this value tended to decrease gradually, but not below 7.6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Fig 1

Among the industrial sites, Periyaurani had the steady high value ranging between 7.32 and 10.0 Figure 1) throughout the study period. The tolerance limit for fish is 6.0 –9.0 according to the CEA Quality Standards for different use classes of coastal waters in Sri Lanka (Benthem, W., 1994). It was observed that in this area, most people were engaged in prawn fishing. Many prawn farms are also constructed around this area

4.2.4 Biochemical oxygen demand

Recorded BOD values in the industrial locations range from 2.24 ppm to 131.84 ppm (Figure 2). A high BOD value (131.84 ppm) was recorded at Eravur (L1) in June 1998. The oxygen was fully utilized in the water sample collected at Eravur, when kept for 3 days in the dark for incubation. Paddy husks from the rice mills near Eravur (L1) may have activated the bacteria. The lowest value of 2.24 ppm was recorded at Arayampathi (L4). As L4 is a fishing and pearl fishing area, the water is always in flow when compared to Eravur. The BOD value was comparatively low (4.16-26.88 ppm) at Kattankudi (L3) throughout the study period in relation to the other industrial locations. Waste from sewing, shoe and other leather products, welding and iron products waste dumped along this site (L3). These industrial wastes might have affected the activities of micro-organisms. At Periyaurani (L2) the value is steadily high (14.72-103.36 ppm) throughout the study period. The animal wastes and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the effluents from the prawn farms might have increased the bacterial activity. The Sri Lankan Standard for the tolerance limit for industrial and domestic effluents discharge into the marine coastal areas for BOD is 100 ppm. At Eravur (L1) and Periyaurani (L2) this level has been exceeded in June 1998, according to the study.

In general the BOD values were low from September 1997 to March 1998 and they sharply increased toward June 1998. The high values were associated with dry weather conditions.



Fig 2

4.2.5 Electrical conductivity and salinity

Electrical conductivity in these industrial sites ranges between 2400 µs/cm-7600 µs/cm. When compared to the other locations (agricultural and settlement land use), the values of salinity and electrical conductivity were moderate in the industrial locations, Figure 3 and 4). These locations are not very close to the sea and not receiving any fresh water flow, in the immediate vicinity. At Eravur (L1) the salinity (02-15 ppt) and electrical conductivity (2400-50000 µs/cm) were comparatively lower than at the other industrial sites. This may be due to the long distance from the sea, when compared to Periyaurnai (L2), Kattankudi (L13) and Arayampathi (L4). At Periyaurani (L2) the salinity ranges from 04 ppt to30 ppt and electrical conductivity ranges from 11700 µs/cm to 72000 µs/cm. At Kattankudi (L3), salinity ranges from

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04 ppt- 27 ppt and electrical conductivity ranges from 6500-76500 µs/cm. At Arayampathi (L4), salinity ranges from 02 ppt –27 ppt and electrical conductivity ranges from 5000 µs/cm to 69000 µs/cm. Periyaurani (L2) is close to sea than Kattankudi (L3) and Arayampathi (L4); also the effluents from the prawn farmers and the slaughterhouse may have increased the salinity level of Periyaurani. In general the recorded values were high during dry weather conditions and low during wet weather conditions.



Fig 3



Fig 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2.6 Alkalinity

Alkalinity was moderate (1.0-2.4 meq/l) in these industrial locations (Figure.5). The industries located in these places are not large-scale industries. In all locations, methyl-orange alkalinity was higher in June 1998 than in March 1998. This was due to the dry weather in June 1998. Higher sewage and wastewater contamination increase alkalinity (Tripathi, A.K and Pandey, S.N., 1995).



Fig 5

4.2.7 Hardness

Total hardness ranges from 2000 ppm to 23000 ppm in these industrial locations (Figure 6). The lowest value was recorded at Kattankudi (L3) in December 1997 and the highest value was recorded at Eravur (L1) in June 1998. In general, at all locations, the values were low in December 1987 and high in June 1998. Lower values might be due to the northeast monsoonal rainfall. In June, even though the values of total hardness were high in all locations due to the dry weather conditions, at Periyaurani (L2) it was comparatively low (16000 ppm) than other locations (L1, L 3 & L 4). This may be due to the washing of clothes and bathing in other locations except at Periyaurani. Hardness by calcium and hardness by magnesium show the fluctuating tendency in all locations. Hardness by calcium was low in all the locations in September and December during the rainy season and higher in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

March and June, due to dry weather conditions. Hardness by magnesium was low at all locations (04-108 ppm). The value of hardness by calcium and magnesium was closer to the values of hardness by calcium.



Fig.6



Fig 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Fig 8



Fig 9

The values of chloride range between 499 ppm and 19399 ppm (Figure 10). The lowest value was recorded at Arayampathy (L 4) in December 1997 and the highest was recorded at Periyaurani (L 2) in June 1998. In all the locations, the chloride concentration was low in December 1997, due to heavy rains and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

it increased dramatically in March 1998, due to dry weather conditions and again slightly increased in June 1998. When compared to Eravur (725 ppm-4375 ppm), the values of Periyaurani (L2., 975-19399 ppm), Kattankudi (L3., 950-16374 ppm) and Arayampathi (L4.,499-17174 ppm) were high. This may be due to the close proximity of these locations to the sea than Eravur (L1).



Fig 10

4.2.9 Sulphate

The Sulphate values range from 41.440 ppm to 963.932 ppm. The lowest value was recorded at Eravur (L1) in December 1997 (Figure11). Here again, Kattankudi (L3) accounts for the higher values when compared to Periyaurani (L2) and Arayampathi (L4). This difference may be due to the distances to the sea. When part of the sulphates was reduced to sulphides, which dissociates in water gradually, a large amount of hydrogen sulphide was produced (Tripathi, A.K and Pandey, S. N, 1995). Contamination with sewage water may give the odour of hydrogen sulphide (Kumar, U and Kakrani, B.,2000). This odour was observed at Periyaurani.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Fig 11

4.2.10 Phosphate

The phosphate values range between 0.266 ppm to 2.250 ppm. The highest values were recorded at Eravur (L1) in December 1997 and the lowest value also was recorded at the same location, in June 1998. In general the higher values were observed during the rainy season in September and December 1997 and the lower values were observed during dry weather conditions in March and June 1998 (Figure 12). The high values at Eravur (L1, 2.250 ppm) and Periyaurani (L2, 1.33 ppm) may be due to bacterial action and contamination than in the other locations.



Fig 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In general, when compared the physico- chemical parameters of the water of the selected places of the Batticaloa lagoon with the Sri Lankan Standard and CEA standards for industrial and domestic effluents discharged into marine and coastal areas (Appendix 1), the temperature was within the accepted (26^0C-32^0C) level but not with the CEA standards for fish and prawns. pH values exceeded the accepted levels from February 1998 to June 1998, in most locations, except at Arayampathy (L4). pH value was suitable for bathing in most locations except at Periyaurani (L2) and Kattankudi (L3) from January 1998 to June 1998 and Eravur (L1) in April 1998. At Arayampathi (L4), pH value was within the accepted level (6.5-9.0) for non-consumption use in most locations except during the dry season from March to June 1998. For fish and prawns from March to June 1998, the pH value was not suitable in most locations except at Arayampathy (L 4), as the values exceeded the accepted value 8.5. In August 1997, at Eravur (L1, 6.2) and Kattankudy (L3, 6.01) the values were less than the accepted value 7.0. From June 1997 to February 1998, most locations were suitable for prawns, except at Kattankudi (L 3, 6.01) and Eravur (L1, 6.21), when the pH values were less than the accepted level (7.0) and from February 1998 to June 1998, when the pH values were more than the accepted level (8.5).

BOD value was within the accepted level in most locations except at Eravur (L1, 131.84 ppm) and Periyaurani (L2, 103.36 ppm) in June 1998. For the other parameters as the accepted levels for Sri Lankan Standards were not given, they were not compared and analysed. However, it was observed that the pollution levels exceeded during the dry season. The industries adjacent to the eastern coast of the lagoon must be shifted to a suitable location to reduce the pollution risk.

<u>Appendix 1</u>

Sri Lankan standards (SLS) and CEA Standards for industrial and domestic effluents discharged into marine and coastal areas and CEA Quality Standards for different use classes of coastal waters in Sri Lanka.

Properties	Batticaloa lagoon	SLS & CEA	CEA (1992) standards (should not be exceeded)		
			Fishery of fin fish	Fishery of shell fish	Non consumption use
Temperature	26^0C-32^0C	45^0C	$<32^0C$	$<32^0C$	$<32^0C$
pH range at ambient temperature	6.01- 10.76.	6.0-8.5	6.0-9.0	7.5-8.7	6.0-9.0
BOD (ppm)	2.24 - 131.84	100	$BOD_5<5$	$BOD_5<5$	$BOD_5<5$

(Benthem, W., 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

References:

01. Arasaratnam, S., (1964)., ***Ceylon.***, Prentice-Hall, Inc. Engle woods, New Jersey.

02. Benthem, W., (1994). ***Mundel Lake and Puttalam Corridor Channel***, Wetland Site Report and Conservation Management Plan, CEA (Sri Lanka) / Euro consult (The Netherlands)

03. Canagaratnam,S.O.,1921) ***Monograph of the Batticaloa District of the Eastern Province, Ceylon,*** H.R.Cottle, Government Printer, Ceylon

04. Coast Conservation Department., Ministry of Fisheries and Aquatic Resources Development., (1997). ***Revised Coastal Zone Management Plan***, New Secretariat, Maligawatha, Colombo-10.

05. CORD., Mandru., (1996). ***Master Plan For the Batticaloa lagoon***, DELEC, Batticaloa

06. Faber, H.A., Haffield, W.D., Mc Crady, M.H., Kline, E.K., (1955). ***Standard Methods for the Examination of water, sewage and industrial wastes***, Public Health Association, American Water Works Association, Federation of Sewage and Industrial Wastes Association, New York, U.S.A.

07. Indrapala,K.,(1969).,***Early Tamil Settlements in Ceylon,*** Journal of the Ceylon branch of the Royal Asiatic Society, The Colombo Apothecaries Company Limited, Colombo.

08. Kumar, U., Kakrani, B.,(2000), ***Water Environment and Pollution***, Agrobios, Jodhpur, India.

09. Mubarak, A.M., (2000). Water Pollution, ***Natural Resources of Sri Lanka,*** National Science Foundation, Sri Lanka.

10. Peter, V.W., (2000). ***Environmental Impact of Urban and Industrial Development, A Case History: Cancun, Quintana Roo, Mexico***., www.csiwisepractices.org.

11. Planning Secretariat., (2001). ***Statistical Information of the North East Province***, North-East Province, Trincomalee.,

12. Secretariat, (1993). ***Batticaloa Today – The Land of the Singing fish,*** Office of the Chief Secretary North – East Province; Trincomalee.

13. Secretariat, (1997). ***Statistical Handbook***, District Statistics Office and Planning Branch, Batticaloa.

14. Secretariat, (1998). ***Statistical Handbook***, District Statistics Office and Planning Branch, Batticaloa.

15. Secretariat, (2000). ***Statistical Handbook***, District Statistics Office and Planning Branch, Batticaloa.

16. Secretariat, (2001). ***Statistical Handbook***, District Statistics Office and Planning Branch, Batticaloa.

17. Shanmugaratnam, N., (1995). ***The Need for and steps towards a master Plan for Sustainable Utilisation of the Batticaloa Lagoon,*** NORAD; Agricultural University of Norway.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நீர் : மாசுபடுதலும் பயன்பாடும் பற்றாக்குறையும்

ம.வர்ணகுலசிங்கம்

புவியானது ஒரு வளம்மிக்க கோளமாகக் காணப்படுவதாலும் இவ் வளங்களைப் பயன்படுத்தும் மனிதனின் அறிவார்ந்த செயல்களினாலும் மனித வாழ்க்கை பல்வேறுபட்ட மாற்றங்களைக் கொண்டதாக காணப்பட்டுவருகின்றது. வளங்களில் நீர் மிகவும் முக்கியமானதாகவும், சிறப்புமிக்கதாகவும் காணப்படுகின்றது. இதனால்தான் வள்ளுவர் "நீரின்றி அமையாது உலகம்" என்று குறிப்பிடுகின்றார். எமது முதாதையர்கள் நீருக்கு ஒரு சிறப்பான மதிப்பினை அளித்து அதனை ஒரு புனிதப் பொருளாக்கினர். "தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே" என்ற பழமொழி மூலம் இதன் புனிதத்தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது. ஆனால் இன்றைய நிலையில் நீரின் முக்கியத்துவம், அதனைப் பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்ச்சி மிகவும் குறைந்து கொண்டு வருகின்றது. இன்றைய சூழலில் நிலவும் பொருளாதாரத்தின் அடிப்படையில் உருவாகும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் சுய மேம்பாட்டு வளர்ச்சியை நிறைவு செய்து கொள்வதற்கும் மிகவும் முனைப்புடன் செயற்படும் மனிதனிடம் பல சந்தர்ப்பங்களில், மனித இயல்பிற்கு எதிரான வகையில் உருவாகும் கருத்துக்களின் அடிப்படையில் வாழ்க்கையின் ஆழ்ந்த குறிக்கோள்கள், மதிப்புக்கள், மற்றும் பயன்கள் யாவையும் தவிர்த்து பொருளாதார இலாபத்திற்காக மட்டுமே சிறப்பாகச் செயற்படும் தன்மை காணப்படுவதால் மனிதன் "பொருளாதார மனிதன்" என்னும் சிறப்புப் பெயர் பெறுகின்றான்.

உலகின் மொத்தப்பரப்பளவு 57 கோடி சதுர கிலோ மீட்டராகும். இந்த அளவில் 36 கோடி 13 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு சமுத்திர நீர்ப்பரப்பாகவும், (63.2%) 4 கோடி 30 லட்சம் சதுரகிலோ மீட்டர் பரப்பளவு நன்னீராகவும், 16 கோடி 60 லட்சம் சதுரகிலோ மீட்டர் பரப்பளவு நிலமாகவும் காணப்படுகின்றது.

இன்று உலகில் உள்ள பெரும்பாலானவர்களால் ஒரு மாபெரும் பிரச்சினை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதும் பிரச்சினை காலதாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும் என உணரப்பட்டதுமான பிரச்சினை உலக சூழல் மாசுபடுவதாகும். மக்கள் உற்பத்தி செய்யும் குப்பை கூளங்களின் பெரும்பாரத்தினடியில் இந்த உலகம் வேதனைக்குரல் எழுப்புகின்றது. 3ஆம் மண்டல நாடுகளில் எவ்வளவு கழிவுப் பொருள் இருக்கின்றது என்பது தெரியாத புதிராக உள்ளது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் 29 உறுப்பு நாடுகளின் புள்ளிவிபரங்களை சேகரித்ததில் இருந்து சில திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. 1980-95 வரையிலான காலப்பகுதியில் நகராட்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவுகளின் அளவு 34.7 கோடி தொன்னில் இருந்து 48.4 கோடியாக உயர்ந்திருந்தது. இதில் அமெரிக்காவில் 23.8 கோடி தொன்னும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 நாடுகளில் 15.3 கோடி தொன்னும் காணப்பட்டன. இந்த நாடுகளின் தொழிற்துறையில் மட்டும் 1995 இல் 1500 கோடி தொன் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகின. பிரான்சில் ஆண்டு தோறும் 1700 கோடி பிளாஸ்ரிக்குகள் வீசி எறியப்படுகின்றன. 2 கோடி டயர்கள் எறியப்படுகின்றன. இந்த நாடுகளில் மறு சுழற்சி செய்வதற்காக 4 கோடி கழிவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

நீர் உருவாக்கம் :

புவியியலாளர்கள் புவியில், நீர் தோன்றிய விதம் பற்றி இரண்டு கருத்துக்களை முன்வைக்கின்றனர். புவித்தோற்ற காலத்தில் இக்கோளத்தில் நிகழ்ந்த பல்வேறு எரிமலைச் செயற்பாடுகளினால் வெளிப்பட்ட கைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன், வாயுக்களின் இணைவு நீராக மாற்றமடைந்தது என்று ஒரு கருத்தும், புவி வளிமண்டலத்துள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருந்த வால் நட்சத்திரங்கள் சுமந்து வந்த பனித்துகள்கள் ஆவியாகி குளிர்ந்து மழைநீராகி புவியில் சேர்ந்ததாக மறு கருத்தும் காணப்படுகின்றது. ஏனைய கோள்களிலும் இவ்வாறான செயற்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் அக்கோள்களுக்கெல்லாம் புவிக்குரியதாக காணப்படும் வளிமண்டலம் காணப்படாததால் அங்கு நீரும் காணப்படவில்லை. நீராவியைக் கவர்ந்து கொள்வதற்கும், அந்நீராவியின் பெரும்பாகங்களை திரவநிலையில் வைத்துக்கொள்வதற்கும் ஏற்ற தட்ப வெப்பநிலை வளிமண்டலத்தில் காணப்படுவதால்தான் புவி ஓர் நீர்க்கோளம் எனப் (Water planet) பெயர் பெறுகின்றது.

நீர் மாசடைதல் :

பெரும்பாலும் சூழல் மாசுபடுவதில் நீர் மாசுபடுதல் எந்த வகையிலும் இரண்டாம் இடத்திற்கு தள்ளிவிடக் கூடிய பிரச்சினை அல்ல என்பதில் இன்று புத்தி ஜீவிகளிடம் ஒரு முரண்பாடற்ற இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்று உலக ரீதியாக நீர் நிலைகள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட சவால்களுக்குமான முழுப்பொறுப்பையும் மனித நடவடிக்கைகளே ஏற்கவேண்டியுள்ளது. அறிவு வளர்ச்சி, அதன் பேறான அறிவியல் வளர்ச்சி, அதனைத் தொடர்ந்து கைத்தொழில், விவசாய, வர்த்தக வளர்ச்சிகள் உலக நீர்த் தேவையை பல ஆயிரம் மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளது. அத்துடன் மனிதர்களின் தூரநோக்கற்ற செயல்களினால் நீர் மாசுபடுத்தப்படும் வேகம் அதிகரித்தும் வருகின்றது. **உலக நீர் மாசுபடுத்தப்பட்டதால் மனித சமுதாயம் பாதிக்கப்படும் வரை அது தடுக்கப்பட வேண்டிய அவசியம் குறித்த ஆய்வுகள் தொடர்பாக எவரும் கவனம் செலுத்தவில்லை. "நீருக்கு என்ன துன்பம் வரப்போகின்றது. அதுதான் தேவையான அளவு கிடைக்கின்றதே" என்ற நினைப்பில் நீர் நிலைகளில் சிறுகச் சிறுக செலுத்திய அசுத்தப் பொருட்களால் இன்று சுத்தமான நீரை வழங்கிய பல நீர் நிலைகள் சாவுப்பகுதிகளாக மாறி வருகின்றன. மனிதர்கள் நீர் நிலைகளைக் கூட சாகடிக்கக் கூடியவர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நீர் மாசடைதல் பின்வரும் விடயங்களாலேயே அதிகம் ஏற்படுகின்றது.

01. விவசாய நிலத்திலிருந்து வெளியேறும் நீர் இரசாயன மாசுக்களை சுமந்து செல்வதால்
02. நகரங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர்
03. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர்
04. அணு, மற்றும் ஆற்றலை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் கழிவுகள்
05. கடல் மாசுக்கள்

உலகின் அணு ஆயுத உற்பத்தி நாடுகள் அமைதியாககவும் பாதுகாப்பாகவும் அணுசக்தியினைப் பயன்படுத்துவதாகக் கூறிக்கொண்டாலும், இந்நாடுகள் அணு ஆலைகளில் எழுகின்ற சாம்பலை (Radio- active ash) கடற்கரை ஓரங்களிலும் உப்புச் சதுப்பு நிலங்களிலும் கொட்டுகின்றன. இதனால் கடல் நீரின் தரம் குறைந்து, வெப்பம் அதிகரித்து மாசடைகின்றது. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் இருந்து ஆண்டொன்றுக்கு 200000 தொன் எடைக்குச் சமமான எண்ணெய் இழப்பும், அதன் ஒழுகல்களும் நீர் நிலைகளைச் சென்றடைகின்றன. மற்றும் உலக நாடுகள் தங்கள் அணுக்கழிவுகளை சர்வதேச கடற் பரப்புகளில் தள்ளி வருகின்றன.

இதைத்தவிர கடலில் மூழ்கிய கப்பல்களினாலும், கடலில் பயணம் செய்யும் கப்பல்களில் இருந்து கசிந்து ஒழுகும் எண்ணெய்க் கழிவுகளினாலும் நீர் நிலைகள் மாசுபடுகின்றன. விபத்துக்குள்ளாகி மூழ்கிய டைட்டானிக், 1978இல் மூழ்கிய டோரா கேணியான், அதே ஆண்டின் கடலில் மூழ்கிய அமோக்கோ காடிஸ் போன்ற கப்பல்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வாறு இடம்பெறும் சகல நிகழ்வுகளினாலும் ஆண்டு தோறும் 40 லட்சம் தொன் பெட்றோலியம் கடலில் கலக்கின்றது.

நீரின் சீரழிவு நிலத்தின் சீரழிவுக்கு காரணமாகின்றது. அசுத்த நீர் நிலைகளில் இருந்து ஊடுருவும் நீர் நிலத்தடி நீரினையும் மாசுபடுத்துகின்றது.

நீரின் அளவும் அதன் தரமும் :

இயற்கை நிலைமைகளின் கீழ் நீரை உருவாக்குததோ அல்லது அழித்து விடுவதோ சிரமமான ஒரு காரியமாகும். நீர் திண்ம வடிவிலும், திடப்பொருள் வடிவிலும், ஆவி வடிவிலும் அதன் மூன்று நிலைகளுக்கூடாக அதன் சமநிலையைப் பேணுகிறது. எதுவும் மேலதிகமாகப் பெறப்படுவதுமில்லை, இழக்கப்படுவதுமில்லை. உண்மையிலேயே பல கோடி வருடங்களுக்கு முன்னர் இப்பூமி உருவாகிய நிலையில் எவ்வளவு நீர் இருந்ததோ இன்றும் அனேகமாக அந்த அளவு நீரே இருந்து வருகின்றது. ஆனால் பலகோடி ஆண்டுகளாக நீரின் அளவில் மாற்றம் ஏற்படாத வண்ணம் இயற்கை செயற்பட்டுக்கொண்டிருக்க, சில நூறு ஆண்டுகளுக்குள் மனிதன் அதன் தரத்திலும், பாவனைக்குரிய நீரின் அளவிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டான். நீரின் பயன்பாட்டில் நல்லது அல்லது உகந்தது எனக் கருதாமல் நமது விருப்பம் போல் செயலாற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மை நம்மிடையே காணப்படுகின்றது. இவ்வாறான அக்கறை அற்ற போக்கு காணப்படுவதால் நீர் அசுத்தமடைந்து, மாசடைந்து வீணாகின்றது. இதனால் நீரின் அளவும் தரமும் விரைவாகக் குறைந்து வருகின்றது.

புவிமேற்பரப்பில் காணப்படும் நீரில் பெரும் பகுதி மனிதப் பயன்பாட்டிற்கு கிடைக்க முடியாதது. இது மொத்த நீரின் அளவில் 99% க்கு மேல் காணப்படுகின்றது. ஆக 1%க்கும் குறைவான அளவிலேயே நன் நீர் காணப்படுகின்றுது. இக் குறைவான அளவிலுள்ள நன்னீரினைப் பயன்படுத்துவதில் முழு உலக சமூகமுமே போட்டியிடுகின்றது.

உலக நீரின் அளவினை கனவளவு அடிப்படையிலும் நூற்றுவீத அடிப்படையிலும் நோக்கும் போது பின்வருமாறு காணப்படுகின்றது.

அட்டவணை - 1

உலக நீர் பரம்பலும் அளவும்

நீர் நிலைகள்	கொள்ளளவு க.கி. மீட்டரில்	நூற்றுவீதம்
சமுத்திரங்கள்	1380,000,000	97.350
பனிக்கட்டிகவிப்புக்கள்	29,000,000	2.045
நிலக்கீழ் நீர்	8,000,000	0.590
ஏரிகள்,ஆறுகள், குளங்கள்	200,000	0.014
வளிமண்டல ஈரப்பதன்	13,000	0.001
	1417,613,000	100.00

ஆதாரம் :- Hydrological models and Geography – by Rosemary J. More

மேற்காட்டப்பட்ட அட்டவணையிலிருந்து உவர் நீரைத் தவிர்த்து மீதியாகக் காணப்படும் 2.650% நீரினை நாம் 100% எனக் கொண்டு பிரித்து நோக்கினால் உலக நன்னீர்ப் பரம்பல் பின்வருமாறு அமைந்து காணப்படும்.

அட்டவணை - 2

உலக நன்னீர்

நன்னீர்	வீத அளவில்	
2.650'%	உறை நிலைப் பனி	75%
	தரைக் கீழ் நீர் 2500 அடிக்கு கீழ்	10.88%
	தரைக்கீழ் நீர் 2500-12500அடிவரை	13.965%
	ஆறுகள்	0.03%
	குளங்கள்	0.03%
	மண்ணீரம்	0.06%
	வளிமண்டல ஈரம்	0.035%
		100%

ஆதாரம் :- The World Hydrological Cycle – R.G. Barry

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டிய தகவல்களில் இருந்து உலக மொத்த நீரில் மனிதனின் நேரடியான பயன்பாட்டுக்கு ஆறுகள் குளங்கள் என்பனவற்றில் இருந்து எடுக்கக்கூடிய விதத்தில் 0.06% மட்டுமே காணப்படுகின்றது. நன்னீரில் 75% மனிதனால் பயன்படுத்த முடியாத பனிக்கட்டியாகவும் 24.845% இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாத தரை கீழ் நீராகவும், மண்ணின் ஈரப்பதனாக 0.006%மும், வளிமண்டல ஈரப்பதனாக 0.035%மும், காணப்படுகின்றது.

உறுதியான திடநிலையில் 75%ஆன நீர் பனிக்கட்டிகளாக அன்டாட்டிக்கா, கிறீன்லாந்து போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய துருவப் பகுதிகளில் பல்லாயிரம் மீட்டர் தடிப்புக்களில் உறைந்து காணப்படுகின்றது. சுமார் 29 மில்லியன் ச.கி.மீற்றர் நன்னீர் இவ்வாறு உறைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு மிகவும் குறைவான அளவில் காணப்படும் நன்னீர் பயன்பாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. சராசரியாக ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு குடிப்பதற்கு 5 லீட்டர் நீரும் சுகாதார வசதிகளுக்கு 25 லீட்டர் நீரும் தேவைப்படுகின்றது. அவ்வாறே கைத்தொழில் நடவடிக்கைகளின் போதும் அனேக நன்னீர் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக ஒரு காருக்கு வேண்டிய 4 டயர்களை உற்பத்தி செய்வதற்கு அண்ணளவாக 9400 லீட்டர் நீர் தேவைப்படுகின்றது. அவ்வாறே இந்த உலகிற்கு ஒரு நாளைக்கு வேண்டிய காகிதத்தை உற்பத்தி செய்வதற்கு 1400 கோடி லீட்டர் நீர் தேவைப்படுகின்றது.

இன்று உலகில் தனிநபர் நீர்ப்பயன்பாடு வருடத்திற்கு 710 க.மீட்டராக காணப்படுகின்றது. 1996 காலப்பகுதியில் எடுக்கப்பட்ட கணிப்பீட்டின்படி உலக மக்களின் வருடாந்த மொத்த நீர்ப்பயன்பாடு சுமார் 2600 க.கி. மீட்டராகக் காணப்பட்டது. இந்த அளவு 2001ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இரட்டிப்பை விட அதிகமாகலாம் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. நீர்த் தேவையின் அளவு அதிகரிக்கும் அதேவேளை பயன்பாட்டிற்குரியதாக காணப்படும் நன்னீரின் தரம் மறுபுறத்தில் குறைவடைந்து வருகின்றது. இதற்கான பிரதான காரணம் மனிதர்களின் பொருளாதார நடவடிக்கையே ஆகும். வளர்ந்துவரும் மக்கட்தொகை, விவசாய நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள், நகராக்கங்கள் போன்றவை அதிகரித்த நீர்த் தேவைக்கு காரணமாக இருப்பதுடன் அந்நீரின் தரத்தைக் குறைக்கும் காரணிகளாகவும் காணப்படுகின்றன. விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் பசளைகள், கிருமிநாசினிகள், களைகொல்லிகள் என்பனவும், நீர்ப்பாசன நடவடிக்கைகளின் போது இடம்பெறும் உப்புப் படிதல் செயற்பாடுகளும் நீரின் தரம் குறைவுபடுவதற்கு காரணியாக அமைகின்றது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் திடக்கழிவு, கன உலோகங்கள், கதிரியக்கப் பொருட்கள், நைதரேட், மற்றும் நுண்ணிய கனிம மாசுக்கள் ஆகியன நன்னீரின் தரத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. ஏரிகள், ஓடைகளில் நீர் அமிலத்தன்மையாதல் போன்றவற்றால் நீர்த் தரத்தில் பல வகையான சிக்கல்கள் உருவாகின்றன. உலக சுற்றுச் சூழல் கண்காணிப்பு கவுண்சில் (World Environmental Monitoring Council) சமீபத்தில் நிகழ்த்திய ஒரு "நன்னீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர மதிப்பீடு" உலகளவில் நீரின் தரம் குறைந்து வருவதையும், தொழில் வளர்ச்சியடைந்த ஒரு சில நாடுகளில் நீரின் தரம் உயர்ந்து வருவதையும் கண்டது. உலகளாவிய ரீதியில் நீருக்கு ஏற்பட்டு வரும் அதிகரித்த தேவையும் மறுபுறம் தரக்குறைவும் சேர்ந்து எதிர்காலத்தில் மிகப் பெரிய நீர்ப்பற்றாக்குறையை ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகளை உறுதி செய்வதாய் அமைந்துள்ளது.

உலக மக்களின் பயன்பாட்டிற்கான நீர் காணப்படும் ஆறுகள், ஏரிகள், குளங்கள் என்பவை "நன்னீரின் ஆதாரமாகவும்" அதேசமயம் குடியிருப்புக்களில் இருந்து வரும் கழிவுகளை ஏற்றுக் கொள்ளும் குப்பைத் தொட்டிகளாகவும் பயன்படுகின்றன. நீராடுதல், துணிதுவைத்தல், கழிப்பிடங்களாகப் பயன்படுத்துதல், விலங்குகளைக் கழுவுதல் போன்ற பல்வேறு வழிகளினால் இவை அசுத்தப்படுத்தப் படுகின்றன. இவ்வாறு அசுத்தப்படுத்தப்படும் நீர் நிலைகளில் தங்களுக்கு தேவையான நீரினைப் பெறும் மக்கள் பல்வேறுபட்ட தீய விளைவுகளுக்கு ஆளாகின்றனர். சுத்தமான நீர் கிடைக்காததால் ஆண்டு தோறும் 20 லட்சம் மக்கள் இறக்கின்றனர். இவ்வாறு நீர் மாசடைவதனால் உலகில் தினமும் 40000 குழந்தைகள் அசுத்த நீர் பாவனையால் இறப்பதாகவும் இலங்கையில் இது நாளுக்கு இரண்டாக காணப்படுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. அகில உலக சுகாதார இயக்கம் நீரினால் வருகின்ற அல்லது நீருடன் தொடர்புள்ள நோய்கள் தொடர்பாக விளக்கமான அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் இருந்து பெறப்பட்ட பின்வரும் அட்டவணை அசுத்த நீர் பயன்பாட்டினால் ஏற்படும் நோய்களையும் அதனால் உண்டாகும் தாக்கங்களையும் விளக்குகின்றது.

அட்டவணை - 3

அசுத்த நீர் பயன்பாட்டினால் ஏற்படும் நோய்களும் அதனால் உண்டாகும் தாக்கங்களும்

	நோய்வகை	தாக்கம்
01	**நீர் விருத்தி செய்யும் பூச்சிகளால் எழும் நோய்கள் :** மலேரியா, யானைக்கால் மற்றும் மஞ்சள் சுரம் போன்ற நோய்களை நுளம்புகளும், ஆற்றுக் குருடு நோயை கரும் ஈக்களும் (Black Flies) பரப்புகின்றன.	நுளம்பினால் பரவும் மலேரியா சராசரியாக ஆண்டு தோறும் 160 மில்லியன் மக்களைத் தாக்குகின்றது. ஒவ்வொரு வருடமும் சுமார் 800 மில்லியன் மக்களுக்கு இது பரவுகின்றது.
02	**கழிவு நீரினால் ஏற்படும் நோய்கள் :** சொறி, படைகள், தொழுநோய், கண்வலி போன்ற நோய்கள் தோலினையும் கண்களையும் தாக்குகின்றன. இவை தனிப்பட்ட மனிதனின் சுகாதாரத்திற்கு தேவையான நீர் பற்றாமையினால் பரவுகின்றன.	கண்ணிமை நோய் (Trachoma) என்பது கண்ணிமைகளின் உட்புறமாகப்பரவும் ஒரு தொற்று நோய். இதனால் பாதிக்கப்பட்டவர் கண்பார்வை இழக்கும் நிலை ஏற்படுகின்றது. உலகில் 500 மில்லியன் மக்கள் இந் நோயினால் அவதியுறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03	**நீர் சுமந்து வரும் நோய்கள் :** துணிகளைத் துவைத்தல், குளித்தல் போன்றவை இடம் பெறும் நீர் நிலைகளில் இருந்து நீரைக் குடிப்பதற்கு பயன்படுத்தினால் தைபோயிட், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் பரவுகின்றன.	வயிற்றுப் போக்கு ஒவ்வொருவருடமும் 6 மில்லியன் குழந்தைகளைக் கொல்கின்றது.
04	**சூழலை மாசுபடுத்துவதாலும் சுகாதாரமின்மையாலும் கொக்கில் புழுக்களால் வரும் நோய்கள்.**	கொக்கில் புழுக்கள் மனிதர்களின் கால் வழியாக மனித உடலில் நுழைகின்றன. இது பெரும்பாலும் குழந்தைகளின் இறப்புக்கு காரணமாகின்றது. ஆண்டு தோறும் 15 மில்லியன் குழந்தைகள் இந்நோயின் தாக்கத்தால் இறக்கின்றனர்.
05	**நீரில் வாழும் எலும்பில்லாத உயிரினங்களால் பரவும் நோய்கள் :** நத்தைகளாலும் நீர்ப்பூச்சிகளாலும் வயிற்றுப் புழு நோய்கள் பரவுகின்றன.	வயிற்றுப்புழு நோயினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தமது வாழ் நாளில் சுமார் 600-1000 வேலை நாட்களை இழக்க நேரிடும்.

உலக நாடுகளிடையே பயன்படுத்தப்படும் நீரின் அளவை நோக்கும் போது வளர்ந்துவிட்ட நாடுகளில் 10 பேருக்கு 9 பேர் வேண்டிய அளவிற்கு மேல் சுத்தமான நீரினையும் வளரும் நாடுகளில் 5 பேருக்கு 2 பேர் மட்டுமே சுத்தமான நீரினையும் பெறுகின்றனர். வளரும் நிலையில் உள்ள சனத்தொகைக்கு சுத்தமான நீரினை அளிப்பது இன்று உலகம் எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. 1993இல் உலக நீர்த்தேவையினைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக கனிம நீர் என்ற பெயரில் போத்தலில் அடைக்கப்பட்ட நீராக 4643 கோடி லீட்டர் நீர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த அளவு 1997இல் 5829 கோடி லீட்டராக அதிகரித்திருந்தது.

நீர்ப் பற்றாக்குறை:

மக்கட் தொகை அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் காரணமாக உலகளவில் நீர்த்தேவை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. மனித இனத்துக்குப் பயன்படுத்தக்கூடிய நன்னீர் வரையறைக்குட்பட்டது. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அதிகரித்து வந்துள்ள நீர்ப்பற்றாக்குறை இந்த நூற்றாண்டின் பெரும் சிக்கலாக மாறியுள்ளது. நீர்ப்பற்றாக்குறைக்கு அதிகரித்த மக்கள் தொகை காரணமாகத் தெரிந்தாலும் நீர் நிலைகளின் பரம்பலும் இதற்கு ஒரு காரணமாக விளங்குகின்றது. ஏனைய இயற்கை வளங்களைப் போன்றே நீரின் சமச்சீரற்ற பரம்பலும் பற்றாக்குறைக்கு காரணமாகின்றது. உலகின் சில பகுதிகளில் அதிக வெள்ளத்தால் காலம் முழுவதும் மக்கள் போராடும் நிலை காணப்பட இன்னும் சில பகுதிகளில் வரட்சியால் மக்கள் அவதியுறுகின்றனர். 1990-1995 இல் உலக நீர்த்தேவை 6 மடங்கு அதிகரித்துள்ளது. அதே சமயம் உலக மக்கள் தொகை 3 மடங்கு மட்டுமே உயர்ந்துள்ளது. கையிருப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் நன்னீரின் அளவில் பயன்படு அளவிற்கும் சனத்தொகைக்குமிடையேயான தொடர்பினைப் பார்த்தால் இருப்பு நீர் போதுமானதாகத் தோன்றினாலும் உலகின் மிகவும் வரண்ட பகுதிகளில் சுமார் 46 கோடி மக்கள் (உலக மக்களில் 8%) குடி நீர்ப்பற்றாக் குறையினால் அல்லலுறுகின்றனர். உலக மக்களில் மேலும் 25%மானோர் குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர். இதற்கு மாற்று நடவடிக்கை காணப்படாவிட்டால் 2025 இல் உலக மக்களில் 2/3 பகுதியினர் பெரும் குடிநீர்ப் பற்றாக்குறையால் அல்லற்படுவார்கள் என நீரியல் வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர்.

குடிநீர்ப்பற்றாக் குறைக்கு மிக முக்கிய காரணமாக சனத்தொகை வளர்ச்சிக்கு அடுத்ததாக நகர வளர்ச்சி, மற்றும் தொழிற் துறைகளின் விருத்தி என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்தியாவில் டில்லி, மும்பாய், கல்கத்தா மற்றும் சென்னை போன்ற பகுதிகளில் குடி நீருக்கான பற்றாக்குறை அடிக்கடி ஏற்படுகின்றது. இப்பற்றாக்குறையை சமாளிப்பதற்காக பல மில்லின் ரூபாய்களை அரசுகள் செலவிட வேண்டியுள்ளது. உதாரணமாக ஆண்டு ஒன்றுக்கு சென்னை நகரப்பகுதியில் ஏற்படும் நீர்ப்பற்றாக் குறையைச் சமாளிப்பதற்காக புகையிரதங்களிலும், லாறிகளிலும் தொலைவுகளில் இருந்து நீரைக் கொண்டுவருவதற்காக மட்டும் 1995 காலப்பகுதியில் 1000 மில்லியன் இந்தியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இது இலங்கை மதிப்பின்படி 170 கோடி ரூபாய்களாகும். இந்தியாவில் உள்ள ஒரு நகரத்துக்கு ஏற்பட்ட செலவு மாத்திரமே இது.

உலகில் நீர் கிடைக்கபெறும் அளவைக் கொண்டு நாடுகளை இருவகையாக நோக்கலாம். இந்த வகையில் நன்னீர் அதிகமாகக் கிடைக்கும் நாடுகளாக கனடா, ஐரோப்பாவின் பெரும் பகுதி, மேற்கு ஆசியா, தென் அமெரிக்காவின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் போன்றவையும் நன்னீர் குறைவாக கிடைக்கும் நாடுகளாக ஆபிரிக்காவின் பெரும்பகுதி, மத்திய கிழக்கு நாடுகள், அவுஸ்திரேலியாவின் தென் மற்றும் மேற்குப் பகுதிகள் என்பவற்றையும் குறிப்பிடலாம். நீர்வளம் குறைவாக உள்ள சிலபிரதேசங்களில் குடிநீரைப் பெறுவதற்காக 10-15 கிலோ மீற்றர்வரை நடக்க வேண்டியும் உள்ளது.

உலகளாவிய ரீதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில்தான் மிகவும் உயர்ந்த நிலையில் நீர் வினியோகம் (Water Supply) இடம் பெறுகின்றது. அதிகளவான நீர் இங்கு தொழில்களுக்காகவே பயன்படுகின்றது. இந்நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் நான்கில் ஒரு பகுதியே வினியோகிக்கப்படுகின்றது. இதிலும் பெரும்பகுதி விவசாயத்திற்கு பயன்படுகின்றது.

நன்னீர் உபயோகம் கடந்த 10 ஆண்டுகளில் எந்தளவுக்கு அதிகரித்துள்ளது என்பதை கீழ்வரும் அட்டவணை மூலம் விளங்கிக் கொள்ளலாம். கைத்தொழில் நடவடிக்கைகளின் போதே அதிக நீர் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அதிகரித்த வீதளவு நன்கு விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 4

உலக நீர் பயன்பாட்டின் அதிகரிப்பு வீதம் 1990 - 2000

	1990 (000 கியூபிக்)	2000 (000 கியூபிக்)	அதிகரிப்பு வீதம்
மக்கள் தேவை	20	440	22%
கைத்தொழில்	30	1900	63.3%
விவசாயம்	350	3400	09.7%

நீர்த் தேவையானது மனிதர்கள் வாழும் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப மாறுபடுகின்றது. நியூயோர்க் போன்ற பகுதிகளில் வாழும் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 300 லீட்டர் நீரும், நைஜீரியா போன்ற பகுதிகளில் வாழும் ஒரு நபருக்கு 125 லீட்டரும், இலங்கையில் ஒருவருக்கு 135 லீட்டரும், ஆபிரிக்காவில் 20 லீட்டர் நீரும் சராசரியாக தேவைப்படுகின்றது. இந்த அளவு அப்பிரதேசங்களில் நீர் கிடைக்கப்பெறும் அளவில் தங்கியுள்ளது. நீர் பற்றாக்குறையாகக் காணப்படும் சில நாடுகளில் மனிதனால் தனது அன்றாட தேவைகளைக் கூட சமாளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு ஏற்படும் நீர்ப்பற்றாக் குறையே நீரின் தரம் குறைவதற்கும் காரணமாக அமைகின்றது. மனிதனது கண்மூடித்தனமான செயற்பாடுகளினாலும் திட்டமிடப்படாத நடவடிக்கைகளாலும் நீர் மாசடைதலுக்குட்படுகின்றது. நீர் இயற்கையாகவே தன்னைத்தானே சுத்திகரித்துக் கொள்ளும் இயல்புடையது. இதனை நீரின் சுய சுத்திகரிப்பு என்கின்றோம். இந்த சுய சுத்திகரிப்புச் செயல் முறை நீரில் கலக்கப்படும் அசுத்தப் பொருட்களின் அளவினாலும் நீரின் தன்மையினாலும் கட்டுப்படுத்தப்படும். அசுத்தப் பொருட்களின் கலவையின் அளவு ஒரு குறிப்பிட்ட கனவளவு நீரின் சுய சுத்திகரிப்பு திறனை விஞ்சுமாயின் நீர் மாசடையும் சாதாரணமாக பூமியின் நீர் வள ஆதாரங்களை முழுமையாகப் புதுப்பிக்க பல்வேறுமட்ட கால அளவுகள் தேவைப்படுகின்றன. நீரின் வகை பொறுத்து வேறுபடும் இத்தன்மையினை கீழ் வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை - 5

பூமியின் நீர்வள ஆதாரங்கள் முழுமையாகப் புதுப்பிக்கப்படும் கால அளவு

நீரின் வகை	புதுப்பிக்கும் கால அளவு
உயிரியல் நீர்	பல மணி நேரம்
வாயு மண்டல நீர்	08 நாட்கள்
ஆற்றுக் கால்வாய் நீர்	16 நாட்கள்
மண்ணீரம்	01 ஆண்டு
சதுப்பு நீர்	05 அண்டுகள்
ஏரிகளின் நீர்த் தேக்கம்	17 ஆண்டுகள்
தரைகீழ் நீர்	1400 ஆண்டுகள்
மலைப்பனியாறுகள்	1600 ஆண்டுகள்
உலக மாகடல்கள்	2500 ஆண்டுகள்
துருவப்பனிக்கட்டிப் பாளங்கள்	9700 ஆண்டுகள்

ஆதாரம் :- யுனஸ்கோ கூரியர் April 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக உருவாக்க முடியாததும் குறுகிய காலத்தில் புதுப்பிக்க முடியாததும், இன்னும் பல கோடி ஆண்டுகளுக்கு நிலைத்திருக்க வேண்டியதுமான நீர் நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகக் காணப்படுகின்றது.

அண்மைக்காலமாக நீர் நிலைகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு சட்டங்கள் சர்வதேச ரீதியில் ஏற்படுத்தப்பட்டிருப்பினும், அச்சட்ட திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில் உலக நீரியல் பாதுகாப்பு அமைப்புக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றன. பொருளாதார ரீதியாக வறிய நிலையில் உள்ள நாடுகள் தங்களது தொழிற்சாலைகளிலும், விவசாய நிலங்களிலும், நகரங்களிலும் இருந்து வெளியேறும் நீரில் இருந்து அசுத்தப் பொருட்களை சுத்திகரித்து எடுப்பதில் செலவிட வேண்டிய நிதி ரீதியாக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. உலகின் பல்வேறுபட்ட நாடுகளிலும், நீரில் அசுத்தப் பொருட்கள் கலப்பதைத் தவிர்ப்பதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கைத்தொழில் விருத்தியிலும் விவசாய நடவடிக்கையிலும் தாக்கங்களை உண்டுபண்ணாத விதத்தில் இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல நடைமுறைச் சிக்கல் உள்ளதை உணர முடிகின்றது.

எவ்வாறாயினும் உலக நீர் பரம்பல், பயன்பாடு, பற்றாக்குறை, என்பவற்றைக் கவனத்திற் கொண்டு நீர் வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவதற்கும், அதனைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது, காலம் தாழ்த்தப்பட முடியாத கட்டாய தேவையாகும். நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்படும் பட்சத்தில் 2025ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் உலக சனத்தொகை அளவு, உணவுத்தேவை, மற்றும் நீர்த்தேவை என்பவற்றினை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளின் நிமித்தம் **"நீருக்கான ஒரு போர்"** உலக நாடுகளிடையே ஏற்படும் என்பது மறைக்க முடியாத உண்மையாகக் காணப்படும்.

அன்றாட வாழ்வில் அதிகமாக நீரினைப்பயன்படுத்தும் எம்மிடம் நீரைப்பற்றிய கருத்துக்கள் எத்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது? நீருக்கும், மேலே கூறப்பட்டுள்ள சில கருத்துக்களுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும். நீரைப் பொறுத்தவரையில் ஒரு பொருளாதார எண்ணம் பரவலாகவே எம்மிடம் நிலவுகின்றது. அதாவது, நீர் மலிவாகவும், அல்லது தாராளமாகவும் கிடைக்கின்றது என்ற நினைப்பேயாகும்.

உண்மையில் நீர் ஒரு பொருளாதார வளம் மட்டுமல்ல அது எமது வாழ்வு. ஆகவே நீர்ப் பயன்பாட்டில் சுயநலம் மற்றும் தனிமனித திருப்தி ஆகிய குறுகிய நோக்கங்களுக்கு இடமளியாது எமது எதிர்கால சந்ததியினரும் பயன் பெறத்தக்க வகையில் பேணிப்பாதுகாக்க வேண்டும். அதன் தரமும், பராமரிக்கப்பட வேண்டும். இவ்விரு கருத்துக்களின் அடிப்படையில் மனிதன் செயற்படுவானாயின் நீர் எக் காலத்திலும் ஒரு பேண்தகு வளமாக அமையக்கூடிய வாய்ப்புக்களை அதிகரிக்கலாம். புவியின் இரத்த நாளமாகக் காணப்படும் நீர் பாதுகாக்கப்படுவதற்கும், அதன் நீடித்த பயன்பாட்டிற்கும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் காலதாமதமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நிமிடமும் புவியின் உறுதியான உயிரோட்டத்திலும் தாக்கங்கள் ஏற்படும். இது இயற்கைச் சூழலிலும் அதன் சமநிலைத் தன்மையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

மனிதரதும் ஏனைய ஜீவராசிகளினதும் உயிர் வாழ்வினைச் சாத்தியமாக்குகின்ற இயற்கை வளங்கள் தொடர்ந்தும் நிலைத்திருக்க வேண்டுமாயின் வழமையான வளர்ச்சி முறைகளில் விரும்பத் தகுந்த மாற்றங்கள் ஏற்படுவது இன்றியமையாதது. ஆகவே இயற்கைச் சூழலை ஒரு இயந்திரத்தைப் போல் அதனை பாகங்களாகக் கழற்றவும் கழற்றிய பாகங்களை மீண்டும் பொருத்தவும் அவ்வாறு பொருத்தும் போது புதிய பாகங்களை பிரதியீடு செய்யவும் முடியும் எனவும் கருதக் கூடாது. எனவே இயற்கைச் சூழலை அதன் இயல்பான வழிகளிலும் இயல்பான வேகத்திலும் மட்டுமே மாற்ற வேண்டும் என்ற பொதுவான விதியினை எல்லோரும் பின் பற்ற வேண்டும். நீர் வளம் தொடர்பிலும் இது பொருந்தும்.

உசாத்துணை நூல்கள் :

01. யுனஸ்கோ கூரியர், ஏப்பிரல் 1999. "உலக நீர்ச் சமநிலை மற்றும் பூமியின் நீர் வள ஆதாரங்கள்" ஜிட்ரோ மெட்டி பேயாய்ஸ்டெல், லெனின்கிராட் - 1974 பக் - 20.

02. யுனஸ்கோ கூரியர், ஏப்ரல் 1999 "நீருக்கு என்ன விலை" (பக்கில் பல்கலைக்கழக பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் கனடா மினிசோட்டா, அமெரிக்கா - பக். 20)

03. இலங்கை மத்திய வங்கி, 1998 –"சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம்" – கொழும்பு. பக்- 129-131

04. அன்ரனி நோபேட் S. 1996 "உலக மீன்பிடி பரம்பலும் பாங்குகளும்", மார்க்கம் - மலர் 2 இதழ் 4, கொழும்பு.

05. ரூபமூர்த்தி. K. 1991 "உலக மீன்வளமீளாய்வு" யாழ்ப்பாணப் புவியியலாளன், யாழ்ப்பாணம்.

06. ரூபமூர்த்தி. K. 1987, "யாழ்ப்பாண கடலோரப் பகுதியின் மீன்பிடித் தொழில்" யாழ்ப்பாணப் புவியியலாளன், இதழ் 4, யாழ்ப்பாணம்.

07. சூசை, A.S, நந்தகுமாரன். இ. 1990 "மீன்பிடிப் பொருளியலும் வருமானச் செலவு ஆய்வும்", யாழ்ப்பாணப் புவியியலாளன், இதழ், 6,7,8, யாழ்ப்பாணம்.

08. ரூக்குமணி. தி., சரஸ்வதி. N, 1995, புவியியல் மேல்நிலை முதலாம் ஆண்டு தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை.

09. ரூக்குமணி. தி., சரஸ்வதி. N, 1996, புவியியல் மேல்நிலை இரண்டாம் ஆண்டு தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை.

10. யுனஸ்கோ கூரியர் மார்ச்- 2000, "ஏரல் கடல் அழிவில் இருந்து மீட்டல்"

11. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி செப்டம்பர் 1997, "நீரியல் வளங்கள் - அபிவிருத்தி" கொழும்பு.

12. Rosemary J. More, 1987, Hydrological models and Geography , United States.

13. R.G. Barry, 1984 The World Hydrological cycle, London

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் பார்வையில்
முஸ்லிம் - முஸ்லிமல்லாதோர் தொடர்புகள்

ஏ.ஜாஃபர் ஹூஸைன்

இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமாகும். அதன் போதனைகள் மனிதனை நேசிப்பதற்கான அழகான வழிகாட்டல்களைத் தருகின்றன. மனிதர்கள் மத்தியில் மனிதன் என்ற பண்பைக் காணவே இஸ்லாம் விளைகிறது. தனி மனிதர்களிடம் கண்ணியம், கீழ்த்தரமான உணர்வுகளின் மீதான ஆதிக்கம், வீரம், உளத்தூய்மை போன்ற பண்புகள் உருவாகுவதோடு சமூக உறவுகளின் போது பரஸ்பர உதவி, தியாகம், பொது நலன், அன்பு இரக்கம், வாய்மை, குரோதமின்மை, வாக்கு மாறாமை போன்ற இலட்சணங்களும் பேணப்படவேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இந்தவகையில், முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாதோருக்குமிடையிலான உறவுகள், தொடர்புகள் பற்றிய இஸ்லாத்தின் போதனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இஸ்லாம் மனிதனின் தோற்றம் பற்றியும் அவனது வாழ்வு, பணிகள் பற்றியும் தெளிவான சிந்தனைகளை முன்வைத்து பூமியில் மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்திச் செல்கிறது. இரத்த உறவினால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் பிணைக்கப்பட்டிருப்பதாகக் கருதும் இஸ்லாம் அவனை மதம், இனம், மொழி, நிறம், நாடு என்பவற்றை வைத்து கூறு போட முனைவதில்லை. அவன் எந்த மதத்தவனாக இருந்தாலும் அவனது வாழ்வுரிமை, பொருளாதார உரிமை, கருத்துச் சுதந்திரம், அவனது மானம், கண்ணியம் ஆகியவற்றின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கிறது. சட்டத்தின் முன் சகலரையும் சமமாகவே கருதுகின்றது.

மனிதனின் தோற்றம் பற்றி அல்குர்ஆன் முன்வைக்கும் கருத்து இன ரீதியிலான சிந்தனையை வேரோடு களைந்து விடுகின்றது.

“மனிதர்களே, நிச்சயமாக நாம் உங்களை ஒரே ஆணிலிருந்தும், பெண்ணிலிருந்தும் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்'' (49 : 13) என்ற இறைவசனம் மனிதர்கள் இயல்பாகவே ஆண், பெண் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டிருப்பது போல கோத்திரங்களாகவும் கிளைகளாகவும் பிரிக்கப்பட்டிருப்பது ஒருவரையொருவர் புரிந்து வாழ வேண்டும் என்பதற்காகவே என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கருத்துக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் "மனிதர்களே உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்த உங்கள் இரட்சகனைப் பயந்து கொள்ளுங்கள்" (04:01) என்ற இறைவசனம் அமைந்திருக்கிறது.

மேற்படி இரு வசனங்களிலும் மனிதர்களே என பொதுவாகவே மனித சமூகம் விளிக்கப்பட்டிருப்பது இஸ்லாத்தில் மனித சகோதரத்துவத்திற்குள்ள பெறுமானத்தை எடுத்துக் காட்டுகின்றது.

தாம் விரும்பிய ஒரு சிந்தனையை, மார்க்கத்தை ஏற்றுக் கொள்வது, பின்பற்றுவதற்குரிய உரிமையை இஸ்லாம் ஒவ்வொரு மனிதனுக்கும் பூரணமாக வழங்கியுள்ளது. முஸ்லிம் அல்லாத ஒருவரைப் பார்த்து, 'நீ இஸ்லாத்தைக் கட்டாயம் ஏற்றுக் கொள்' என வற்புறுத்தவோ நிர்ப்பந்திக்கவோ முடியாது. இது முஸ்லிம் அல்லாதவர்களின் மத சுதந்திரத்தின் பாற்பட்ட விடயமாகும்.

"மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமும் இல்லை" (2:256)

"நபியே, நீர் கூறும் (முற்றிலும்) உண்மையான இவ்வேதமானது இறைவனால் அருளப்பட்டதாகும். விரும்பியவர் இதை விசுவாசிக்கலாம். விரும்பாதவர் நிராகரித்து விடலாம். (18 : 29) போன்ற வசனங்களின் மூலம் அல்குர்ஆன் மதப் பன்மைத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றது. யூதர்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களது ஆட்சியில் பூரண மத சுதந்திரத்தை அனுபவித்தமைக்கு இஸ்லாமிய வரலாற்றில் நிறைய சான்றுகள் உள்ளன.

நஜ்ரான் தேசத்திலிருந்து நபி (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்த கிறிஸ்தவ தூதுக் குழுவினர் மதீனா பள்ளிவாயலில் நபியவர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் தமது வணக்கத்திற்கான நேரமானதும் மதீனா பள்ளிவாயலில் தமது வணக்கத்தை நிறைவேற்ற முற்பட்ட போது நாயகத் தோழர்கள் அவர்களைத் தடுக்க முற்பட்டனர். எனினும் தமது தோழர்களைத் தடுத்து நிறுத்திய நபி (ஸல்) அவர்கள் கிறிஸ்தவத் தூதுக்குழுவினர் தமது வணக்கத்தை நிறைவேற்றுவதற்கான அனுமதியை வழங்கினார்கள்.

ஒரு முஸ்லிம் பிற மதத்தவர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்கு அவர்களுக்கிடையிலான இன, மத பேதங்கள் எவ்வகையிலும் தடையாக அமையக் கூடாது. பொதுவாக மனிதன் எம் மதத்தைச் சார்ந்தவனாக இருந்த போதிலும் அல்லாஹ் அவனை ஏனைய படைப்புகளை விட கண்ணியப்படுத்தியுள்ளான். "நிச்சயமாக நாம் ஆதமின் சந்ததியினரைக் கண்ணியப்படுத்தினோம்" (17 : 70) என்ற இறை மறை வசனம் சாதி, மத பேதமின்றி மனிதன் மனிதனாக மதிக்கப்பட்டு, அவனுக்குரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வாழும் நாடு பல்லின, பல மத சமூகங்களைக் கொண்ட நாடு என்பதால் எமது அண்டை அயலவர்கள் பிற மதத்தவர்களாக இருப்பதற்கான சாத்தியங்கள் அதிகமாகும். எனவே, அவர்களுடன் மத சகிப்புத் தன்மை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தாராளத் தன்மை போன்ற உயர்ந்த குணங்களுடன் நடந்து கொள்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். தேவைகளின் போது உதவுவது, நோய்வாய்ப்பட்டால் சேமம் விசாரிப்பது, மரணச் சடங்குகளில் கலந்து கொள்வது, அவர்களது மத உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது, அவர்களுடன் இங்கிதமாகப் பேசி அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்துவது, அவர்களுக்கு சன்மானங்கள் வழங்கி மகிழ்விப்பது, அவர்கள் எம்மிடம் வரும் போது கௌரவமாக வரவேற்று உபசரிப்பது, உலக விவகாரங்களில் ஆலோசனைகள வழங்கி உதவி செய்வது, அவர்களது தனிப்பட்ட இரகசியங்களைப் பாதுகாப்பது, அவர்களுக்கு நேரும் தீங்குகள், துன்பங்களைத் தடுப்பதில் உதவுவது, போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளை அவர்களுக்கு நாம் புரியும் நன்மைகளுக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

பிற மதத்தைச் சார்ந்தவர்கள் நோய் வாய்ப்பட்டால் அவர்களிடம் சென்று சேமம் விசாரிப்பவர்களாக இருந்த நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை ஒரு யூதரை நோய் விசாரிக்கச் சென்றமையை இஸ்லாமிய வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது.

நபியவர்களது மதீனாக் காலப் பிரிவில் மக்காவில் கடும் வரட்சி, பஞ்சம் என்பன ஏற்பட்ட போது அங்குள்ள ஏழை எளியவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கென நபியவர்கள் ஒரு தொகைப் பணத்தை அங்கு அனுப்பி வைத்தார்கள். உண்மையில், இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தாராளத் தன்மை போன்ற உயர்ந்த பண்புகளுக்கு மேற்குறித்த சம்பவங்கள் சான்று பகிர்கின்றன.

ஒவ்வொரு மனிதனும் உயிரோடிருக்கும் போது மட்டுமன்றி, அவன் மரணித்த பின்னரும் அவனுக்குரிய கௌரவம், கண்ணியம் என்பன சரியாக வழங்கப்பட வேண்டும் என்பதில் இஸ்லாம் கூடிய கவனம் செலுத்துகின்றது. பின்வரும் வரலாற்றுச் சம்பவம் இதை உறுதிப்படுத்துகின்றது. ஒரு முறை நபி (ஸல்) அவர்களைக் கடந்து ஒரு பிரேதம் சுமந்து செல்லப்பட்டது. அப்போது நபியவர்கள் அதனை கண்ணியப்படுத்துவதற்காக எழுந்து நின்றார்கள். அப்போது அங்கிருந்த அவர்களது தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே, இது ஒரு யூதனின் பிரேதமல்லவா?" என ஆச்சரியமாகக் கேட்க அதற்கு "அதுவும் ஓர் ஆத்மாவைக் கொண்டிருந்த மனிதப் பிறவியல்லவா?" என அன்னார் விடை பகர்ந்தார்கள்.

பிற மதத்தவர்களாயிருந்தாலும் அவர்களும் மனிதர்களே என்பதால் உலக விவகாரங்களில் அவர்களோடு பரஸ்பரம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற உயர்ந்த முன்மாதிரியை இஸ்லாம் எமக்குக் கற்றுத் தருகின்றது. நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தனது குடும்பத் தேவைகளுக்காகத் தனது பொருட்களைப் பிற மதத்தவர்களிடம் அடகாக வைத்து கடன் பெற்றுள்ளார்கள். தமது தோழர்களிடம் கடன் கேட்க முடியாது என்பதனாலோ, அல்லது அவ்வாறு கேட்டால் கஞ்சத் தனம் காட்டுவார்கள் என்று கருதியோ நபியவர்கள் இவ்வாறு செய்யவில்லை. மாறாக இவ்வாறானதொரு செயல் மூலம் அந்நியர்களுடன் எவ்வாறான நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற பாடத்தைத் தனது தோழர்களுக்குப் புகட்டுவதற்காகவே நபியவர்கள் இவ்வாறு செய்தார்கள்.

ஆபத்து நிறைந்த சந்தர்ப்பங்களில் கூட நபியவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களிடத்தில் உதவி பெற்றுள்ளார்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க மக்காவிலிருந்து மதீனாவுக்குச் செல்லும் போது 'அப்துல்லாஹ் இப்னு உரைக்கத்' என்ற முஸ்லிம் அல்லாத ஒரு நபரைத்தான் வழிகாட்டியாக அழைத்துச் சென்றார்கள்.

முஸ்லிம் அல்லாதவர்களையும் இஸ்லாம் மனிதாபிமான அடிப்படையில் நோக்கி, அவர்களது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்வதற்கான சகல ஏற்பாடுளையும் செய்திருப்பது அதன் மத சகிப்புத் தன்மைக்கும், மனிதாபிமான அணுகு முறைக்கும் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். நபி(ஸல்) அவர்கள் யூதர்களின் ஒரு குடும்பத்தினருக்குத் தான தருமம் வழங்கி உள்ளார்கள்.

நபியவர்களின் பாசறையில் வளர்ந்த நபித் தோழர்களும் தம்மைச் சூழ இருந்த பிற மதத்தவர்களுடன் நபியவர்களிடமிருந்து தாம் கற்றுக் கொண்ட அதே உயர்ந்த பண்புகளுடனேயே நடந்து கொண்டார்கள். வியாபாரம் மற்றும் கொடுக்கல், வாங்கல் தொடர்புகளையும், சமூக உறவுகளையும் பேணி வந்தார்கள்.

அல்லாஹ் தனது அடியார்களில் புனிதர்களின் பண்புகளில் ஒன்றைப் பற்றிக் கூறுகையில் "அவர்கள் அவனுடைய அன்பினால் ஏழைக்கும், அநாதைக்கும், சிறைப்பட்டவருக்கும் உணவளிப்பார்கள்" (76 : 08) எனக் குறிப்பிடுகிறான். இந்த வசனம் இறக்கப்பட்ட காலப்பிரிவில் கைதிகளில் முஸ்லிம் அல்லாதவர்கள் மட்டுமே இருந்தனர்.

உமர் (றழி) அவர்கள் தனது ஆட்சிக் காலப் பிரிவில் ஓர் ஏழை யூதக் குடும்பத்துக்கான வாழ்க்கைச் செலவை நிரந்தரமாக அரசாங்கப் பொது நிதியிலிருந்து வழங்குமாறு அதற்குப் பொறுப்பான அதிகாரிகளைப் பணித்தார்கள்.

ஒரு முறை உமர் (றழி) அவர்கள் சிரியாவுக்குப் பயணம் செய்து கொண்டிருந்த போது, வெண்குஷ்ட நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவ சமூகத்தைக் கடந்து செல்ல நேர்ந்தது. அவர்களின் நிலையைக் கண்டு மனம் இரங்கிய உமர் (றழி) அவர்கள் அரசாங்கப் பொது நிதியிலிருந்து ஒரு தொகைப் பணத்தை நன்கொடையாக அவர்களுக்கு வழங்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, யார் எந்தக் கொள்கையை, சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்களும் மனிதர்களே என்ற வகையில் அவர்களை மதிப்பதும், பாதுகாப்பதும், அவர்களுக்கு உதவி செய்வதும் முஸ்லிம்களது கடமையாகும் என்பதை மேற்குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுகள் எடுத்துரைக்கின்றன.

ஒருவரது தாயோ அல்லது தகப்பனோ அல்லது இருவருமோ முஸ்லிம் அல்லாதவர்களாக இருப்பினும், அவர்களது அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பது பண வசதி படைத்த பிள்ளைகளின் கடமையாகும் என இஸ்லாம் எடுத்துரைக்கின்றது.

"தன் பெற்றோருக்கு உபகாரம் செய்யும்படி நாம் மனிதனுக்கு உபதேசித்திருக்கிறோம்." (29 : 08)

"மனிதனுக்கு அவனுடைய பெற்றோரைப் பேணுவது பற்றியும் நாம் உபதேசித்தோம்" (31 : 14) போன்ற அல்குர்ஆன் வசனங்கள் பெற்றோருக்கு உபகாரம் செய்யும்படி கட்டளையிடும்போது அவர்களை முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் என்று பாகுபடுத்தி நோக்கும்படி கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். வரலாற்று ரீதியான பின்வரும் நிகழ்வை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

அஸ்மா (றழி) அறிவிக்கிறார்கள். எனது தாய் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவராக இருந்த நிலையில் மக்காவில் இருந்து என்னைச் சந்திக்க வந்தார். குறைஷியர் முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்திருந்த காலம் அது. அப்போது நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, "எனது தாய் என்னிடம் ஏதோ உதவியை எதிர்பார்த்து வந்திருக்கிறார். நான் அவரைச் சேர்ந்து நடக்கலாமா?" என வினவினேன். அதற்கு அவர்கள் 'ஆம், உனது தாய்க்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளைச் செய்,' என்று மறுமொழி பகர்ந்தார்கள். எனவே, சமயத்தின் அடிப்படையிலான வேறுபாட்டைக் காரணங்காட்டி பெற்றோருடனான சாதாரண உறவுகளைத் துண்டித்துக் கொள்ளத் தேவையில்லை எனலாம்.

இவ்வாறே, மகன் முஸ்லிம் அல்லாதவராகவும், பெற்றோரிடம் இருந்து செலவைப் பெறும் வயதிலும் இருந்தால் முஸ்லிமான பெற்றோர் அந்த மகனுக்காகச் செலவளிப்பது அவசியமாகும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். அல்குர்ஆனில் அல்லாஹ் "அப் பிள்ளையின் தாய்மார்களாக இருப்பவர்களுக்கு முறைப்படி உணவும் உடையும் கொடுத்து வருவது பிள்ளையின் தகப்பன் மீது கடமையாகும்" எனக் குறிப்பிடுவதன் மூலம் பிள்ளையின் காரணமாகத் தாய்க்குச் செலவளிப்பது கடமையென்பதை உணர்த்துகின்றான். அவ்வாறாயின் அத்தகைய செலவைப்பெற தாயைவிடப் பிள்ளை அதிகம் அருகதையுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மதத்தால், கொள்கையால், வேறுபட்டாலும் மனிதாபிமான அடிப்படையிலும் அல்லாஹ்வின் படைப்புக்கள் என்ற வகையிலும் முஸ்லிம் அல்லாதவர்களைக் கருணையுடன் நோக்குவதும், அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுப்பதும் முஸ்லிம்களின் கடமையாகும் என்பது இவற்றிலிருந்து தெளிவாகின்றது.

முடிவுரை :

மதத்தால் வேறுபட்டவர்களையும் கூட இஸ்லாம் மதசகிப்புத் தன்மையோடு நோக்குகின்றது. ஆகவே ஒரு முஸ்லிம் தனது சமுதாயத்தவர்களைக் கருணைக் கண்கொண்டு நோக்கி, அவர்களது துயர்களைத் துடைக்க முன்வருவதுபோல மாற்று மதங்களைச் சேர்ந்தவர்களையும் கவனிக்க வேண்டும். இச் செயற்பாடு இறைவனின் அன்பையும், மறுமையில் மகத்தான நற்கூலியையும் பெற்றுத் தருவதோடு மட்டுமல்லாது, அந்த மக்களுடனான சமூகக் கூட்டுறவை வளர்க்கவும் உதவும் என்பதில் ஐயமில்லை. இஸ்லாம் வலியுறுத்தும் நீதி, நேர்மை ஆகிய இரு பண்புகளையும் முஸ்லிம்கள் தங்களது அணிகலன்களாகக் கொள்வதுடன் சக முஸ்லிம்களுடன் மாத்திரமல்லாது, அனைத்து இன மக்களுடனும் நீதியாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும்.

துணை நின்றவை.

1. தர்ஜுமதுல் குர்ஆன்

2. ஸஹீஹுல் புகாரி (தமிழாக்கம்)
இரண்டாம் பாகம்,
இரண்டாம் பதிப்பு சென்னை, ரஹ்மத் பதிப்பகம், 1999.

3. இஸ்லாமிய சிந்தனை
ஜனவரி – மார்ச் 2001
ஏப்ரல் – ஜூன் 2001
ஜூலை – செப்டம்பர் 2001
ஜூலை – டிசம்பர் 2003 (சிறப்பிதழ்)
ஜனவரி – மார்ச் 2004
நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், பேருவலை.

4. றாபிதா, இதழ் – 01 , றாபிதா அந் நளீமிய்யீன் வெளியீடு, 2004.

5. முஹம்மத் அக்ரம் எம்.எம் நடைமுறைக்கேற்ற இஸ்லாம்,
பாகம் – 02 இரண்டாம் பதிப்பு 2001, பஸ்யால, முஸல்மான் பப்ளிகேஷன்.

6. ஏம்பல் தஜம்முல் முகம்மது இஸ்லாம் காட்டும் சமய நல்லிணக்கம்
இந்தியா,
நியூலைட் புக்ஸ் கோர்ணர், 1998.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்துவ வேதாந்த மூலதத்துவங்கள்

- இராமானுஜ வேதாந்தத்துடன் ஒரு ஒப்பீடு -

வெ.அழகரத்தினம்

1.0. இந்திய மெய்யியலில் மத்துவ மத்துவ வேதாந்தம்

மெய்யியல் எண்ணக்கருக்கள் அல்லது தத்துவ சிந்தனைகள் மட்டுமன்றி அறிவுத் துறைகள் அனைத்தையும் மேலைத்தேய முறையியலின் அடிப்படையில் அல்லது மேலைத்தேய பின்புலத்திலிருந்து விளங்கிக் கொள்வதும் விளக்குவதும் மரபாகி விட்டமை பொதுவான அறிவுப் போக்காகும். பொதுவாக மெய்யியல் இயல்பும் அதன் வரலாறும் பற்றி நோக்கின் அது ஆதி கிரேக்க காலத்துடன் ஆரம்பமாகும் இயற்கை மெய்யியல் (Natural Philosophy) பற்றிய விசாரணை தொடக்கம் தற்கால சிந்தனைப்போக்கு வரைக்குமான தத்துவார்த்த விடயங்களை உள்ளடக்குவதாக இருக்கிறது. மெய்யியல் என்றால் என்னவென ஒரே வார்த்தையில் பொதுவான வரைவிலக்கணத்தை வழங்க முடியாதெனினும், சொல்லிலக்கண ரீதியாக இதனை Sopia, Philo எனும் இரு கிரேக்க பதங்களிலிருந்து தோன்றியதெனவும் ஞானத்தின் நாட்டம் (Love of Wisdom) எனும் பண்பைக் கொண்டதெனவும் பொதுவாக வரையறுப்பர். ஆனால் இப்பத வரைவிலக்கணத்திற்கு இந்திய மெய்யியல் உட்பொருள் பொருந்தாதென்பதனால் சொல்லிலக்கண ரீதியில் (Etymological Meaning) ***தர்சனம்*** எனும் பதத்திற்கே இது பொருத்தமுடையது என்பர். அறிவு (Vision) அல்லது அறிவின் வாயில்கள் (Instruments of Vision) எனும் அர்த்தம் கொண்டதாக இப்பதம் உள்ளது. எனவே மேலைத்தேய அர்த்த ரீதியான பண்பிலிருந்து சற்று வேறுபாடுடையதாக இந்திய மெய்யியலியல்பு காணப்படுகிறது. இந்திய மெய்யியலில் பல்வேறு வகைகள் உள்ளன. மக்ஸ் முல்லர் இந்திய மெய்யியலை ஐவகைதரிசனங்களுடன் வேதாந்தத்தையும் சேர்த்து அறுவகை என தனது நூலொன்றில் (Six Systems of Indian Philosophy) வகைப்படுத்தினாலும் அதற்குமப்பால் இன்னும் பல்வேறு இந்திய மெய்யியல் பிரிவுகள் உள்ளன. இவை எல்லாவற்றினுள்ளும் வேதாந்தம் ஒரு தூய சிந்தனையாகக் காணப்படுகிறது. பல்வேறு வேதாந்தப் பிரிவுகளுள்ளும் பன்மைவாத சிறப்புக்கொண்ட மத்துவ வேதாந்தத்தினை ஒப்பீட்டாய்வின் மூலம் தெளிவுபடுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.1. மத்துவ வேதாந்தம் - ஒரு சுருக்க அறிமுகம்:

மத்துவ வேதாந்தம் பற்றிப் பேசும்போது வேதாந்தம் பற்றிய பொதுவாக சங்கர வேதாந்தம் பற்றிய சிந்தனை எழுவது இயல்பான விடயமாகும். ஏனெனில் வேதாந்தப் பிரிவுகளில் ஒன்றாக இருப்பது மட்டுமன்றி, சங்கர வேதாந்த பின்னணியை உள்வாங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதன் பின்புதான் அதன் வகை பற்றியும் உள்ளடக்கம் பற்றியும் சிந்திப்பது பழக்கமாகிவிட்டது. வேத உட்பொருளை விளக்கும் முயற்சிகளில் உபநிடதம் முதல் மீமாம்சை ஈறாக பல சிந்தனைகள் ஈடுபட்டன. இம்முயற்சியில் வேதாந்தம் எனும் தத்துவ சிந்தனையும் ஒரு விளைவாகும். இதன் அடிப்படையிலேயே வேதாந்தத்தை உத்தர மீமாம்சை என அழைப்பது வழக்கம். ஆனால் வேதாந்தம் எனும் போது அது சங்கரர் முதல் ஸ்ரீ அரவிந்தர் ஈறாகவுள்ள ஒரு சிந்தனா மரபினைக் குறிக்கும். அவற்றினுள் சங்கரரது அத்வைதம், இராமானுஜரது விஷிட்டாத்வைதம், மத்துவரது துவைதம் என்பனவே பொதுவாக வேதாந்தம் தொடர்பான தத்துவப் பிரிவுகளாக முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. அவற்றில் மத்துவ வேதாந்தம் முக்கியமான ஒரு சிந்தனாகூடமாகும். இத்தத்துவ விடயங்களை விரிவாக நோக்கி அதனுடன் ஓரளவு சமதன்மையுள்ள இராமானுஜ வேதாந்தத்துடன் ஒப்பீடு செய்து துவைதத்தின் இயல்பைத் தெளிவுபடுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

1.2. மத்துவாச்சாரியார் – ஒரு சுருக்க அறிமுகம்

மத்துவர் (கி.பி 1238-1317) ஒரு சீவலி பிராமணர் எனும் உயர் பிராமண குலத்தில் கர்நாடக மாநிலத்தின் உடுப்பி எனும் பிரதேசத்தில் உடுப்பி நகரின் தென்கிழக்குப் பகுதியில் எட்டு மைலுக்கு அப்பால் உள்ள துலுந்தை எனும் சிற்றூரில் கி.பி 1238 இல் மத்தியாஹேக பட்டருக்கும் வேதவதி தேவிக்கும் மகனாகப் பிறந்தார் எனப்படுகிறது. அவருடைய சீடர் எழுதிய மத்துவ விஜயம் எனும் நூல் அவரது வரலாற்றைத் தெளிவாகக் கூறுகிறது. இவர் வாயுவின் அவதாரம் என கூறப்படுவதுமுண்டு. இவருடைய இளமைப் பெயர் வாசுதேவர். இவர் தனது பன்னிரெண்டாவது வயதில் சந்நியாசம் சென்றார். இவருடைய குருவான அஸியுக்தபிக்சர் சூட்டிய பெயர் பூர்ண பிரக்ஞனர் என்பதாகும். புதியதொரு வரலாறு படைக்கக் கூடிய ஆற்றல் இவருக்கு இருப்பதை உணர்ந்த இவருடைய குரு அக்குருபீடத்தின் தலைமைப் பொறுப்பை அளித்தார். அப்போது சூட்டப்பட்ட பெயர்தான் ஆனந்த தீர்த்தர் என்பதாகும். பின்னர் இவருக்கு மத்துவர் எனும் பெயர் உரியதாகியது. பாடல் திறமையும் கணீர் குரலும் (Sonorous voice) சங்கீத ஞானமும் அழகிய கட்டுடலும் கொண்டவர் என வர்ணிக்கப்படுகிறார். திரண்ட தசைக் கட்டுடலும், கவர்ச்சியான ஆளுமையும், அழகுக்குரிய பாரம்பரிய முப்பத்திரண்டு இலக்ஷணங்களும் கொண்டவர் என இவரது தோற்றம் வர்ணிக்கப்படுகிறது.

மத்துவர் பல காலம் துவைத போதனையில் ஈடுபட்டார். பௌத்தம், சமணம், அத்வைதவாதிகள் முதலியோருடன் தொடர்புகள் கொண்டிருந்ததுடன் அவர்களுடன் தர்க்க, தத்துவ சொல்லாடல்களில் ஈடுபட்டார். இவர்களுடன் விவாதங்களில் ஈடுபட்டு அவர்களை தோற்கடித்திருக்கிறார். அவருடைய போதனை விடயங்களைப் பரப்புவதற்காக தென்னிந்திய பிரதேசங்கள் பலவற்றிற்குச் சென்றிருக்கின்றார். இவ்விடங்களில் பிரம சூத்திரம் பற்றிய சொல்லாடல்களே அதிகம் இடம்பெற்றன. இவர் இச்சொல்லாடல்களில் சங்கராச்சாரியாரின் பாஷ்யங்களை வெளிப்படையாகவே விமர்சித்திருந்தார். அத்வைதவாதிகளின் பல சவால்களை ஏற்று வெற்றிபெற்றதாக கூறப்படுகிறது. வியாசரிடம் கற்றவர் எனவும் இவரிடம் கற்றதன் பின்னரே பிரம சூத்திரத்தை யாத்ததாகவும் கூறப்படுகிறது. பல அத்வைதிகளை வேதாந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதங்களில் வென்றதாக வரலாறு உளது. தத்துவ பிரதீபா் என நாமமிடப்பட்ட துவைதவாதி ஆரம்பத்தில் ஒரு அத்வைதவாதியாக இருந்தவா். திரிவிக்கிரம பண்டிதா் என்னும் பெயரில் ஜெயசிங்கா் எனும் மன்னனுக்கு ஆஸ்தான போஷகராக இருந்தவா். இவா் பதினைந்து நாட்கள் தொடா்ந்து மத்துவருடன் வாதம் புரிந்து தோல்வி அடைந்தாா் எனப்படுகிறது. இதன்பின் மத்துவரின் சீடராகச் சோ்ந்து அவரிடம் கற்று தத்துவ பிரதீபா் எனும் பெயருடன் பிரம சூத்திர பாஸ்யம் எழுதினாா். இதன் பின் சிலகாலம் வாழ்ந்த மத்துவா் தனது எழுபத்து மூன்றாவது வயதில் ஒருநாள் பூக்கள் அவரின் மேல் சொரிந்து கொண்டிருக்கும் போது பாா்வையிலிருந்து மறைந்தாா் எனக் கூறப்படுகிறது. இவருடைய மொழித் தோ்ச்சி, அறிவு, திறன் பற்றி பல சான்றுகள் மத்துவ விஜயம் எனும் நூலில் கூறப்படுகிறன. கட்டுரையின் சுருக்கம் கருதி சில சம்பவங்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன.

மத்துவரது சிந்தனைகள் அவரது போதனைகளின் விடயம் என்பவற்றை முழுமையையும் சிறு கட்டுரையில் விளக்கிவிட முடியாது. எனினும் அவா் சிந்தனையினது சாராம்சத்தினை பின்வரும் கூற்றுக்களில் அடக்குவது பொதுவாகக் காணப்படுகிறது.

1. ஹரி என்றறியப்படும் கிருஷ்ணனே முழுநிறைவானதும் உயா்வானதுமான கடவுள்.
2. மேலான கடவுள் வேதங்கள் ஊடாகவும் அறியப்படும்.
3. சடவுலகம் என்பது உண்மையானது.
4. ஆன்மாக்கள் உயா்வான கடவுளிலிருந்து வேற்றுமையுடையவை.
5. இயல்பளவில் சீவன்கள் உயா்வான கடவுளின் சேவகா்கள்.
6. சீவன்களில் வீடுபேறு பெற்றன, தளையிலுள்ளன என இரு வகையுண்டு.
7. வீடுபேறென்பது கிருஷ்ணனுடைய கமல பாதங்களை அடைவதும் அவனுக்கு சேவை செய்வதற்காக நிலையான ஒரு உறவிற்குள் நுழைவதுமாகும்.
8. இவ்வாறான உறவினது காரணமாகவே தூய தெய்வீக சேவை உளது. உண்மை என்பது நேரடி காட்சி, வழியளவை, வேதவாக்கியம் என்பவற்றின் மூலம் அறியப்படக் கூடியது. இவ்வாறான சாராம்ச விடயங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு, மத்துவரின் படைப்புக்கள், அவரது சிந்தனைகள் பற்றி விரிவாக நோக்குவது பொருத்தமானது.

1.3. மத்துவாச்சாா்யாரது படைப்புக்கள்

மத்துவாச்சாரியாரின் படைப்புக்கள் பல வகைகளில் அடங்குகின்றன. அவை சில பாஷ்யங்களாகவும், சில தனது சொந்த சிந்தனைகளாகவும், சில அவரது படைப்புக்களுக்கு அவரே விளக்கவுரை வழங்கியதாகவும் என பல்வேறுபட்ட படைப்புக்கள் காணப்படுகின்றன. இவா் பிரமசூத்திரத்திற்கு பாடியம் எழுதி பின்னா், அனுவியாக்கியானம் எனும் பெயரில் அதற்கு வியாக்கியானம் எழுதியிருந்தாா். இவா் மொத்தமாக முப்பத்தேழு நூல்கள் எழுதியதாகக் கூறப்படுகிறது. அவை (1) இருக்கு வேத பாஸ்யம். இது இருக்கு வேதத்திற்கான பாடியமாகும். (2). கிரம நிா்ணயம் : இது ஐதரேயபிராமணத்தின் ஒழுங்கும், அதன் சரியான வாசிப்பும் பற்றிய சொல்லாடலாகும். இதில் ஐதரேய ஆரண்யமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத மந்திரங்களும் உள்ளடங்கியுள்ளன. மேலும் பத்து உபநிடதங்களுக்கு பாடியம் எழுதியுள்ளார். (3) ஐதரேய உபநிடதம், (4) பிருகதாரண்ய உபநிடதம், (5) சாந்தோக்ய உபநிடதம், (6) தைத்திரீய உபநிடதம் (7) ஈஸாவாஸ்ய உபநிடதம் (8) கட உபநிடதம் (9) முண்டக உபநிடதம் (10) மாண்டுக்ய உபநிடதம் (11) பிரஸ்ன உபநிடதம் (12) கேன உபநிடதம் என்பனவாகும். இதனை விட (13) மகாபாரத தத்பர்ணய நிர்ணயம் (14) பகவத்கீத பாஸ்யம், (15) பகவத்கீத தத்பர்ய நிர்ணயம், (16) பாகவத தாத்பர்ய நிர்ணயம் (17) பிரம்ம சூத்திர பாஸ்யம், (18) பிரம சூத்திரானு பாஸ்யம், (19) பிரம சூத்திரானு வியாக்கியானம் (20) பிரம சூத்திரானு வியாக்கியான நிர்ணயம், (21) பிரமாண லக்ஷணம் (22) கதா லக்ஷண (23) உபாதி கந்தணம் (24) மாயவத கண்டனம் (25) பிரபஞ்ச மித்தியானுமான கண்டனம் (26) தத்துவவோதயம் (27) தத்துவ விவேகம் (28) தத்துவ சங்கியானம் (29) விஷ்ணு தத்துவ நிர்ணயம் 30) தந்திர சார சங்காரம் (31) கிருஷ்ணாமிர்த மஹார்ணவம் (32) ஜாதி பிரணவ கல்பம் (33) சாடாசர ஸ்மிருதி (34) ஜயந்தி நிர்ணயம் அல்லது ஜயந்தி கல்பம் (35) ஜமக பாரதம் (36) நிருசிங்க நாகஸ்தோத்திரம் (37) துவாதச ஸ்தோத்திரம் எனும் முப்பத்தேழு நூல்களும் அடங்கும். இவை சர்வ மூலம் என்ற தலைப்பின் கீழ் ஒரு தொகை நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

1.4. மத்துவருக்கு முந்திய வேதாந்த மரபு

வேதத் தெளிவைத் தரும் வேதாந்தக் கருத்துக்கள் ஆரம்பத்தில் சமய இலக்கியங்களில் காணப்பட்டன. முறைமையான வகையில் அக்கருத்துக்களை முன்வைத்த முதல் நூல்களாக பிரஸ்தான திரயங்களான உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பவை கருதப்படுகின்றன. இவற்றினை அடிப்படையாக வைத்தே வேதாந்த சிந்தனை தோன்றியது. இவற்றினுள்ளும் பாதராயணரின் பிரம சூத்திரம் அல்லது வேதாந்த சூத்திரம் என்பதே முதலாவது முறைமையான வேதாந்த நூல் என கணிக்கப்படுகின்றது. அத்வைத வேதாந்தக் கருத்துக்களை முன்வைத்த ஒரு நூலாக கௌடபாதரின் மாண்டுக்கிய காரிகை அல்லது கௌடபாத காரிகை விளங்குகிறது. கோவிந்தபாதரும், சங்கரரும், கௌடபாதரின் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தோற்றமின்மைநிலை எனும் அஜாதிவாதமே கௌடபாதரின் முக்கிய சிந்தனை. முழுமையாயிருப்பது எப்போதும் உற்பத்தி செய்யப்படாத சுயஇருப்புடையது என நேர் நிலையாகவும், உலகம் ஒரு தோற்றமே, இது உற்பத்தி செய்யப்படவில்லை என மறைநிலையாகவும் விரிக்கிறது. அறுதிப்பொருள் அஸ்பர யோகம் (Pure knowledge) மூலம் உணரப்படும் என்பது இவர்கள் தத்துவமாகும்.

இதனுடன் தொடர்பானதாக அத்வைதத்தின் அல்லது சங்கராச்சாரியாரின் செல்வாக்கு தத்துவ விசாரணையில் முக்கியம் பெறுகிறது. அத்வைதம் என்பது இரண்டல்லாதது (Non Dualism) எனும் அர்த்தம் கொண்ட பதம். பிரமம் ஒன்றே உண்மையானது. ஏனைய அனைத்தும் தோற்றமே என்பது இத்தத்துவம். "பிரமம் உண்மையானதொன்று, இந்த உலகம் ஒரு தோற்றமே, ஒவ்வொரு ஆன்மாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமம்தான் வேறு ஒன்றுமில்லை" என்பது இத்தத்துவத்தின் சாரம். பிரமம்தான் ஈஸ்வரனாகவும். ஆன்மாவாகவும், ஜீவனாகவும் உலகமாகவும் தென்படுகிறது. சங்கர வேதாந்தத்தில் பிரமம், ஈஸ்வரன், ஆன்மா, ஜீவன் எனும் பதங்கள் வேறுபட்ட பிரத்தியேக அர்த்தம் கொண்ட ஒரே விடயத்தைக் குறிப்பன என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். விஷயங்கள் வேறுபாடானவையாகத் தென்படுவதற்கு அவித்தையும் மாயையும் காரணமாகும். மாயையினால் பிரமம் ஈஸ்வரனாகத் தெரிகிறது. இது வெளிக்காட்டுதல் (விக்ஷேபம்) பற்றிய ஒரு நேர்நிலையாகும். அவித்தையினால் பிரமம் ஜீவனாகத் தெரிகிறது. இது மறைத்தல் (ஆவாரணம்) பற்றிய ஒரு மறைநிலையாகும். இவ்விரு நிலைகளினால் உண்மை வேறுவிதமாக உணரப்படுகிறது. இரண்டற்ற நிலையினை ஆன்மா பெறுகின்றதான அறிவு நிலையே விடுதலை என்பது சங்கர வேதாந்தக் கருத்தாகும். (இதன்பின் தோன்றிய இராமானுஜ வேதாந்தம் பற்றிய கருத்து அதன் ஒப்பீட்டுப்பகுதியில் விளக்கப்படுகிறது)

1.5. மத்துவ வேதாந்தம்

மத்துவ வேதாந்தம் துவைதம் எனும் பதத்தினால் குறிக்கப்படுகிறது. துவைதம் என்பது இரண்டு அல்லது இருமை எனும் பொருள் தரும் "த்வி" (Dvi) எனும் அடிச்சொல்லிலிருந்து பெறப்பட்ட பதமாகும். வேறுபாடு அல்லது வேற்றுமை என்பதே இதன் அர்த்தமாகும் (இராமச்சந்திரன்:13). இந்த வகையில் நோக்கின் துவைதம் ஒரு இருமைவாதமாகும். துவைத வேதாந்திகளாக மத்துவரையும் அவரின் வழித்தோன்றல்களையும் குறிப்பிடலாம். இவர்களுள் ஜயதீர்த்தர் ஒருவர். இவர் தத்துவ பிரகாசிகை எனும் மத்துவ பாஸ்ய விளக்கத்தை எழுதியதுடன் பிரமாணபத்ததி மற்றும் நியாயசூடம் எனும் நூல்களின் ஆசிரியருமாவார். வியாசதீர்த்தர் என்பவர் தத்பர்ய சாந்திரீகம் எனும் தத்துவபிரகாசிகைக்குரிய விளக்கவுரையை எழுதியதுடன் நியாயாமிர்தம் மற்றும் தர்க்க தாண்டவம் எனும் நூல்களையும் ஆக்கியுள்ளார். இவர்களைப் போல் இராமாச்சார்யார் என்பவர் தரங்கினீ எனும் நூலினை இயற்றினார். இது வியாச தீர்த்தருடைய நியாயாமிர்தத்திறகான விளக்கவுரையாகும். இவ்வாறு துவைத சிந்தனை பல்வேறு சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டிருப்பினும் மத்துவரின் பெயருடனேயே இது அடையாளப்படுத்தப் படுகிறது. இதனாலேயே சர்மா தனது நூலென்றில் மத்துவர் துவைதத்தின் வீரர் (Champion of Unqualified Dualism) என வர்ணிக்கிறார் (C.Sharma:372),

சங்கராச்சாரியாரின் அத்வைதக் கொள்கையினை எதிர்த்து குறை கூறுபவராகவே மத்துவர் காணப்படுகிறார். மறைஞானவாதம் (Mysticism) என்பதற்கெதிராக பிறந்ததொரு எதிர்ப்பாளராக (born foe) ஹெகலைக் குறிப்பிடுவது போல், சங்கராச்சாரியாரின் எதிர்ப்பாளராக பிறந்தவராக மத்துவர் குறிப்பிடப்படுகிறார் (C.Sharma: 372). சங்கர வேதாந்தத்தின் விடயங்களைச் சாடுவதே இத்தத்துவத்தின் பிரதான பண்பாக உள்ளது. சங்கர வேதாந்தம் எனும் நாமத்தின் பேரில் அத்வைதம் சூன்யவாத பௌத்தத்தின் போலி விடயங்களைப் பரப்புகிறது என குற்றம் சாட்டுகிறார். இவர் அத்வைதவாதிகள் மீது அளவுகடந்த வன்மம் கொண்டிருந்தார். இதனால் அத்வைத வாதிகளை அறியாமை இருளில் விளையாடுகின்ற ஏமாற்றும் பேய்கள் (Deceitful

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Demons) எனவும் வர்ணித்தார். வேதங்கள் பற்றிய இவர்களது தவறான வியாக்கியானங்களையும் இவர்களது குழப்பகரமான வாதங்களையும் அழிப்பதற்கு எல்லாமறிந்த துவைதம் எனும் சூரியன் வருவதால் அவர்கள் ஓட வேண்டும் என கூறுகிறார். இவ்வாறு முரண்படுவதற்கு இரு அடிப்படைகள் காரணமாகின்றன என தி.ப.இராமச்சந்திரன் குறிப்பிடுகிறார். (தி.ப.இராமச்சந்திரன்:03). ஒன்று பொதுவாகப் பெறும் அறிவுநிலைகளை வேதாந்தம் ஏற்காமல் கருத்தியல் எண்ணக்கருக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்தல். இரண்டு அத்வைதம் சமய உண்மைகளுக்கும் அறவொழுக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் வெற்றுத் தத்துவங்களை பறைசாற்றுகின்றது. பொதுவாக பயன்பாட்டிற்கு அப்பாற்பட்ட பொது அனுபவங்களை ஒதுக்குகிற கருத்தியல்சார் விடயங்களை மட்டும் சங்கரர் முக்கியத்துவப்படுத்துவதாகக் கூறுகிறார். இதனாலேயே இவர் வேற்றுமையை அல்லது பன்மைத் தன்மையை அடிப்படையாக வைத்து துவைதக் கொள்கையை நிறுவினார்.

மத்துவரின் வேற்றுமையினை அடிப்படையாகக் கொண்ட தத்துவ நெறியினை புரிந்து கொள்வதற்கு மத்துவரின் சீடரான வியாச தீர்த்தரது ஒரு பாடலே போதுமானது என்கிறார் பேராசிரியர் T.M.P. மகாதேவன். அப்பாடலின் பொருள் "மத்துவரின் தத்துவ முறையில் அரியே அதி உயர்ந்த, இருந்தபடி இருக்கும் பொருள். உலகம் ஒரு உள்பொருள் பேதமே உண்மையானது. ஆன்மாக்கள் யாவும் அரியைச் சார்ந்தே உள்ளன. ஆன்மாக்களில் உயர்ந்தவை தாழ்ந்தவை என்ற தர வித்தியாசம் உண்டு. மோட்சம் என்பது, ஆன்மா தனக்கியல்பான ஆனந்தத்தை அனுபவிப்பதேயாகும். அதற்கு பழுதற்ற பத்தியே வழி. புலக்காட்சி, அனுமானம், சான்றுரை என்னும் மூன்றும் அறிவு பெறும் வழிகள் (பிராமணங்கள்) ஆகும். அரியை நாம் வேதத்தின் மூலமாகவே அறியலாம்" என்பதாகும் (T.M.P.மகாதேவன்:144). மத்துவ வேதாந்தம் கூறும் பேதங்கள், பிரமம், ஆன்மா, உலகம், மோட்சம், அறிவு பற்றிய கருத்துக்கள் பற்றி நோக்குவது மத்துவ வேதாந்த தெளிவைப் பெறுவதற்குப் பொருத்தமானது.

1.6. ஐவகைப் பேதங்கள்

மத்துவ வேதாந்தம் ஈஸ்வரன், சீவன், சடம் எனும் மூன்று பொருள்களையும் உண்மைப் பொருள்களாகக் கொள்கின்றது. இராமானுஜ வேதாந்தத்தைப் போன்றே மத்துவ வேதாந்தமும் ஆன்மாவும் சடமும் இறைவனில் தங்கியிருப்பன என்பதில் உடன்பாடுடையது. இருப்பினும் இவை மூன்றும் நிலையானது என்றும் நிலைத்த பண்புடைய தனித்தனியான பதார்த்தங்கள் (சர்மா:373) என்றும் மத்துவ வேதாந்தம் கூறுகின்றது. இம்மூன்று பதார்த்தங்களுக்கிடையில் வேறுபாடுகள் உள்ளன என்கிறது மத்துவம். இவ்வேறுபாடுகளையே ஐவகைப் பேதங்கள் என்கிறோம். அவை;

1. **சீவ-ஈஸ்வர பேதம் :** இது இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கருதுவதாகும்.
2. **சீவ பரஸ்பர பேதம் :** இது ஒரு ஆன்மாவுக்கும் மற்றுமொரு ஆன்மாவுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்குவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சட-ஈஸ்வர பதம் : இது கடவுளுக்கும் சடப்பொருளிற்கும் இடையில் உள்ள இயல்பை விளக்குவதாகும்.

4. சீவ- சட பேதம் : இது ஆன்மாவுக்கும் சடப்பொருளிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்குவதாகும்.

5. சட பரஸ்பர பேதம் : இது ஒரு சடப்பொருளிற்கும் மற்றுமொரு சடப் பொருளிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்குவதாகும். (கந்தசாமி. சோ.ந: 269)

கடவுளும் ஆன்மாவும் இவ்வேறுபாட்டை அறியக்கூடியன. சீவன் தனது வேறுபாட்டை உணர்வது போல் கடவுள் தனது வேறுபாட்டை உணர்ந்து கொள்கிறார். சீவன்கள் கடவுளிலிருந்து வேறுபட்டன என அறிந்து கொள்வது போல் கடவுளும் சீவன்களிலிருந்து தான் வேறுபட்டவர் என்பதை அறிந்து கொள்கிறார். அதே போல் சீவன்கள் தங்களுக்குள் வேறுபாடு இருப்பதையும், சடத்திலிருந்து வேறுபட்டன என்பதையும் அறிந்து கொள்கின்றன (S.Dasgupta:178- 79). இது போல் கடவுளும் ஆன்மாவும் சடத்திலிருந்து வேறுபட்டன எனவும், சடத்தினுள்ளும் வேறுபாடுகள் உள்ளன எனவும் அறித்து கொள்கின்றன. அதாவது பொருட்கள் பல எனவும் அப்பொருட்களின் இயல்புகளிலும் (ஸ்வரூபம்) பேதம் உளதெனவும் அறியப்படுகிறது. இப்பேதம் பல வழிகளில் உணரப்படுகிறது. அவை ஒன்றையொன்று மறுத்தலின் ஊடாக வரும் பேதம் (அன்யோன்ய பாவம் - சாடி துணியல்ல, துணி சாடியல்ல எனும் பேதம்), வேறுபாட்டியல்பால் வருவன (பிருதக்த்வம்), பண்புகள் வேறுபடுவதால் வரும் பேதம் (வைதர்மயம்), வகைப்பாடுகளின் தோற்றப்பாடுகளினூடான பேதம் (பின்னாலக்ஸன-யோகித்வ பேதம்) என தாஸ் குப்தா வகைப்படுத்திக் காட்டுகிறார் (S.Dasgupta:180).

1.7. பிரமம்

பிரமம், ஆன்மா, உலகம் ஆகிய மூன்றும் உண்மைப் பொருள்களாயினும், உலகமும் ஆன்மாவும் கடவுளுக்கு கீழ்நிலைப்பட்டதாகவும் அவரில் தங்கிருப்பனவாகவும் உள்ளன. பிரமன்தான் ஒரு சுதந்திர (ஸ்வதாந்திர) உண்மைப் பொருளாகவும் உலகை உருவாக்கும் ஒரு முழுமைப் பொருளாகவும் இருக்கிறது. வேதங்களைக் கற்பதனூடாகவே பிரமனின் இயல்பை அறிய முடியுமென்பதால் அவருடைய இயல்பை வரைவிலக்கணப்படுத்த முடியாது என மத்துவ பாஸ்யத்தை ஆதாரம் காட்டி இராதாகிருஷ்ணன் விளக்குகிறார் (இராதாகிருஷ்ணன்:742). இவ்வாறான இயல்புள்ளவனை உயர்ந்த உள்பொருள் (சர்வோத்தமன்) என அழைக்கின்றார். எல்லாக் குணங்களும் அமையப் பெற்றவன் குணபூர்ணன் எனப்படுகின்றார். அறியப்பட வேண்டிய மிக உயர்ந்த பொருள் அவன் ஒருவனே. அவனே சார்பற்ற நிமித்த காரணன். உலகத் தோற்றத்திற்கு அவனே இயக்கக் காரணன். அவன் முதற் காரணன் அல்லன், எனினும் அவனே பிரபஞ்சத்தைப் படைப்பவன், கட்டுப்படுத்துபவன், அழிப்பவன். இயற்கைப்பொருள் முதல் ஆற்றுகிற கருமம் வரையான எல்லா விடயங்களும் அவனருளாலேதான் இருக்கின்றன. அவனது அருள் இல்லையாயின் ஒன்றும் இல்லாது போகும் என்கிறார் (T.M.P.மகாதேவன்:144).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்துவர் வைணவ மதத்தைச் சேர்ந்தவராதலால் கடவுள் பற்றிய கருத்துக்களில் விஸ்ணு பற்றிய கருத்துக்கள் மையம் கொள்கின்றன. இறைவன் (தேவைக்கேற்றாற் போல்) தன்னை பல்வேறு வடிவங்களில் (வியூகங்களில்) வெளிப்படுத்துகிறார். அவதாரக் கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மத்துவர், அவ்வப்போது கடவுள் பல அவதாரங்கள் எடுப்பதாகவும் விளக்குகிறார். அரி, நாராயணன், விஷ்ணு எல்லாம் ஒரே இறைவனே. வேதத்தில், புராணத்தில், இராமாயணத்தில், பாரதத்தில் என எல்லா இலக்கியங்களிலும் தொடக்கத்தில், இடையில், முடிவில் என எல்லாக் காலத்திலும் விஷ்ணுவே துதிக்கப்படுகின்றான். " எப்பொழுதும் நாராயணனுக்குத் தலை வணங்குகிறேன், அவனை உண்மையான வேதத் திருநூல்களின் வழியேதான் அறியலாம். அவன் அழிவனவற்றுக்கும் அழியாதவற்றுக்கும் அப்பாற்பட்டவன் குறைகளற்றவன் நல்ல திருக்குணங்கள் உடையவன்" என விஷ்ணு தத்துவ நிர்ணயத்தில் மத்துவர் கூறுகின்றார் (T.M.P.மகாதேவனன்:145). விஷ்ணுவின் படைக்கும் ஆற்றலே இலட்சுமி. இலட்சுமி துன்பம் தீண்டாத, சம்சார பந்தத்திற்கு அப்பாற்பட்ட உயர்நிலையுடையது (நித்யமுக்தா). இலெட்சுமியின் இருப்பு இறைவனின் இருப்பை ஆதாரப்படுத்துகிறது (இராதாகிருஷ்ணன்:742). இலட்சுமி ஒரு உயர்நிலையுடைய இருப்புடையது. எனினும் இலட்சுமியை விட இறைவனே உயர்ந்தவன். இறைவனுடன் சார்புடையவற்றுள் இலட்சுமியே உயர்ந்தது. விஷ்ணுவை ஒரு முதற்காரணமாகக் காட்டாமல் ஒரு நிமித்தக் காரணமாக (Efficient Cause) காட்டுகிறார். ஏனெனில் ஒரு அறிவற்ற உலகு ஒரு உயர்வறிவுள்ள விடயத்திலிருந்து உருவாக முடியாது என்பது இவர் வாதம். அவருடைய நிரம்பி வழியும் செயற்பாடுகளின் விளைவுதான் அவருடைய செயற்பாடுகள். கர்மம் முதல் அனைத்தும் இப்பிரமனிலேயே தங்கியுள்ளது என்பது மத்துவ வேதாந்த அடிப்படை.

1.8. ஆன்மா அல்லது ஜீவன்

மத்துவ வேதாந்தத்தின்படி இப்பூமியில் இருக்கின்ற ஒவ்வொரு பொருளும் வாழ் நிலையுடைய பொருட்கள் (Living organism) ஆகும். இப்பொருட்களுள் ஆன்மாவும் ஒன்று. ஆன்மாவும் இறைவனைப் போன்று ஒரு நித்திய பொருள். இவை எண்ணிறந்தவை எனவும் அளவில் அணுவின் அளவுடையதெனவும் கூறப்படுகிறது (C.Sharma:373). பிரபஞ்சம் என்பது ஜீவனால் நிரப்பப்பட்ட அணுவெளிகளைக் கொண்ட பாரிய ஒருவெளியாகவே காணப்படுகிறது. ஜீவனும் பிரமமும் விடுதலை நிலையில் ஒன்றெனவும், சம்சார நிலையில் வேறானவை எனும் வாதங்கள் தவறானவை. பிரமத்தில் ஜீவன் தங்கியிருப்பினும் அது செயற்பாடுள்ள ஒரு தனி விடயமாகும். இயல்பிலேயே ஆன்மாவானது உணர்வுள்ளதாகவும், பேரின்பம் உள்ளதாகவும் (Blissful) இருக்கிறது. இது கடந்தகால கர்மத்தின் தொடர்பினால் அதன் உடல், மனம், புலன்களது தொடர்பு காரணமாக துன்பத்தையும் நிறைவின்மையையும் பெறுகிறது. ஆன்மாக்கள் நித்திய முக்தியுடையது (நித்யா), முக்தியுடையது (முக்தா), தளைகளுள்ளது (பெத்தா) என மூன்று நிலையுள்ளதாகும். முதல் வகை ஆன்மாக்களுள் இலட்சுமி முதலானவை அடங்கும். இரண்டாம் வகைக்குள் தேவர்கள் மனிதர்கள், இருஷிகள் முதலியோர் அடங்குவர். மூன்றாவது வகைக்குள் முக்திக்கு தகுதியானோரும் (முக்தியோக்கியர்), முக்திக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியற்றோரும் அடங்குவர். முக்திக்குத் தகுதியற்றோரில் இரு வகையுண்டு. அவை நரகத்திற்குரியவர்கள் என ஒதுக்கப்பட்டவர்கள் அல்லது முழுக்காலமும் இருளில் வாழ்வோர் (தமோயோக்யா). இரண்டாவது வகையில் முழுக்காலமும் சம்சார சக்கரத்தில் உழல்பவர்கள் (நித்திய சம்சாரிகள்) அடங்குவர்.

பண்பளவில் இரு ஆன்மாக்கள் ஒரே மாதிரியானதாக இருக்காது. ஒவ்வொன்றும் தனக்கென சிறப்பையும் இருப்பிற்கான அளவையும் கொண்டுள்ளன. இந்த வகையில் சில ஆன்மாக்கள் அவற்றில் உள்ளுறைந்துள்ள இயல்பு காரணமாக முக்திக்கென்றே விதிக்கப்பட்டன. ஏனைய இரண்டாம் வகையைச் சேர்ந்தவை அனைத்தும் நரகத்திற்கென்றே ஒதுக்கப்பட்டவை. மூன்றாம் வகையைச் சார்ந்தவை சம்சார சுழற்சியில் தொடர்ச்சியாக கட்டுப்பட்டதாக இருக்கும். இந்த மூவகைப் பிரிப்பும் மூன்று குணங்களின் அடிப்படையில் இடம்பெறுகிறது. சத்துவ குணமுடைய ஆன்மாக்கள் சுவர்க்கத்திற்குச் செல்கின்றன. ராஜச குணமுள்ளவை சம்சாரத்தில் உழல்கின்றன. தாமச குணமுள்ளவை நரகத்தில் விழுகின்றன.

உலகில் வாழ்கின்ற உயிரிகள் பல வகைப்படும். அவை தேவர், மனிதர், விலங்குகள், தாவரங்கள் என்னவாகும். ஆன்மாக்களின் வேறுபாட்டுத் (தாரதம்யம்) தரப்படுத்தல் அதன் சரியான அளவின் (Eloborate scale) அடிப்படையிலேயே இடம்பெறுகிறது. உதரணமாக, முக்தியடைந்த நிலையில்கூட இரு ஆன்மாக்களுக்கிடையில் ஒரேவிதமான தகுதிப்பாடு இருக்காது. அவற்றிற்கிடையிலுள்ள கலங்களின் அதிகார அடுக்கமைவின் அடிப்படையில் பிரம்மாவும் வாயுவும் உயர்நிலையிலுள்ளவர்கள். வாயு கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒரு முகவராகும், வாயு அறிவு பெற்று அவ்வறிவினூடே வீடுபேறு பெற உதவி செய்பவர். இவர் கடவுளின் மகன் (ஹரே சுதன்) என அழைக்கப்படுகிறார். இங்கு ஆன்மாக்களும் பிரமன்தான் என வாதிடுவது பொருத்தமற்றது. கடவுளின் ஆன்மா நிறைவானதெனவும், மனிதவான்மா நிறைவற்றதெனவும் கூறப்படுகிறது. எனவே நிறைவான ஆன்மாவும் நிறைவற்ற ஆன்மாவும் ஒத்தவியல்பல்ல என்பது மத்துவ வேதாந்த வாதம். இவர்களது செயற்பாடுகளை பழைய தொடர்புகளின்படி இறைவன் அவர்களுக்கு கட்டளையிடுகிறான் என இது வலியுறுத்துகிறது.

1.9. சடவுலகு பற்றிய சிந்தனை

மத்துவ வேதாந்தம் உலகின் தோற்ற ஒடுக்கத்திற்கு பிரகிருதியை அடிப்படையானதாகக் காட்டுகிறது. உயிரற்ற உலகின் பொருட்களாகவே சடப்பொருட்கள் தென்படுகின்றன. இவை எல்லா இருப்புடைய பொருட்களுக்கும் உடலைக் கட்டமைக்கின்றன. இவை அனைத்தும் அடிப்படைச் பொருளாகிய பிரகிருதியிலிருந்து தோன்றி காலவோட்டத்தில் ஊழியின்போது (Dissolution) அதற்கே திரும்பிவிடுகின்றன. பிரகிருதி ஓரியல்புத் தன்மையுள்ளதாக இருந்தபோதிலும் நுண்ணிய அளவில் வேறுபாடான பொருட்களைக் கொண்டு இவ்வுலகம் படைக்கப்படுகிறது. இவ்வேலைகள் பிரமனாலும் ஆன்மாவாலும் இடம்பெறுகையில் இவ்வுலகம் புலப்பாட்டிற்குரியதாக விருத்தியாகின்றது. மூல காரணமாகிய பிரகிருதி மூலம் பிரமன் வடிவமைத்து அப்பிரகிருதியினுள் பிரமன் பல்வேறு வடிவங்களில் இருப்பான். படைப்பானது முழுமையாக தென்படுகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவத்திற்கு வரு முன்னர் இது இருபத்தினான்கு மாறக் கூடிய பொருட்களாக இருக்கும். அவை மகத், அகங்காரம், புத்தி, மனம், புலன்கள் பத்து, புலப்பொருட்கள் ஐந்து, ஐந்து சாரங்கள் என்பனவாகும். இவை உலக உருவாக்கத்திற்கு முன்னர் நுண்மை வடிவத்தில் பிரகிருதியில் இருக்கும். இவற்றின் சேர்க்கையால் உலகப் பொருட்கள் பலவாகவும் உருவாகும்.

இராமானுஜர் உலக உருவாக்கம் என்பதை பரிணாமவாதம் என்கிறார். சாங்கியத்தைப் போன்று இவரும் பிரகிருதியை முதற்காரணமாகக் கொண்டு பிரபஞ்சம் உருவாகிறது என்பது இவரது சிந்தனை. ஆனால் சங்கரரது வேதாந்தத்தில் உருவாகுதல் எனும் செற்பாட்டிற்கே இடமில்லை. உலகம் என்பது ஒரு மாயத் தோற்றமே என்பது இவர் நிலைப்பாடு. இவை இரண்டிலுமிருந்து வித்தியாசமான கொள்கையை மத்துவர் முன்வைக்கின்றார். காரண நிலையிலிருக்கும் பிரகிருதியிலிருந்து இறைவன் விஷ்ணு இலெட்சுமியைச் சக்தியாக மாற்றி உலகைத் தோன்றச் செய்கிறான் என்கிறார். இவ்வாறு தோன்றும் உலகானது ஆன்மாக்கள் முக்தியை அடைவதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்துகிறது (T.MP.மகாதேவன்:145).

1.10. மோட்சம் பற்றிய சிந்தனை

மத்துவர் ஒரு வைஷ்ணவர் என்ற நிலையில் இராமானுசரின் சிந்தனையுடன் ஒத்துச் செல்கிறார். பிரபக்தியே மோட்சத்தை அடைவதற்கான வழி என்பது இருவரதும் நிலைப்பாடாகும். சீவன் தளையால் கட்டுண்டது. இதனை துவைதம் அவித்தை (அறியாமை) என்கிறது. அறியாமையும் ஒரு தன்னிருப்பு உள்ள பொருளேயாகும். மத்துவர் அறியாமை என்பதை ஒருபொருள் அது உள்ள நிலையிலிருந்து மாறுபட்ட வகையில் அப்பொருளை அறிவது என்கிறார். உள் பொருளை வேறொன்றாகவும் இல்லாத பொருளை இருக்கின்றதொன்றாகவும் நோக்கும் ஒரு அறிவு முறை என்றார். புலன்களில் குறைபாடு ஏற்படும் போது அறியாமை உருவாகிறது. புலன்களின் குறைபாடு பார்வைக்கு தடை (Obstruct) மட்டுமன்றி ஒரு பொருளைப் பற்றிய பிழையான தோற்றத்திற்கும் காலாக அமைகிறது. இது பற்றி ஜயதீர்த்தர் பதிலளிக்கையில், மாறுபட்ட பார்வை கூட ஒரு வகை அறிவேயாகும். சிப்பியில் வெள்ளி மின்னுவது, அது உண்மை வெள்ளியல்ல எனும் அறிவைத் தருகிறது. இது அறிவை தருவதல்ல. அறிவை உறுதி செய்யும் (நிரூபகம்) படிமுறை என நியாயசூடம் கூறுகிறது (S.Dasgupta:173). இவ்வாறான மாறுபட்ட அறிவுநிலையான அவித்தையினால் முத்தி நிலையடைதல் சாத்தியமில்லை. ஏனெனில் பிழையான வழிவகையறிதல் பிழையான இடத்திற்கே சேர்ப்பிக்கும். எனவே சரியான வழியறிதலே ஞானம் பெறலாகும். ஞானம் கூட கடவுளின் அருளையே சார்ந்திருக்கிறது. நேர்க்காட்சி ஞானமே (அபரோக்ஷ ஞானம்) சிறந்த வழி என்பது மத்துவ வேதாந்தம்.

முழு நிறைவுடைய பரம்பொருளை உணர்வதற்குரிய அறிவை உற்பத்தி செய்வதென்பது கடவுளிலேயே தங்கியுள்ளது. சடவுலகு பற்றியும் ஆன்மீகப் பொருள் பற்றியும் அறிகின்ற எல்லாச் சரியான அறிவும் இறைவனை அறிவதற்கே இட்டுச் செல்லும். இதன் விளைவாக இறைவனை விரும்பும் இயல்பைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும். ஒருவருடைய தத்துவவிவேகத்தால் அவர் சம்சாரத்திலிருந்து விடுதலையைக் காண்கிறார். எல்லா வரையறைக்குட்பட்ட இருப்பும் எப்போதும் ஹரியினது கட்டுப்பாட்டில் உள்ளது எனும் அறிவே இதுவாகும். இறைவனை நேரடியாக அடைய முடியாது. மத்துவ வேதாந்தம் வாயுவை ஒரு தரகராகக் காட்டுகிறது (Radhakrishnan.S :747). மத்துவ வேதாந்தம் தியானத்தினை சரியான அறிவையும் உணர்வையும் பெறுவதற்கான ஒரு மார்க்கமாக முன்வைகின்றது. இதனால் இறை பற்றிய ஒரு நேரடி உள்ளுணர்வு அறிவை (அபரோக்ஷ ஞானம்) ஆன்மா அடையும். பக்தியினால் கடவுளை மகிழ்வடையச் செய்யும் போது அவர் தானாக வெளிப்படுவார் என்பது மத்துவ வேதாந்த முடிபு.

ஆன்மாவின் இயல்பான நிலையாக வீடுபேறு இருக்க வேண்டும். இவை தங்களில் உள்ள அறிவு, குணம் காரணமாக உடலில் வாழ்கின்றன. அவற்றின் இயக்கத்திற்கு உறுதுணையாக கடவுளியல்பைச் சார்ந்த முகவர்கள் இவற்றுடன் காணப்படும். இவை ஆன்மாக்களில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவல்லன. இவற்றின் ஒரு செயற்பாடானது, ஆன்மாக்களின் மாசு துடைக்கப்பட்டதன் பின்னர் ஆன்மாவில் மாற்றம் ஏற்படுதல் இல்லாமல் போகிறது. மாற்றமில்லா பேரின்ப நிலையே வீடுபேறடைதல். இதைத்தான் இறுதியான ஆனந்த நிலை என்கிறோம். இது இறைவனுக்கு தான் கட்டுப்பட்டது எனும் அறிவு பெற்று அதனால் இறைவனில் அன்பு செலுத்தும். இவ்வாறான அன்பு அல்லது பக்தியே மோட்சத்திற்குரிய வழி. இவ்வன்பு வழியன்றி வீடுபேற்றிற்கு வேறு வழியில்லை என்பது மத்துவ வேதாந்தக் கருத்து (T.M.P.மகாதேவன:146). இறைவனுக்கும் ஆன்மாவிற்குமான இணைப்பை கொடுப்பவர் வாயு. ஆன்ம விடுதலைக்கு இறைவன் அருள் வேண்டும் என விஷ்ணு தத்துவ நிணயம் கூறுகிறது. பேரின்ப நிலையிலும் ஆன்மாக்களிடத்து சமமின்மை காணப்படும். இச்சமமின்மை என்பது முரண்பாடு எனும் அர்த்தமல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

1.11. மத்துவ வேதாந்த அறிவாராய்ச்சியியல்

அறிவாராய்ச்சியியல் என்பது அறிவு தொடர்பான தத்துவார்த்த விளக்கங்கள். அறிவு என்பது என்ன, அறிவைப் பெறும் மூலங்கள் எவை, உண்மையறிவு என்றால் எது, போலி அறிவு எது முதலான விடயங்களை முறைமைப்படுத்திய விதத்தில் விளக்குவதாக அமைந்திருக்கும். மத்துவ வேதாந்தத்தின்படி அறிவென்பது அறிபவருக்கும் அறிபொருளுக்கும ஒரு சுதந்திர யதார்த்தத்தை வெளிக்காட்டுவதாகும். இவ்வாறான அறிவே மாறா வலிதானது (Intrinsic Validity) என உறுதியாகக் கூறுகிறது (C.Sharma:373). இவ்வாறான வலிதான அறிவே உலகின் இயல்பான வேறுபாடுகளை அறிய முடியும் என்பது இதன் நிலைப்பாடு. இதற்காக மத்துவ வேதாந்தம் மூன்று முக்கிய பிராமணங்களையும் ஏற்கிறது. அவை காட்சி (பிரத்தியட்சம்), அனுமானம், உரை (ஆப்த வாக்கியம்) என்பனவாகும். இங்கு ஒப்பீடு (உபமானம்) என்பது அனுமானத்தின் ஒரு வகையாகவே கருதப்படுகின்றது. காட்சி என்பது புலன்கள் மூலம் பெறுகிற நேரடி அறிவு நிலையாகும். அனுமானம் பெறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் ஒரு விடயத்தினை புரிந்து கொள்வதாகும். மத்துவரின்படி காட்சியும் அனுமானமும் பிரபஞ்சத்திலுள்ள புதிர்களை தெளிவாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. இங்கு காட்சி புலன்களது ஆளுகைக்குட்பட்டவற்றை மாத்திரம் கொண்டிருக்கும். அனுமானம் வேறு மூலங்களால் பெறப்பட்ட விடயங்களை பரீட்சிக்கவும் முறைமைப்படுத்தவும் உதவினாலும் அதனால் புதியதொரு அறிவினைத் தர முடியாது. உலகம் பற்றிய யதார்த்தத்தை அறிவதற்கு வேதங்ளையே நம்ப வேண்டும் என்பது மத்துவர் நிலைப்பாடு. மத்துவர் வேதத்தை முழுமையும் நம்பிக்கைக்குரிய வழியாக கொள்வதுடன் அவற்றிற்கிடையில் வேறுபாடுகளைக் கொள்ளவில்லை. உபநிஷதத்தைப் போன்றே வேதங்களின் மந்திரங்களும் பிராமணங்களும் பிரயோசனமுடையதும் வலிதானவையுமாகும். ஆனால் ஆப்த வாக்கியங்களை வகைப்படுத்தியே அதன் மூலம் பெறும் அறிவின் வலிதுத் தன்மையை மத்துவர் ஏற்கிறார். இவர் மனிதர்களால் படைக்கப்பட்ட (பௌருஷேயம்) விடயங்களில் போலியறிவுக்குச் சந்தர்ப்பமுள்ளது எனவும், மனிதர்களால் படைக்கப்படாதிருக்கின்ற ஆப்தவாக்கியங்கள் வலிதுடைமைக்குரியதும் எவராலும் உருவாக்கப்படாத அபௌருஷேயம் அதிகாரபூர்வ வலிதுடையது (Radhakrishnan.S.:739) என்கிறார். இங்கு உருவாக்கப்படாதது என்பதே இதன் அர்த்தமாகும். வியாச தீர்த்தர் இதனை கடவுள் படைத்தார் என புனிதம் தேடுவதை விட இது ஒருவரின் படைப்பாற்றலுக்கு அப்பாற்பட்டது என்பதனாலேயே வலிதுடையது என்பதே பொருத்தம் (S.Dasgupta:203) என்கிறார்.

மத்துவ வேதாந்தம் கூறும் அறிவின் வலிது பற்றிய கருத்துக்களில் உளப் பற்றறிவிற்கும் (Apprehension) முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. உளப்பற்றறிவு என்பது புறவுலகில் உள்ளவற்றை நேரடியாக உள்வாங்கிக் கொள்ளும் ஒரு அறிவுச் செயற்பாடாகும். உளப்பற்றறிவுதான் அறிவு பெற்றதற்கான நேரடி ஆதாரம். அறிவு பெற்றதன் பின் புலன்களின் செயற்பாடு முடிந்துவிடும். ஆனால் அதனை நிலைநிறுத்துவது உளப்பற்றறிவு ஆகும். சூரியன் உதிப்பதனையும் மறைவதனையும் காண்டல் அனுபவம் மூலம் பெற்றாலும் அதனை உறுதிப்படுத்திக் கொள்வது உளப்பற்றறிவு மூலமாகும். ஒன்று பொய்ப்பிக்கப்படும் வரைக்கும் அதுவே வலிதானதாகும். உளப்பற்றறிவின் உள்ளார்ந்த வலிதுத் தன்மையினை ஏற்றுக் கொள்வதுடன் அறிவென்பது வெறும் தோற்றமே என்பதனை நிராகரிப்பவராக மத்துவர் காணப்படுகிறார் (Radhakrishnan.S.:740).

அறிவுடன் தொடர்புபடும் மாறிகளின் இயல்பு பற்றியும் மத்துவ வேதாந்தம் விளக்குகிறது. அறிவு அல்லது அனுபவம் என்பது பற்றிய ஆய்விலீடுபட்ட மத்துவர் அறிபவனும் அறிபொருளும் இல்லாது அறிவு சாத்தியமில்லை என்கிறார். அறிவுச் செயற்பாட்டிற்குரிய விடயம் (Subject) அறிதலுக்குரிய பொருள் (Object) எனும் இரண்டுமின்றி அறிவு பற்றிப் பேசுதல் அர்த்தமற்ற விடயம் என்பது இவரின் நிலைப்பாடு. உலகம் என்பது உண்மையற்ற ஒரு பொருள் எனும் வாதம் யதார்த்தமற்றது. ஒவ்வொன்றிற்கும் தனியிருப்பும் வேறுபாடும் உளது. பொருட்களின் வேறுபாட்டை நாம் நிராகரிப்போமாயின் கருத்துக்களிலும் வித்தியாசம் இருப்பதை நியாயப்படுத்தமுடியாது. வேறுபாடு என்பது இருப்புடையது என்பதை எமது அறிவு உணர்த்துகிறது. இந்நிலையிலேயே அவர் உண்மைப் பொருளின் இருப்பினை நிரூபிக்கின்றார். இவரின்படி உண்மைப் பொருள் (பதார்த்தம்) இருவகைப்படும். அவை சுதந்திரமானது (ஸ்வதாந்திரம்) தங்கியிருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பரதாந்திரம்) என்பனவாகும். பிரமனே சுதந்திரமான உள்பொருள். ஏனையவை தங்கியிருப்பனவாகும். அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். அவை நேர்நிலை உடையவை (பாவம்) மறைநிலையுடையவை (அபாவம்) என்பனவாகும். நேர்நிலையுடையவற்றுள் உணர்வு நிலையுடைய (சேதனம்) ஆன்மாக்கள் என்பனவும் சடம், காலம் முதலிய உணர்வற்ற (அசேதனம்) பொருட்கள் எனவும் இருவகையுளது. இவ்வகையான வேறுபாடுகள் இருப்பினும் அவை அனைத்தும் தனியிருப்புடைய உண்மைப் பொருட்கள் என்பதே மத்துவ வேதாந்தத்தின் அடிப்படை வாதமாகும்.

1.12. மத்துவ வேதாந்தமும் இராமானுஜ வேதாந்தமும் – ஒரு ஒப்பீடு

மத்துவருக்கு முந்திய வேதாந்த மரபினருள் இராமானுஜர் (1017-1137) முக்கிய சிந்தனையாளர். இராமானுஜர் சங்கரருக்குப் பின் வேதாந்தக் கோட்பாட்டை முன்வைத்த ஒருவர். இராமானுஜரது முக்கிய நூல்களாக சிறிபாஸ்யம், கீதாபாஸ்யம், வேதாந்த சாரம், வேதாந்த தீபம், வேதாந்த சங்கிரகம் என்பவற்றைக் குறிப்பிடலாம். சங்கர வேதந்தத்தின் தொடர்ச்சியாகவே இதனைக் கொள்ள முடியும். இவருடைய வேதாந்தம் விஷிட்டாத்துவைதம் (Qualified Non dualism) எனப்படுகிறது. பரம்பொருள் ஒருமைப்பாடுடையது. இது பலவகைத் தன்மையினால் அடையாளப்படுத்தப்படுகிறது. விஷேடணங்கள் எனும் கூறுகளுடன் இணைந்து தொடர்புடையதாகவும் தங்கியிருப்பதாகவும் இருக்கிற ஒரு முழுமையே (விஷிட்டம்) பிரமமாகும். ஏனையவை கட்டுப்படுத்தும் ஆன்மா (விஷேஷ்யம்) எனப்படுகிறது. ஆன்மாவை ஒரு உண்மை அறிவாளியாகவும் (ஞானாத்தம்) உண்மை முகவராகவும் (கருத்தா) அனுபவிப்பாளராகவும் (போக்தர்) இவர் காட்டுகிறார். அறியாமையையும் கன்மத்தையும் தளைகள் என்று குறிப்பிடுகிறார். விஷ்ணுவே பிரமன் என்பதால் பிரபக்தி நிலையான சரணாகதியே (Absolute Self-Surrender) வைகுந்தத்திற்கான வழியாகும் என்பது இவர் கோட்பாடு. இந்த வகையில் இவரது சிந்தனை மத்துவ வேதாந்த சிந்தனையுடன் சில அம்சங்களில் ஒத்தவியல்பைக் கொண்டிருப்பதால் இவ்விரு வேதாந்தங்களையும் ஒப்பிட்டு நோக்குவது வேதாந்த தெளிவைப்பெற அவசியமானது.

மத்துவ வேதாந்த சிந்தனை ஒரு தூய வைஷ்ணவ சிந்தனையாக இருப்பதனாலும், இராமானுஜரின் சிந்தனையுடன் சில விடயங்களில் ஒத்தவியல்பைக் கொண்டிருப்பதனாலும் இரு சிந்தனைகளையும் ஒப்பிட்டு நோக்குதல் மத்துவ வேதாந்த ஐயங்களை நீக்கிக் கொள்வதற்கு வசதியாகவிருக்கும். கடவுள், சீவன், உலகம் என்பன உண்மையான வேறுபட்ட பதார்த்தங்கள். மற்றும் பிரமனது நிலை, ஆன்மாவின் இயல்பு, முத்தி மார்க்கம் முத்தி இயல்பு என்பவற்றில் இரு சிந்தனைகளிலும் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. ஆனால் பல நிலைகளில் வேறுபாடுள்ளது. இதனைப் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.

1. தமது கோட்பாடு என்ன என விளக்கும் கோட்பாட்டு அடிப்படைகள் மாறுபட்டன. உள்பொருள் எத்தனை அதன் இயல்புகள் என்பன .பற்றிய விளக்கம் வேறுபடுவது முக்கிய பண்பாகும். மத்துவர் தெளிவாக தனது கோட்பாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மைவாதமாகக் காட்டுவதுடன் பண்புப்படுத்தப்பட்ட முழுமைவாதத்தில் (Qualified Absolitism) நம்பிக்கையற்றவராக உள்ளார். இராமானுஜரின்படி வேறுபாடென்பது தனியான இருப்புடையதல்ல என்பதுடன் அது எதனைப் பண்பாகக் கொண்டிருக்கிறதோ அவ்வடையாளத்திலேயே தங்கியுள்ளது. எனவே அடையாளம் என்பது நிறுவுவதற்கான ஒரு இறுதிச் சொல்லாகும். ஆனால் மத்துவரின்படி வேறுபாடு தனித்தனியான இருப்புள்ளது என்பதுடன் விடயங்களின் வேறுபாடு ஒருவித ஒத்தவியல்பைக் கொண்டிருக்கின்றன. இவை அடையாளங் காண்பதற்குரிய வெறும் பண்புகள் மட்டுமல்லாமல் வேறுபாட்டின் அடிப்படைகளுமாகும் என்பது மத்துவ வேதாந்தம்.

2. இராமானுஜர் இறைவன் உடலுக்கும் இறைஆன்மாவுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை முன்வைக்கின்றார். ஆனால் மத்துவர் இறைவன் உடலுக்கும் இறைஆன்மாவுக்கும் இடையில் எவ்வித வேறுபாட்டையும் முன்வைக்கவில்லை. ஆகவேதான் இறையை உலகத்தின் நிமித்த காரணனாகவே காட்டுகிறார். இவரின்படி பிரகிருதியே முதற்காரணம், இறையில்லை. பிரகிருதியின் மூலப்பொருள் தொகுதியிலிருந்தே பிரமன் உலகைப் படைக்கின்றான் என்பது இவர் கருத்து. இராமானுஜர் பிரமத்தை முதற்காரணமாகவும் நிமித்தக் காரணமாகவும் காட்டுகின்றார்.

3. மத்துவர் திரவியம் (Substance) மற்றும் திரவியமல்லாதன (Non-Substance) என்பவற்றிற்கிடையிலுள்ள வேறுபாடு, இவற்றை பாகுபடுத்த முடியாதிருக்கும் உறவு எனும் இரு இயல்பையும் நிராகரிக்கிறார். இதனைத் தெளிவுபடுத்த இவர் அடையாளங்களின் ஒற்றுமை மற்றும் திரவியங்களில் உள்ள தனித்த பண்புகளின் (விஷேஷம்) மூலமான வேறுபடும் இயல்பு என்பவற்றை விளக்குகிறார். எனவே திரவியங்களிலுள்ள பண்புகளும் (Attributes) உண்மையானதாகும். எனவேதான் மத்துவர் பிரமனின் உடலாக சடவுலகையும், ஆன்மாவையும் குறிப்பிடவில்லை. சடமும் ஆன்மாவும் தங்களுக்குள்ளே வேறுபட்டன என்பதுடன் பிரமனிலிருந்தும் வேறுபட்டன. சடமும் ஆன்மாவும் கடவுளின் இயல்பைப் பெற்றனவல்ல. ஏனெனில் அவை தங்களுக்குரிய இயல்பைத் தாமே கொண்டிருக்கின்றன. பிரமன் ஆன்மாவினை இயல்பாகவே ஆள்பவராக இருப்பினும், சடமும் ஆன்மாவும் பிரமனில் தங்கியிருப்பினும் அவை பிரமத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டன. அவை கடவுளின் வடிவத்தைப் பெற முடியாது.

4. இராமானுஜர் ஒரு சில நிபந்தனைகளைத் தவிர பொதுவாக வீடுபேறடைந்த ஆன்மாவும் பிரமமும் ஒத்த இயல்புடையன என்கிறார். படைப்பாற்றல், உலகைக் காத்தல், அழித்தல், பிரபஞ்சத்தை ஆட்சி செய்யும் உட்சக்தியைக் கொண்டிருத்தல் எனும் இயல்புகளை விட அனைத்து இயல்புகளும் வீடுபேறடைந்த ஆன்மாவுக்கும் பிரமத்திற்கும் ஒன்றே என்கிறார். ஆனால் மத்துவர் வீடுபேறடைந்த ஆன்மாவுக்கும் பிரமத்திற்குமிடையில் வேறுபாடுள்ளமையை ஏற்று அதனை விபரிக்கின்றார். ஆன்மா வீடுபேறடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பிரமத்தின் சில சமமான இயல்புகளைப் பெறுகின்றன. இருந்தும் இவ்வியல்புகளும் பிரம இயல்புகளை விடத் தாழ்ந்ததாகவே இருக்கும் என்கிறார். இது பிரமத்தின் முழு பேரின்பத்தையும் அனுபவிக்காது. இவ்வாறான பேரின்பத்தை அனுபவிக்கக் கூடிய சில நிலையான ஆன்மாக்கள் உள்ளனவெனவும் அவை நான்கு வகைப்படுமெனவும் அவர் விளக்குகின்றார். அவை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பனவாகும். சாலோகம் என்பது கடவுளுடன் அதே இடத்தில் வாழ்தல் என்பதனையும், சாமீபம் என்பது கடவுளுக்கு அருகில் இருத்தல் என்பதனையும், சாரூபம் என்பது கடவுள் கொண்டிருப்பது போன்ற தோற்றத்தைப் பெறுவது என்பதனையும், சாயுச்சியம் என்பது கடவுளின் உடலில் புகுந்து அவருடன் இருந்து அவருடைய பேரின்பத்தில் பகுதியை பங்கிடுதலையும் குறிக்கும். எனவே இராமானுஜரின்படி வீடுபேறடைந்த ஆன்மா முழு பேரின்பத்தை ஒத்தவியல்பாக அனுபவிக்க, மத்துவர் கூறும் விடுபேறடைந்த ஆன்மா சாயுச்சிய நிலையில் மட்டுமே பேரின்பத்தை அனுபவிக்க முடியும். அதுவும் பங்கிடுதல் நிலை எனவும் அவ்வான்மா பிரம நிலைக்குச் (பிரம-பிரகாரம்) சமனாக வரமுடியாது எனவும் கூறுகிறார்.

5. மத்துவரின் விடுதலை பெறா ஆன்மாக்கள் பற்றிய சிந்தனையும் இராமானுஜரில் இருந்து வேறுபட்டது. இவர் பேய், ஆவி, மற்றும் சில மனிதர்கள் நிலையான ஊழும், சாபமும் (Doomed and Damned) பெற்றவர்கள். இவர்கள் ஒருபோதும் வீடுபேற்றை எதிர்பார்க்க முடியாது என்கிறார். இச்சிந்தனை இராமானுஜரால் நிராகரிக்கப்படுகிறது. இந்திய சிந்தனை மரபில் மத்துவரும் சமணமுமே நிலையான சாபம் பற்றிய போட்பாட்டை முன்வைத்த சிந்தனா கூடங்கள்.

6. இராமானுஜரின் ஆன்மா பற்றிய தத்துவம் அளவுசார் பன்மைவாதமும் பண்புசார் ஒருமைவாதமும் ஆகும். இதன்படி இவர் ஆன்மாக்கள் பல எனக் கூறினும் அவை எல்லாம் ஒரே மாதிரியானவை என்கிறார். ஆனால் மத்துவர் இது சார்பாக அளவுசார் பண்புசார் பன்மைவாதத்தை முன்வைக்கின்றார். இதன்படி எந்தவொரு இரு ஆன்மாவும் ஒத்த தன்மையாயிராது. தனித்துவம் (Individuality) என்பது ஆன்மாக்களுக்கு இருப்பதுடன் தனியியல்பும் (Peculiarity) காணப்படுகின்றது.

7. ஆன்மாக்கள் விடுதலை நிலையிலும் வேறுபாடுடையன என்பது மத்துவரது நம்பிக்கை. ஆன்மாக்கள் தங்களின் அறிவுடைமை, பேரின்ப அனுபவிப்பு என்பவற்றின் அளவிற்கேற்ப விடுதலை நிலையிலும் தன்மையில் வேறுபாடுடையன என்கிறார். ஆனால் இராமானுஜர் இந்நிலையில் மாறுபாடுடைய சிந்தனையாளர். இராமானுஜரின்படி பேரின்ப நிலையில் ஆன்மாக்கள் ஒத்திவில்புடைன என்பதன் அடிப்படையிலும் வேறுபாடுடையவராகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை :

சமயம்சார் தத்துவக் கோட்பாடுகள், அதிலும் சிறப்பாக இந்திய தத்துவ கொள்கைகள் உள்பொருள் பற்றிய ஆய்வுகளையே மேற்கொண்டன. உண்மைப் பொருள் ஒன்றா? இரண்டா அல்லது பலவா என்பதும் அவற்றின் இயல்புகள் எத்தகையன என்பதும் இவற்றின் ஆய்வு மையங்களாகின. இச்சிந்தனைகள் ஆத்திக, நாத்திக மரபு என இருவகையானதாகும். இவற்றில் வேதாந்தம் ஆத்திக மரபுசார் ஒரு சிந்தனாகூடம். வேதாந்த தத்துவங்கள் வேறுபட்ட நோக்கு நிலைகளிலிருந்து இவ்வாய்வு விடயங்களை ஆராய்ந்ததன் காரணத்தால் வேதாந்தத்திற்கு இந்திய சிந்தனை மரபில் சிறப்பிடம் உளது. அத்வைதம், விஷிட்டாத்துவைதம், துவைதம் என்பன வேதாந்தத்தின் முக்கிய சிந்தனா பிரிவுகளாகும். இவற்றில் அத்வைதமும் விஷிட்டாத்துவைதமும் சிற்சில இடங்களில் ஒத்த இயல்புடையனவாகவும் சில இடங்களில் வேறுபட்டனவாகவும் உள்ளன. ஆனால் துவைதம் ஒரு தனியானதும் தனக்கேயுரிய தனித்துவத்தையும் கொண்டதாகக் காணப்படுகிறது. இது தன்னை அத்வைதத்திற்கெதிரான சிந்தனை என அறிமுகப்படுத்துவன் மூலம் இதனை உணரலாம். துவைதம் உள்பொருள் பலவாகும் எனும் பன்மைக் கொள்கையை முன்வைத்து, தத்துவ பிரிவுகளில் தனித்துவமான சிந்தனா துறையாக உள்ளது.

உசாத்துணை நூல்கள்

1. இராமச்சந்திரன். தி.ப. **துவைத வேதாந்தம்**, சென்னைப் பல்கலைக்கழகம், 1981.

2. கந்தசாமி.சோ.ந. **இந்திய தத்துவ களஞ்சியம்**, தென்னகத் தத்துவங்கள், *தொகுதி - 3,* மெய்யப்பன் பதிப்பகம், சென்னை-2003.

3. மகாதேவன்.T.M.P. **இந்து சமய தத்துவங்கள்**, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1964.

4. Dasgupta.S. **A History of Indian Philosophy**, *Volume-IV*, Motilal Banarsidass Publication, Delhi, 1991.

5. Radhakrishnan.S. **Indian Philosophy**, *Volume –2*, Centenary Edition, Oxford University Press, 1991.
   Sharma.C. **A Critical Survey of Indian Philosophy**, Motilal Banarsidass Publication, Varanasi, 1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மலையகத் தமிழர்களும் குடியுரிமைப் பிரச்சினையும்

-வேலுப்பிள்ளை குணரத்தினம்-

1.0 அறிமுகம்

நீண்டதொரு காலப்பகுதியில் பல வல்லரசுகள் ஒரு நாட்டினை ஆட்சி புரிந்தால் அரசியல் நிலை, பொருளாதார நிலை, சமூக நிலை என்பவற்றில் சிக்கலான நிலையினைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கலாம். இச் சிக்கலான நிலையிலிருந்து நாட்டைப் படிப்படியாகச் சுயமான அபிவிருத்தி நோக்கித் திருப்பிவிடுவதன் மூலம்தான் சுதந்திரமானது அர்த்தமுடையதாக இருக்கும். ஆனால், இலங்கையில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பின்பற்றிய கொள்கையானது அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை உறுதிசெய்தல் வேண்டும் என்பதற்குப் பதிலாக, தாம் கைப்பற்றிய அரசியலதிகாரம் தம்மைவிட்டு நழுவிச் செல்லவிடாது பாதுகாத்துக் கொள்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. அந்த வகையில், சுதந்திரத்திற்குப் பின் அரசாங்கம் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகளில் ஒன்று, இலங்கையில் இருந்த இந்தியத் தமிழர்கள் பிரச்சினையாகும். அதாவது, இலங்கையின் பெருந்தோட்டச் செய்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கியமையும், அதனால், பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட்ட இந்தியத் தமிழர்கள் இந்நாட்டின் அரசியலில் கூடிய செல்வாக்கினைப் பெற்றுவிடுவார்கள், சந்தர்ப்பம் ஏற்படும் போது இந்த ஊழியப்படை தம்மை தனி நிலையில் முறியடிக்கக் கூடிய சக்தி வாய்ந்தது என்பதையும், அவ்வகையில் அரசியல் ரீதியான அபிலாசைகளுக்கு அது முட்டுக்கட்டை போடக்கூடியது என்ற அச்சத்தினையும் முதலாளித்துவ சக்திகள் அல்லது அரசியற் சக்திகள் கொண்டிருந்தன. இத்தகைய அரசியல் சூழலில் இம்மக்கள் நாட்டின் அரசியலில் பங்குபற்றுவதற்கான அடிப்படைத் தகுதியாக குடியுரிமை அமைந்திருந்தது. அதனால், நாட்டின் அரசியல் விடயங்களில் அவர்கள் கொண்டிருக்கக் கூடிய செல்வாக்கு மேலும் அதிகரிக்காதவாறு முளையிலே கிள்ளித் தடுக்க வேண்டியது அரசாங்கத்தைப் பொறுத்தவரை உடனடித் தேவையாக இருந்தபோதிலும் அத்தேவையைச் சுதந்திரத்தை அடுத்தே பூர்த்தி செய்ய முடிந்தது. சுதந்திரத்தின் பின்னர் அரசாங்கம் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய குடியுரிமைச் சட்டங்களால் இந்தியத் தமிழர் நாடற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அரசாங்கத்தின் இந்நடவடிக்கையால் இந்தியத் தமிழர் அல்லது மலையகத் தமிழர் தாம் வாழ்ந்த நாட்டிலேயே வாழ்நாள் முழுவதும் வெறும் தொழிலாளர்களாகவே முடங்கிக் கிடக்கும் ஒரு நிலைக்குத் தரம் குறைக்கப்பட்டனர். ஆகவே, இந்தியத் தமிழர் அரசியல் அனாதையாக்கப்பட்டு அவர்களின் ஒருமித்த முன்னேற்றம் ஒரு நீண்ட காலத்திற்குப் பிற்போடப்பட்டது. இத்தகைய பாரபட்சமான நிலைமைகளை உற்றுநோக்கும்போது தான் அவற்றின் உண்மைத் தாற்பரியங்களை விளங்கிக் கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.0 மலையகத் தமிழர்களின் பின்னணி

மலையகத் தமிழர்களுக்கு இலங்கையில் சில நூற்றாண்டுகால தனித்துவமான வரலாறும், சமூகப் பொருளாதாரப் பின்னணிகளும் உண்டு. பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தினால் இலங்கையில் பெருந்தோட்டப் பொருளாதாரம் திணிக்கப்பட்டதிலிருந்து இவர்களின் வரலாறும் ஆரம்பமாகின்றது. அதாவது, பிரித்தானியர் ஏற்றுமதியினை நோக்காகக் கொண்டு பெருந்தோட்டச் செய்கைகளை உருவாக்கியதோடு, இலங்கையின் மலையகத் தமிழர்களின் வரலாறும் ஆரம்பமாகின்றது. பெருந்தோட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பொழுது அத்தேவையை உள்நாட்டவர் பூர்த்தி செய்ய முன்வரவில்லை. இதனால் அயல் நாடாகிய தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளரைத் தருவித்துக் கொள்வதன் மூலமே அத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. ஐ.டி.எஸ். வீரவர்த்தனா (I.D.S. Weerawardana) இதுபற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்;

> "இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை 1820களில் பெருந்தோட்டச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதும் ஏற்பட்டதொன்றாகும். பாரியளவில் பெருந்தோட்டச் செய்கை ஆரம்பிக்கப்பட்டபொழுது உள்நாட்டுத் தொழிலாளர்களைப் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. பெருமளவில் பொருளாதார நன்மைகள் இல்லாமல் தங்களது வாழ்க்கை வசதிகளை நோக்காமல் இத்தொழிலை இலங்கையில் வாழ்பவர்கள் ஏற்றுக்கொள்ள முன் வரவில்லை. எவ்வாறாயினும், பெருந்தோட்ட முதலாளிகள் தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களை வரவழைப்பதன் மூலமே தொழிலாளர் பிரச்சினையைத் தீர்த்தனர்".

தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்தார்கள். இத்தொழிலாளர்களின் இலங்கை நோக்கிய வருகை மிகவும் துன்பகரமாக இருந்தது. ஆரம்பத்தில் கோப்பிப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கின்ற போதும், கோப்பி சேகரிக்கின்ற போதும் தான் அதிகமான தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். இதனால், ஆரம்பத்தில் அதிகளவு தொழிலாளர்கள் இலங்கை வந்த பொழுதும், பின்னர் தென்னிந்தியா நோக்கித் திரும்பிச் சென்றும் உள்ளார்கள். பின்னர், கோப்பிச் செய்கை கைவிடப்பட்டு, தேயிலைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், தொழிலாளர்களுக்கான தேவை வருடம் முழுவதும் இருந்தமையால் இந்தியத் தொழிலாளர் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கி வாழ்ந்ததுடன், அவர்கள் தொடர்ச்சியாக இலங்கை வந்தனர். இதுபற்றி "ஹவாட் றிக்கின்ஸ்" (W.Howard Wriggins) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

> "19ம் நாற்றாண்டில் இலங்கையில் துரித சனத்தொகை வளர்ச்சியில் இந்தியாவிலிருந்து வந்த இந்தியத் தமிழர்கள் பெரும்பங்கை எடுத்துக்கொண்டார்கள். 1871ம் ஆண்டுக்கும், 1881ம் ஆண்டுக்கும் இடையில் கோப்பிப் பயிர்ச்செய்கைக்காக ஆண்டுதோறும் 24,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியர்கள் இங்கு கொண்டுவரப்பட்டார்கள். 1891ம் ஆண்டில் தேயிலைப் பயிர்ச்செய்கை விஸ்தரிக்கப்பட்டதும் வருடா வருடம் 34,000 இந்தியர்கள் வந்தார்கள். இவ்வாறு வந்து குடியேறியவர்கள் நாட்டின் மொத்த சனத்தொகையில் 10% பங்கெடுத்துக் கொண்டார்கள். 1901இல் இருந்து 1911 வரை புதிய இந்தியத் தமிழர்கள் வருடா வருடம் வந்ததனால் குடிசன மதிப்பீட்டில் 5% அதிகரிப்பு ஏற்பட்டது. இவை சாதாரண அதிகரிப்புக்கு மேலாக இருந்தது".

இலங்கைத் தொழிலாளர்கள் வரலாற்றில் இன, மத உணர்வுகளுக்கு அப்பால் வர்க்க உணர்வுகள் மேலோங்கி இருந்த காலகட்டம் ஆரம்பத்தில் காணப்பட்டது. அவர்கள் ஒற்றுமையே பலம் என்றவகையில். இன ஒற்றுமையின் அடிப்படையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பக் காலகட்டங்களில் அமைத்துக் கொண்டார்கள். ஆனால், 1920களில் இந்தியத் தமிழர்கள் இலங்கையில். அரசியல் பிரச்சினைக்கு உரியவர்கள் என்று பெரும்பான்மையினத்தால் நோக்கப்பட்டது. டொனமூர் சீர்திருத்தத்துக்கு முன்னர் 4% மக்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்று இருந்தபோதும் இந்தியத் தொழிலாளர்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை. டொனமூர் ஆணைக்குழுவினர் இந்தியத் தொழிலாளருக்கும் வாக்குரிமை வழங்க முன்வந்த பொழுது, சிங்களத் தலைவர்கள் அதனை எதிர்த்தனர். வாக்குரிமையானது நாட்டின் நலனில் அக்கறை உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்றும் வந்தேறு குடிகளுக்கு வழங்கக்கூடாது என்றும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆயினும், டி.எஸ்.சேனநாயக்கா "இந்தியத் தமிழர்களை அந்நியர்களாகக் கருதவில்லை" என்று கூறி, அவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். இவ்வாறான, வாதப்பிரதிவாதங்கள் மத்தியில் இந்தியத் தொழிலாளர்களுக்கு முதன் முறையாக வாக்களிக்கும் உரிமை 1931ம் ஆண்டு கிடைத்தது. இதனால், 1931ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சட்ட சபைக்கு 3 பிரதிநிதிகளை இந்தியத் தமிழர் சார்பில் தெரிவுசெய்யக் கூடியதாக இருந்தது. 1936
ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இந்தியத் தமிழர் 02 ஆசனங்களைப் பெறமுடிந்தது. "மொத்தமாக 1,45,000 இந்தியத் தமிழர்கள் வாக்களிக்கக்கூடிய நிலையில் இருந்தனர்" என குமாரி ஜெயவர்த்தனா குறிப்பிட்டுள்ளார்.

ஜவர்கலால் நேரு 1939 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த பொழுது, இந்தியத் தமிழர்களின் பிரச்சினை பற்றி டி.எஸ்.சேனநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால், இப்பேச்சுவார்த்தை தோல்வியிலே முடிந்தது. 1935இன் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் இந்தியத் தமிழர்கள் காணி பெறும் உரிமையை மட்டுப்படுத்தியும் தடுத்தும் செயற்பட்டது. 1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பின் கீழ் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் சார்பில் 07 ஆசனங்களைப் பெற்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அபேட்சகர்கள் நியமிக்காத இடங்களில் இந்திய வம்சாவழியினர் . தம் வாக்குகளை இடதுசாரி அபேட்சகர்களுக்கு அளித்தனர். அதைத் தொடர்ந்து இனத்துவ அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி என்பது வெளிப்படையாகக் கண்டறியக்கூடிய வகையில் வளர்ச்சியடைந்தது. அதனுடன் இணைந்த வகையில் மறைமுகமாக ஏற்பட்டுக் கொண்டிருந்த இன்னொரு சம்பவம் இனத்துவ அரசியலின் மறுபக்கம் எனக் கூறக்கூடிய வகையில் வர்க்க அடிப்படையில் அரசியல் மென்மேலும் பலவீனம் அடைந்துகொண்டு சென்றமையாகும். நாட்டில் உயர் குழாத்தினரைக் கொண்டிருந்த இந்த வர்க்கமானது இலங்கை சுதந்திரம் (1948) அடைந்த போது நாட்டின் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது. இந்திய வம்சாவழித் தமிழர்கள் புரட்சிகர சக்திகளாக வளரக்கூடியவர்கள். ஆகவே, அவர்கள் தங்களின் எதிரிகள் என்பதனைப் புரிந்துகொண்டார்கள். இலங்கையில் அவ்வர்க்கம் மக்களாட்சி அடிப்படையில் அரசியல் அதிகாரத்தை தம்வசம் வைத்துக் கொள்வதில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்டது. அதன் வழி இந்திய வம்சாவழி தமிழர்களது குடியுரிமையை, வாக்குரிமையைப் பறிக்க வேண்டியது அல்லது தடுக்க வேண்டியது அவசியமாயிற்று. அதன்படி, இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதிராக பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து அவர்களது குடியுரிமையை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தடுத்தது.

3.0 குடியுரிமைச் சட்டங்கள் :

ஐக்கிய தேசியக் கட்சி அராசாங்கம் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதிராகக் கொண்டுவந்து நிறைவேற்றிய சட்டங்கள் பின்வருமாறு,

01. 1948ம் ஆண்டு 18ம் இலக்க குடியுரிமைச் சட்டம்
02. 1949ம் ஆண்டு 3ம் இலக்க இந்திய பாகிஸ்தானிய வதிவாளர் சட்டம்
03. 1949ம் ஆண்டு 48ம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் திருத்தச்சட்டம்

1948ம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில் மூன்று அடிப்படை விடயங்கள் அடக்கப்பட்டுள்ளன.

01. வம்சாவழிக் குடியுரிமையைப் பெறும் ஏற்பாடுகள்.
02. பதிவு செய்வதன் ஊடாக குடியுரிமையைப் பெறும் குடியுரிமை ஏற்பாடுகள்.
03. குடியுரிமையைப் பெற்ற ஒருவர் எக்காரணங்களினால் குடியுரிமையை இழப்பார்கள் என்ற ஏற்பாடுகள்.

இந்தியத் தமிழர்கள் குடியுரிமையைப் பெறுவதாயின் பாட்டன், முப்பாட்டன் ஆகியோர் இலங்கையில் பிறந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கையில் பதிவுசெய்யும் முறை 1897ம் ஆண்டிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன், 1920ற்கு முற்பட்ட பிறப்புப் பதிவுகள் நாட்டின் பல பகுதிகளிலும் காணப்படவில்லை. இச் சட்டப்படி சிங்கள மக்களும் இலங்கைத் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் உடனடியாகக் குடியுரிமையைப் பெற்றவிடத்து, இந்நாட்டில் வாழ்ந்த இந்தியத் தமிழர்கள் தமது பாட்டனார்களின் பிறப்புச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க முடியாத நிலையில் குடியுரிமையை இழக்க நேரிட்டது. இலங்கையில் வாழ்ந்த இந்தியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் அனைவரும் நீண்ட காலமாக இலங்கையில் வாழ்ந்த குடியுரிமைக்கு உரித்துடையவர்கள் என்பது, இந்திய அரசின் வாதமாக இருந்தது. தற்காலிக வேலை வாய்ப்புக்களை நாடியே இந்தியர்கள் இலங்கைக்குச் சென்றனர் என்பது வரலாற்று உண்மை நிகழ்வுகளுக்கு முரணானது என்பது நேருவின் நிலைப்பாடாக இருந்தது. அவர்களை இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ள இந்திய அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. சுதந்திர இலங்கையில் வாழ்ந்த இந்தியர்களின் நாடற்றவர் என்ற பிரச்சினை உருவாக இச்சட்டம் அடிகோலியது என சோ.சந்திரசேகரம் சுட்டிக்காட்டுகின்றார்.

குடியுரிமையை இழந்த இந்தியத் தமிழர்களை தகுதி உடையோருக்கு குடியுரிமையை வழங்கும் நோக்குடன், 1949இல் இந்திய, பாகிஸ்தான் வதிவாளர் சட்டம் கொண்டுவரப்பட்டது. குடியுரிமையைப் பெறுவதாயின் பின்வரும் தகுதிகள் எதிர்பார்க்கப்பட்டன.

1. திருமணமானவராயின் 7 வருடங்களும், திருமணமாகாதவராயின், 1 வருடமும் விண்ணப்பத் திகதிக்கு முன் இலங்கையில் சீவித்திருக்க வேண்டும்.

2. இலங்கையர் ஒருவரின் மனைவியாக அல்லது விதவையாக இலங்கைப் பிரசை ஒருவரினது மரபு வழியாக அல்லது பதிவு செய்யப்பட்டவராக விண்ணப்பத் திகதிக்கு முன் ஒரு வருடம் சீவித்திருக்க வேண்டும்.

3. எவர் ஒருவர் இலங்கையில் பிரசையாக இருக்காமல் விட்டாரோ அப்படியானவர் வேறு ஒரு நாட்டின் பிரஜாவுரிமையை ஏற்றிருந்தால் விண்ணப்பிக்கும் முன் குடியுரிமையை ரத்துச் செய்தவராக இருக்க வேண்டும். இந்த நிபந்தனையின் கீழ் இந்தியத் தமிழர்கள் விண்ணப்பித்த பொழுது 80% வீதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

1949ம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட வேளையில், பலர் வாக்களிக்கும் உரிமையை இழந்தனர். பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கும், அதில் அங்கத்தவராக இருப்பதற்கும், ஆரம்பத்தில் ஒருவர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டுமென்ற சட்டம் ஏற்பாடு செய்தது. அதாவது, இலங்கைக் குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு என விதித்துள்ளது. இதன் உடனடி விளைவாக, வாக்காளர் பட்டியலிலிருந்து இந்தியர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு, அவர்களுடைய வாக்குரிமை பறித்தெடுக்கப்பட்டது. இதன் விளைவாக, 1952-1977 வரை இந்தியத் தமிழர்கள் மலையகத் தேர்தல் தொகுதிகளிலிருந்து ஒரு பிரதிநிதியையும் தெரிவுசெய்ய முடியாமல் போய்விட்டது. அவர்களுடைய நலவுரிமைகளைப் பேண அவ்வப்போது ஒரு நியமன உறுப்பினர் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டார். ஆகவே, முடிந்தவரை இச்சட்டங்களை சிக்கலாக்கி, இந்தியத் தமிழர்கள் வாக்குரிமை, குடியுரிமை பெறுவதைத் தடுக்க முடிந்தது. இதனை தார்ஸி வித்தாச்சி (Trazie Vittachi) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கைக்கு பிரஜாவுரிமைச் சட்டத்தை ஏற்படுத்தி இலங்கைப் பிரஜையாக இருப்பதற்கு வேண்டிய தகுதியையும் தகமையையும் டி.எஸ்.சேனநாயக்கா விபரித்தார். இதன் மூலம் இந்தியத் தமிழர்களின் குடிவரவைக் கட்டுப்படுத்தியது மட்டுமல்லாது, அவர்களது குடியுரிமையையும் தடை செய்தது."

4.0 குடியுரிமையைப் பறிப்பதற்கான காரணங்கள் :

இந்தியத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமையைப் பறிப்பதற்கு அரசியல், பொருளியல் ரீதியான காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக இங்கு ஆராயப்படுகின்றன. அரசியல் ரீதியாக அவதானிக்கையில், இந்தியத் தமிழர்களின் தொழிற்சங்கமயமாதல், தீவிரமான போராட்டங்கள் என்பன அவர்களது அரசியல் ஆற்றலை வெளிப்படுத்தின. 1931 ஆம் ஆண்டு நடேசஐயரின் தலைமையில் தொழிற்சங்கம் நிர்மாணம் பெற்றது. இலங்கைச் சமசமாஸக்கட்சி இந்தியத் தமிழரை ஒருங்கிணைத்து 1939 இலும், 1940 இலும் தீவிரமான தொழிற்சங்கப் போராட்டங்களை நடாத்தியது. இடதுசாரிகளால் நடாத்தப்பட்ட நகர்த்தொழிலாளர்கள், 1945, 1946, 1947களில் தீவிரமாக வேலை நிறுத்தங்களை மேற்கொண்டார்கள். தம் அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய இந்தியத் தமிழர்கள், உடன் சகல இனங்களையும் சார்ந்த தொழிலாளர் ஒன்றிணைவு பற்றியும் முதலாளித்துவ கட்சிகள் பயந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய காலத்தில் தோட்டப் பகுதிகளிலும், நகர்ப்புறத்திலும் நடந்த தீவிரமான வேலை நிறுத்தங்கள் புரட்சிகர எழுச்சியாலும் இந்தப் பய உணர்வு மேலும் அதிகரித்தது.

இந்தியா மீது சிங்களத் தலைவர்களுக்கு இருந்த சந்தேகமும் இந்தியத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிப்பதற்குக் காரணமாக அமைந்தது. "இலங்கையானது இனரீதியாக, மொழி ரீதியாக இந்தியாவின் பகுதியாக இருப்பதால், இந்தியக் கூட்டில் இலங்கை சேரவேண்டும்" என 1945இல் நேரு குறிப்பிட்டார். இக்கூற்று சிங்களத் தலைவர்களைச் சிந்திக்கத் தூண்டியது. "இந்தியத் தமிழர்கள் ஒரு வகை ஐந்தாம் படை வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் தீவின் மையப்பகுதிக்குச் செல்லக்கூடியதாகவுள்ள மார்க்கம் உள்ளவகையில் தந்திரோபாயமாக குடியமர்த்தப் பட்டுள்ளார்கள்" என்றும் சிங்களத் தலைவர்கள் கூற முற்பட்டனர். இதே தொனியில் "இலங்கையில் பிரித்தானியர் இல்லாது போகும் நாளில் இத்தீவானது இந்தியாவின் ஆளுகைக்கு உட்படும்" என சேர் ஜோன் கொத்தலாவலை குறிப்பிட்டார்.

இச்சட்டங்கள் கொண்டுவர முக்கிய அரசியல் காரணியாக இருந்தது 1947ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் இலங்கை, இந்தியக் காங்கிரஸ் 07 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டமையாகும். இலங்கை, இந்திய காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியிடாத ஏனைய மலையக மாவட்டங்களில் போட்டியிட்ட இடதுசாரி வேட்பாளர்களுக்கு இந்தியத் தமிழர்கள் வாக்களித்தார்கள். இதனால், 14 இடதுசாரி வேட்பாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிபெற முடிந்தது. இவ்வாறு நாட்டின் 20%மான தேர்தல் தொகுதிகளில் இந்திய தமிழ் வாக்காளர்கள் தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் வலிமையைப் பெற்றிருந்தனர். இத்தகைய நிலமையில் இந்தியத் தமிழர்கள் இந்நாட்டின் அரசியலில் கூடிய செல்வாக்கைப் பெற்று விடுவார்கள் என சிங்களத் தலைவர்கள் பயந்தார்கள். அதனை ஏ.ஜே.வில்சன் (A.J.Wilson)

> "சிங்களத் தேசியவாதிகள் இந்தியக் குடியிருப்பாளர்களின் அரச உரிமைகளுக்குப் பயந்தார்கள். அதுமட்டுமன்றி, அவர்கள் எவ்விதத்திலும் இலங்கைத் தமிழர்களுடன் அரசியல் ரீதியில் இணைப்படுவார்கள், இணைக்கவும் பட்டார்கள்" என்கிறார்.

ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டி.எஸ்.சேனநாயக்கா பெருவாரியான இந்தியர்கள் குடியுரிமையையும், வாக்குரிமையையும் பெற நேர்ந்தால், தனது கட்சியின் எதிர்கால அரசியல் பாதிக்கப்படும் எனக் கருதியமையால், கடுமையான நிபந்தனை கொண்ட குடியுரிமை வாக்குரிமைச் சட்டங்களைச் சட்ட சபையில் நிறைவேற்றினார்.

மேற்குறிப்பிட்ட அரசியல் காரணங்களை விட, பொருளாதாரக் காரணிகளும் இந்தியத் தமிழர்களின் குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறிப்பதற்கான காரணமாக அமைந்துள்ளன. 1930களில். நாட்டைப் பாதித்த மலேரியா பரவலும், பொருளாதார மந்த நிலையும் இந்தியத் தமிழர்களின் பிரச்சினையில் பொருளாதார அம்சங்களை வெளிக்கொண்டு வந்தன. அதாவது, பொருளாதார நெருக்கடியினால் உள்நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கங்கள் தொழிலாளர்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தின. உணவுப் பஞ்சம், ஏற்றுமதிப் பொருட்களின் விலையேற்றம் போன்றவற்றால் வேலை இழப்புக்களும், வறுமையும் என நிலைமை மோசமடைந்த இக்கட்டத்தில், இன்னொருபுறம், பெருந்தோட்ட உற்பத்தித்துறை வீழ்ச்சியுடன் அதனுடன் தொடர்பான கொழும்பில் செயற்பட்டு வந்த பல்வேறு தொழில்துறைகளும் சரிவடைந்தன. அரச, தனியார் துறை ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதுடன், ஊதியக்குறைப்பும் செய்யப்பட்டது. ஒரு பகுதி இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களை மிகவும் அற்பமான முறையில் முதலாளித்துவ வர்க்கத்தினர் திட்டமிட்டு வேலைக்கு அமர்த்தினர். இந்த நிலைமைகளின் யதார்த்தம் சிங்களத் தொழிலாளர்களுக்குப் புரியவைக்கப்படாமல் பதிலாக, தொழிலாளர் தலைமையினால் இன ரீதியில் திரித்துக் காட்டப்பட்டன. சர்வதேச ரீதியில் ஏற்படும் ஒவ்வொரு பொருளாதார நெருக்கடியை முதலாளித்துவ அமைப்பின் சர்வ வியாபக முரண்பாடுகளின் வெளிப்பாடாகப் புரிந்துகொள்ள விரும்பாத சக்திகள் அவற்றை எவ்வாறு தமது குறுகிய இனவாத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தினர் என்பதை இங்கு காணலாம்.

சுதந்திரம் பெற்றபின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முதலாவது நடவடிக்கையாக அமைந்தது இந்தியத் தமிழர்களின் குடியுரிமையை இல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த விடயமாகும். ஐக்கிய தேசியக் கட்சி நடைமுறைக்கான பயனுள்ள எந்தவொரு திடமான கொள்கையையும் வைத்திருக்கவில்லை என சேர்.ஐவர் ஜெனிங் கூறுகின்றார். ஆயினும், இந்தியத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமையைத் தடுக்க வேண்டும் என்பதில் அது முனைந்து நின்றது. சுதந்திரத்துடன் சகல வர்க்கங்களையும் சேர்ந்த சிங்கள மக்கள் இனமொழியடிப்படையில் பௌத்தரல்லாத மக்களுக்கு எதிரான போருக்குத் தயாராகி அதன் முதல் தாக்குதல் இந்திய வம்சாவழியினருக்கு இடம்பெற்றது.

இந்தியத் தொழிலாளர் வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழக்கூடிய உள்ளார்ந்த பலம் படைத்து இருந்தது மட்டுமன்றி, அவர்களுடைய எண்ணிக்கைப் பலமும் வர்க்க நலனுக்கு ஆபத்தாக அமையும் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதம மந்திரியுமான டி.எஸ்.சேனநாயக்கா உணர்ந்திருந்தார். இது விடயத்தில் சிங்கள மக்களை அந்நிய சக்தியிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தில் உயர் வர்க்கத்தினர் வர்க்க நலனைப் பேண முற்பட்டபோது, அவர்கள் எடுத்துக் காட்டிய அன்னியத் தன்மை என்பது அவர்களுடைய எண்ணத்தைச் சுலபப்படுத்தியது. ஏனெனில், இந்தியத் தமிழர்கள் அந்நியர் எனக் காரணம் காட்டி அவர்களின் அரசியல் உரிமையைப் பறித்துக் கொண்டதன் மூலம் அவர்களை அரசியல் செயற்பாடுகளிலிருந்து ஒதுக்க வைக்க முடிந்தது. அதனை ஐ.டி.எஸ்.வீரவர்த்தனா "இந்நடவடிக்கை எல்லா சிறுபான்மையினருக்கும் கொடுக்கப்பட்ட வாக்குறுதி முறிக்கப்பட்டமைக்கு ஈடாகும்" எனக் குறிப்பிடுகின்றார்.

முற்கூறப்பட்ட மூன்று சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்ட போது மலையகத் தேர்தல் தொகுதிகளில் இந்தியத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறையத் தொடங்கியது. 1949 - 1953 வரையிலான காலப்பகுதியில் 8087 பேர் மட்டுமே இலங்கைக் குடியுரிமையைப் பெற்றனர். இவ்வாறு இந்தியத் தமிழர்களின் வாக்குப்பலம் 1952ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் குறைக்கப்பட்டமையினால் ஓர் ஆசனத்தைக் கூட தக்கவைக்க முடியவில்லை. ஆனால் 1952 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு இந்தியத் தமிழரை நியமித்தனர். ஏனென்றால், பாராளுமன்றத் தேர்தலில் ஒரு இந்தியத் தமிழர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதனால், ஐக்கிய தேசியக் கட்சி முன்னைய தேர்தல்களில் பெற்ற வெற்றியை விட 1952 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற ஆசனங்கள் 42 இலிருந்து 54 ஆக அதிகரித்தன. இடதுசாரிகளின் ஆசனங்கள் இந்தியர்களின் ஆதரவில் 18லிருந்து 13 ஆகக் குறைந்தது.

5.0 குடியுரிமை பெறுவதற்காக மேற்கொண்ட முயற்சிகள்

இந்தியத் தமிழர்கள், இந்திய அரசியல் யாப்பின் உறுப்புரை 5,8 இன் கீழ் இந்தியக் குடியுரிமையைக் கோரமுடியாது. அதாவது, இந்த ஏற்பாடுகளின் கீழ் கடல் கடந்து சென்ற இந்தியர்கள் இந்தியக் குடியுரிமையை கோரத் தகைமை அற்றவர்களாவர். அதேவேளையில், குடியுரிமையை வழங்குவதற்கும் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்தது. அவ்வுரிமை மறுக்கப்பட்டமை சர்வதேச மனித உரிமைச் சாசனத்தின் 15 ஆவது சரத்தை மீறும் செயலாகும். குடியுரிமை பெற ஒவ்வொரு பிரசைக்கும் உரிமையுண்டு. எவர் ஒருவரையும் சட்டவாக்கத்தின் பேரில் குடியுரிமையை ஏற்கச் செய்யவோ, மாற்றம் செய்யவோ கூடாது என மனித உரிமைச் சாசனம் குறிப்பிடுகின்றது. (International Bill of Human rights 1970) p.6) ஆனால், பெருந்தொகையான இந்தியத் தமிழர்கள் நாடற்றவர்களாக இருந்தார்கள். அதனால், இந்தப் பிரச்சினையை இலங்கையும், இந்தியாவும் பேசித் தீர்க்க வேண்டியது அவசியமாயிற்று.

1953ம் ஆண்டு பிரித்தானியாவில் நேருவும், டட்லி சேனநாயக்காவும் நாடற்ற இந்தியத் தமிழர்கள் பற்றிய விடயத்தினை ஆராய்ந்தார்கள். இலங்கை 400,000 பேருக்கு குடியுரிமை வழங்கவும், 10 ஆண்டுகளின் பின் 250,000 பேருக்கு குடியுரிமை வழங்கவும் முன்வந்தது. ஆனால், நேரு 300,000 பேருக்கு இந்தியா குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தார். இதனால், இங்கு உடன்பாடு ஏற்படவில்லை.

1954 ஆம் ஆண்டு ஜனவரியில். புதுடில்லியில் நேருவும், கொத்தலாவலையும் சந்தித்து இலங்கையில் நாடற்ற இந்தியத் தமிழர் பிரச்சினை பற்றி கலந்துரையாடினார்கள். இலங்கை, இந்திய வம்சாவழி மக்களை இந்தியா ஏற்க வேண்டுமென வற்புறுத்திய போதிலும் இந்தியா இதனை மறுத்தது. ஆயினும், பின்வரும் ஒப்பந்தம் இரு தரப்பினருக்குமிடையே ஏற்பட்டது.

1) இலங்கையில் வாழும் கடவுச் சீட்டுள்ள இந்தியர்களை இந்தியா ஏற்றுக் கொள்ளுதல்.
2) அவ்வாறில்லாத மலையகத் தமிழ் மக்களைத் தனியான அட்டவணையில் பதிவு செய்தல்.
3) இவர்களுக்கான பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை (நியமனம்) இலங்கைப் பாராளுமன்றம் காலத்துக்குக் காலம் தீர்மானித்தல்.
4) மலையகத்தில் வாழும் இந்தியத் தமிழர்கள், பெரும்பான்மையினரின் சிங்கள மொழியறிவைப் பெறுதல்.

இவ்வொப்பந்தம் கொத்தலாவலைக்குப் பெரு வெற்றியென மதிப்பிடப் பட்டது. ஆயினும் இந்த ஏற்பாட்டில் இடம்பெற்ற சில வாசகங்கள் தொடர்பாக பொருள் விளக்கம் செய்வதில் (Interpretration) எழுந்த முரண்பாட்டால் இவ்வொப்பந்த ஏற்பாடுகள் செயலிழந்தன.

இந்தியத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் இப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. எனினும் மாறாக, இம்முயற்சிகள் மேற்படி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதை வெளிக்காட்டின. 1960 ஆம் ஆண்டு திருமதி.பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்த வேளை, சுமார் 975,000 பேர் நாடற்றவர்களாக இருந்தனர். 1964 ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பிரதமர் திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கும், இந்தியப் பிரதமர் சாஸ்திரிக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் என அழைக்கப்பட்டதுடன், புதிய ஓர் அணுகுமுறையின் கீழ் அப்பிரச்சினையைத் தீர்க்கவும் முற்பட்டனர். இவ்வொப்பந்தம் பின்வரும் விடயங்களைக் கொண்டதாக அமைந்தது.

(அ) 5,25,000 பேருக்கு இந்தியா 15 வருட காலப்பகுதியில் குடியுரிமையை வழங்குவதற்கு ஏற்றுக்கொண்டது.

(ஆ) 300,000 பேருக்கு இலங்கை அரசாங்கத்தினால் இதே 15 வருட காலத்தில் குடியுரிமை வழங்கப்படும்.

(இ) விரைவில் இரண்டு பதிவு இடாப்பு தயாரிக்கப்படும். ஒன்று, இலங்கைக் குடியுரிமையை வழங்குபவர்களைக் கொண்டது. மற்றது, இந்தியாவுக்கு மறுவாழ்வுக்காக திருப்பி அனுப்புவர்களைக் கொண்டது. இவ்வேடுகள் தயாரித்து முடியும் வரை திருப்பி அனுப்புவதும், குடியுரிமை வழங்குவதும் தாமதிக்கப்படும்.

(ஈ) இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் இலங்கையில் தொடர்ந்து தொழில் செய்யும் உரிமை பெறுவார்கள். அனுப்பப்படும் காலம் வரையிலும், பதிவு செய்யப்படும் வரையிலும் எது முந்தியோ அதன்படி அவர்களை திருப்பி இந்தியாவுக்கு அனுப்பும்போது ஒவ்வொரு குடும்பமும் 4000 ரூபா பெறுமதியான அவர்களது உடமைகளை எடுத்துச் செல்ல இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள்.

(உ) நாடற்ற 7 விகிதமானோருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்படும் போது நாடற்ற 04 விகிதமானோருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும்.

(ஊ) மீதியாகவுள்ள 150,000 நாடற்றவர் பற்றி பின்னர் இரு அரசாங்கங்களும் தீர்மானிக்கும்.

இந்தியாவில் இவ்வொப்பந்தத்திற்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது சாஸ்திரி கூறியதாவது, ''இவ்வாறான ஒரே வழி மூலமாகத்தான் பிரச்சினையை சமாதானமாக தீர்க்க முடியும். அதன் மூலம் இலங்கை, இந்திய நட்புறவு பாதிக்கப்படாது'' என்றார். ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் செயற்படுத்துவதில் நெகிழ்வுத் தன்மை கையாளப்பட்டது. அதாவது, 7:4 என்ற கட்டாய விகிதம் கைவிடப்பட்டு, இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு குடியுரிமை வழங்குவதில் விரைவு காட்டும் கொள்கை கையாளப்பட்டது. எனவே, 1964ம் ஆண்டைய ஸ்ரீமா - சாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் 1969 டிசம்பர் வரை இந்தியா 61,231 பேருக்கு குடியுரிமை வழங்கியது. 1970 ஓகஸ்ட் வரை இலங்கை 75,000 பேருக்கு குடியுரிமை வழங்கியது.

1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் முன்னர் ஏற்பட்ட வளர்ச்சிகளை மீண்டும் பின்னோக்கித் திருப்பியது. இக்காலப் பகுதிகளில் இந்திய தமிழ் மக்களை திருப்பி அனுப்புவதில் அரசாங்கம் கடுமையான போக்கைக் கையாண்டது. இதனால், இந்திய தமிழர்களின் பிரச்சினை மேலும் தீவிரமடைந்தது. 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையிலான அரசாங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.தொண்டமானுடன் நல்லுறவைக் கொண்டிருந்தமையால், இந்தியத் தமிழரின் நாடற்ற பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வைக் காண முற்பட்டது. ஆரம்பத்தில் இந்தியத் தமிழர்களுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரிமை வழங்கப்பட்டது. வம்சாவழிப் பிரஜை, பதிவுப் பிரஜை என்ற வேறுபாடு இல்லாமல் செய்யப்பட்டது. 1983 ஜனவரியில் வழிமுறைகளைக் கண்டறியுமாறு வெளிவிவகார அமைச்சைக் கேட்டுக்கொண்டார். ஆனால், 1983 ஜூலைக் கலவரமானது அம் முயற்சியைக் கைவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1988 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தை உருவாக்கியது. இச்சட்டம் ஏற்பட்டதன் காரணமாக இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்காத அனைவரும் இலங்கையர் என சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

அதாவது 1987ஆம் ஆண்டளவில் 412,887 பேர் இந்தியக் குடியுரிமையையும், 218,181 பேர் இலங்கைக் குடியுரிமையையும் பெற்றிருந்தனர். 1987 ஆம் ஆண்டளவில் 640,068 பேரின் நாடற்றவர் நிலை மட்டுமே நீக்கப்பட்டு குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது. இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்த 84,113 பேர் நீங்கலாக ஏனைய 250,000 பேர் அவர்களுடைய பிள்ளைகள் ஆகியோருடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியிருந்தன. இவர்களுடைய நாடற்றவர் அந்தஸ்துக் காரணமாக பல நிர்ப்பந்தங்களுக்குள்ளான அரசாங்கம் 1988 ஆம் ஆண்டு புதிய குடியுரிமைச் சட்டமொன்றை நிறைவேற்றியது. இச்சட்டம் இலங்கை, இந்திய மரபுவழித் தமிழர்கள் அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமையை வழங்கியது. இச்சட்டம் குடியுரிமை பெறுவோரின் தொகை எதனையும் குறிப்பிடாதது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். அத்துடன், குடியுரிமை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான முடிவுத்திகதி எதுவும் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அதனால், இந்திய வம்சாவழியினரான எவரும் எதிர்காலத்தில் குடியுரிமை பெறும் வாய்ப்பு சட்டபூர்வமாக வழங்கப்பட்டது. 1989ம் ஆண்டு 10ம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டமானது இந்திய தமிழர்களை வாக்காளர்களாக பதிவு செய்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பொதுத் தேர்தல் நோக்கங்களும் இச்சட்டங்கள் நிறைவேற்றப்பட முக்கிய காரணங்களாயின.

6.0 முடிவுரை

இந்தியா திரும்பிய பெருந்தோட்ட இந்திய தொழிலாளர்களுக்கான முழுமையான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவில்லை. மாறாக நம்பிக்கையுடன் தாயகம் திருப்பியோருக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏமாற்றத்தையே தந்தன. இலங்கையில் வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் இந்தியா திரும்பியதும் அநாதைகள் என்ற நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டனர். இவர்கள் இலங்கையில் இருந்திருந்தால் அவர்களுடைய எண்ணிக்கை 1996 ஆம் ஆண்டில் 1,920,272 பேராக இருந்திருக்கும். இதன் காரணமாக 1996 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையின் சனத்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.4 மில்லியனாக இருந்த நிலமை 18.92 மில்லியனாக அதிகரித்திருக்கும். அதனால், இந்தியத் தமிழ் மக்கள் 10.14% இருந்திருப்பார்கள். ஆனால், நான்கு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் 1981ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறியமை அவர்களுக்கு அரசியலில் அடிப்படைப் பலத்தைக் குறைத்துள்ளது. இல்லாவிடின், அரசியலில் பேரம் பேசும் தகுதிகளை இவர்கள் இன்று பெற்றுள்ளமையினை விடக்கூடியளவில் பெற்றிருப்பார்கள் எனக் கூறமுடியும்.

நாடற்ற இந்திய தமிழரை இலங்கைப் பிரஜையாக ஏற்றுக் கொண்டமை அவர்கள் தேர்தல் முடிவுகளை மாற்றக்கூடிய வல்லமையுடையவர்கள் என்பதைக் காட்டியுள்ளது. ஆனால் 1988ம் ஆண்டு குடியுரிமைச் சட்டமானது நாடற்ற எல்லா இந்தியத் தமிழர்களுக்கும் குடியுரிமை வழங்கவில்லை. இந்தியக் கடவுச்சீட்டைக் கொண்டிருந்தவர்கள் இன்னும் குடியுரிமையற்றவர்களாகவே உள்ளனர். இதனால் அவர்களுடைய சந்ததியும் பாதிப்படைந்துள்ளது. ஏற்கனவே இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களும் சிறந்த முறையில் புனர்வாழ்வு வழங்கப்படாத நிலையில் மேலும் இந்திய கடவுச் சீட்டினையுடைய இந்தியத் தமிழரை இந்தியாவுக்கு அனுப்புவது மனிதாபிமான விடயமல்ல. ஆகவே, இவர்களுக்கு இலங்கையில் குடியுரிமை வழங்குவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்கள் தேசிய வாழ்க்கைக்கு திரும்புவதற்கு வழிவகுக்க வேண்டும்.

குடியுரிமை, வாக்குரிமை அற்ற நிலையில் தேசிய அரசியலில் வலிமை அற்றவர்களாக கல்வி வேலைவாய்ப்பு, சுகாதார வசதி, வீட்டு வசதி என்பவற்றில் பிற சமூகத்தவர்களை விடப் பின் தங்கியவர்களாகவேயுள்ளனர். 1988 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் என்பவற்றால் இந்தியத் தமிழர்கள் படிப்படியாக பெற்ற இலங்கைக் குடியுரிமையும், வாக்குரிமையும் அவர்களை அலட்சியம் செய்ய முடியாத ஓர் அரசியல் சக்தியாக உருவாக்கின. இவர்கள் பெற்ற வாக்குரிமை பலத்தின் காரணமாகவே இன்று பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி சபைகளிலும் இவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அரசியல் உரிமைகள் இந்தியத் தமிழர்கள் மத்தியில் புதிய விழிப்புணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளன. இன்று இவர்கள் இலங்கைப் பன்மைச் சமூக அமைப்பின் ஒரு முக்கிய அங்கமென்ற அங்கீகாரத்தைப் பெற்றவர்களாய் தமது நல உரிமைகளையும், தனிப் பண்பையும், கலாசார அடையாளத்தையும் பேணும் அவாவுடன் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் பெற்றுள்ள வாக்குப்பலமும் அரசியல் விழிப்புணர்வும் தேசிய அரசியல் கட்சிகளிடத்து ஒரு புதிய கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே, ஆரம்பத்தில் இழந்த குடியுரிமை, வாக்குரிமையைப் பெற்ற நிலையில் இந்தியத் தமிழர் சமூகம் தேசிய அரசியலில் ஒரு முக்கிய அங்கமாக உருவாகியிருப்பது முக்கிய அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

1. சந்திரசேகரன், சோ — இலங்கையின் சுதந்திரமும் மலையக மக்களின் நிலைப்பாடும் (கட்டுரை)

2. Weerawardana, I.D.S (1965) — Ceylon General Election 1956 Ceylon Institute of World Affairs, Colombo.

3. Wrigging, Howard. W (1960) — Ceylon Dilemmas of a New Nation, Princetion University poress princetion, New Jersey.

4. Jayawardena, Kumari (1985) — Ethnic and class conflicts in Sri Lanka, Center for Social Analysis, Dehiwala.'

5. Wilson Jeyaretnam, A (1982) — Srilanka and its furture Sinhaless Versus of Tamil A.J.Wilson, Dennics Dalton (eds.) The states of south Asia problems of National intergration, C.Hursy Company, London.

6. Wilson Jeyaretnam, A (1988) — The Break Up of Srilanka, The Sinhales Tamil confilict, C.Hursy & Company, London.

7. Wilson Jeyarentnam, A (1977) — Politics and political Development since 1948, K.M.de Silva(ed) Srilanka A survey, C.Hurat Co, London.

8. Kodikara, S.U. (1965) — Indo - Ceylon Relations since Independence, The Ceylon Institute of World Affairs, Colombo.

9. Vittachi, Tarzie (1958) — "Emergency 58" Ander Deutsh Ltd, London.

10. Amenesty International South Asia Publishing Service — International Bills of Human right

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"19ம், 20ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த சமயத் தோற்றம் குறித்த கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகளும் வியாக்கியானங்களும்" - ஒரு நோக்கு -

-பே.சச்சிதானந்தன்-

சமயத் தோற்றம் குறித்த பல்வேறு விதமான கருத்துக்கள், கோட்பாடுகள் காணப்படுகின்ற போதிலும், அவை சமயத்தின் தோற்றத்தைப் பற்றி ஆய்வு செய்ய முற்பட்ட ஆய்வாளர்கள் தங்கள் காலத்தில் இனக்குழுமங்களில் நிலவிய சமய அம்சங்களைக்கொண்டு, தாங்கள் கண்டுகொண்ட உண்மைகளை நிறுவ முனைந்ததன் விளைவாக ஏற்பட்டவை. அவை உலகலாவிய சமயப்பண்பாடுகளுக்கிடையே காணப்பட்ட சில பொதுமைப்பாடுகளின் அடிப்படையில் அல்லது இனக்குழுமத்தில் தொன்மையில் காணப்பட்ட சமய நம்பிக்கைகளை அடிகட்டுமானமாகக் கொண்டு தோற்றம் பெற்றன. அக்கோட்பாடுகள் இன்றைய நவீன சமயங்களுக்கும் பொருந்துவனவாக உள்ளன. ஆனால், தொன்மைச் சமய நம்பிக்கை, பழங்குடி மக்கள், நவீனகால சமய நம்பிக்கைகள், நவீன மக்கள் ஆகியவற்றுக்கிடையே தொன்மைக் காலத்தில் நிலவிய சமய அம்சங்களைக் கொண்டு உருவாக்கம் பெற்ற சமய கோட்பாடுகள் எவ்வளவு தூரம் வேறுபட்ட சமயச் சமூகத்திற்கிடையில் உள்ள இடைவெளியைக் குறைத்து ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட வரைவிலக்கணத்தை சமயத்துக்கு வழங்க முடியும் என்பது ஒரு பிரச்சினையாகவே உள்ளது.

சமயத் தோற்றம் குறித்து சிந்திக்கத் தலைப்படுமிடத்து, சமயம் என்ற சொற் பிறப்பாக்கம் சம்பந்தமாக கவனத்தைச் செலுத்துவோமானால், சமயம், ஆங்கிலத்தில் Religion என அழைக்கப்படுகிறது. இவ் Religion எனும் சொல், இலத்தீன் மொழியில் Religio என்ற சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். மேலும், இலத்தீன் மொழியில் உள்ள Re–Ligare என்ற பதத்திற்கு "மீளக் கட்டுதல்" என்ற பொருள் கொள்ளப்படுகிறது.[1] எனவேதான் சமயம் (religion) மக்களை இணைத்து வைத்திருக்கின்ற ஒரு சக்தியாகத் திகழ்கிறது. மக்களைக் கூட்டிணைக்கும் சக்தியாக செயற்பட்ட சமயத்துக்கு பல்வேறு வகையான பொருள்கள் கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் மனிதன் தனக்கு இயற்கையினால் ஏற்பட்ட அனர்த்தங்களை அவனது அறிவுத் தொகுதியைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியாதவிடத்து அந்த இடைவெளியை நிரப்பும் ஒரு விடயமாகவே ஆரம்பத்தில் சமயம் தோன்றியது. எனவேதான் மனிதன் தன்னை, தன் சுயத்தை, அவனது இயலாமையை உணரத் தலைப்பட்ட இடத்திலேதான் சமயம் தோன்றுகிறது எனலாம். இதுதான் சமயத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப நிலை. இன்றைய நவீன விஞ்ஞான உலகில் மனிதன் பகுத்தறிவு ரீதியில் நிகழ்வுகளைப் பகுத்து ஆய்வு செய்பவனாக இருந்த போதிலும், பகுத்து ஆயும் தன்மைக்கும் அப்பால் இருக்கும் 'மரணத்தையும்', 'வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களையும்' அவனது அறிவினால், பகுத்தறிய முடியாதுள்ளான். அதற்கு அவன் தனக்கும் தனக்கு அப்பாலுள்ளதற்கும் இடையிலே உள்ள இடைவெளியை நம்பிக்கையைக் கொண்டு நிரப்ப முற்படுகின்றான். அதற்கு அவனுக்கு அறிவியல் துணை செய்வதில்லை. மாறாக, நம்பிக்கை, கடவுள் பற்றிய எண்ணம், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி பற்றிய யூகம் ஆகியவையே உதவி செய்கின்றன. ஆகவே, இன்றும் மனிதனின் தொன்மை நிலைச் சிந்தனை நிலவுவது சமயம் மனிதனிலிருந்து அகற்றிவிட முடியாத அளவுக்கு அவனில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதற்குச் சான்றாகும்.

மனிதன் தன்னையும் தனது சூழலையும் உணர முற்படத் தொடங்கிய காலம் தொடக்கம் சமயத்தைப் பற்றிய கோட்பாடுகளும் ஆரம்பித்து விட்டன என்றே கூறலாம். அந்தவகையில், சமயத் தோற்றம் குறித்து உருவான தொன்மையான கோட்பாடுகள் பற்றி சிந்திப்போமானால், அறிவியல் வளர்ச்சியின் நிமித்தமாக மனிதன் 17ம், 18ம், 19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பல்வேறு விடயங்களைப் பகுத்தறிவு ரீதியாக சிந்திக்கத் தலைப்பட்டிருந்தான். இதன் ஒரு அம்சமாகவே சமயத்தை சமூக, மானிடவியல், உளவியல் அடிப்படையில் அறிஞர்கள் நோக்கினார்கள். அவர்கள் சமயத்தின் தோற்றம், தன்மை பற்றி பகுத்தறிவுக்கு உட்பட்ட வகையில், வியாக்கியானங்களையும் அதன் வழி கோட்பாடுகளையும் முன்வைக்கலாயினர். இந்த வகையில், ஈ.வி.ரைலர், எமில் துர்க்கைம், கார்ல்யுங், மக்ஸ்மூலர், பிரேசர் போன்றோர் முக்கியமானவர்களாகக் காணப்பட்டனர். இவர்களது வாதங்கள் ஓரளவு சமயத்தை வளர்க்கும் பரிணாமவாதச் சிந்தனைகளாகக் காணப்பட, இதற்கு மாறாக, கார்ல் மாக்ஸ், புறொய்ட், பெரியார் போன்ற சிந்தனையாளர்கள் சமூகத்துக்குக் கேடு விளைவிக்கும் மனிதனைப் பீடித்திருக்கும் நோய் போன்ற ஒரு பார்வையை சமயத்துக்குத் தந்திருந்தனர். இவ்விருவகை அறிஞர்களின் ஆய்வுகளினதும் இடையே சமயம் பற்றிய கோட்பாடுகள் தோன்றி வளரத் தொடங்கின.

மேற்கத்திய அறிஞர்களது சமயக் கோட்பாடுகளை எடுத்து நோக்குவோமானால், முதன் முதலில் தோன்றிய சமயம் சார் கோட்பாடு என்ற வகையில் ஈ.பீ.ரைலர் (E.B Tylor 1832-1917) முன்வைத்த ஆவியியம் (Animism) முக்கியம் பெறுகிறது. மானிடவியலாளரான இவர் தனக்குக் கிடைத்த இனக்குழுத் தரவுகளைக் கொண்டு "சமயம் பற்றிய எண்ணம், தொன்மை மக்களிடையே நிலவிய ஆவி பற்றிய கருத்துக்களிலிருந்து தோன்றியிருக்கலாம்"[2] என ஒருவகை யூகத்தின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிட்டார். அதுவே ஆவியியல் கோட்பாடாக படிமுறை வளர்ச்சியடையக் காரணமாயிருந்தது. மனித மனங்களிலே தோன்றிய உயிர்/ ஆவி பற்றிய சிந்தனையின் விளைவாக அவனுக்குள்ளேயும் வெளியேயும் ஆவி இருப்பதை உணரத் தலைப்பட்டனர். எவ்வாறு அவனுக்கு அந்த ஆவி பற்றிய எண்ணம் உருவாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனில், மனிதன் வாழ்கிறான். பின் இறக்கிறான். வாழும் போது கனவுகளைக் காண்கிறான். அக்கனவுகளின் போது அவனது உடல் ஓரிடத்திலே கிடக்க, அவன் எங்கோ தொலைவிலிருந்து இயங்குவது போன்ற உணர்வை அடைகிறான். இருந்தும் அவனது உடலிலிருந்து உயிர் பிரிந்து சென்று தனித்து செயற்படக்கூடியது என உணர்கிறான். இதன் தொடர்ச்சியாக இறப்பின் பின்னும் மனித உயிர்/ஆவி தொடர்கிறது என்று சிந்தித்தான். இவ்வாறாக இறந்தவர் ஆவிகள், கனவுகளில் காணப்படும் ஆவிகள், மூதாதையரின் உருவங்கள் இவைகளின் ஒட்டுமொத்த விளைவாகவே ஆவியியம் என்ற கோட்பாடு சமயத்தின் ஆரம்பக் கோட்பாடாக வளர்ந்தது. இச்சிறிய தாழ்ந்த கட்டத்தில் இருந்தே உயர்ந்த சிந்தனையை நோக்கி கடவுள் பற்றிய சமயக் கோட்பாடு வளர்ந்தது. சமயம் பற்றிய கோட்பாடு பல ஆவிகள் பற்றிய சிந்தனை, அதன் வழி பல தெய்வ வழிபாடு, அதனைத் தொடர்ந்து ஒரு தெய்வ வழிபாடு என்ற படிமுறை வளர்ச்சியாக சமயக் கோட்பாடு ஒரு சிக்கலற்ற எளிய நிலையிலிருந்து படிப்படியாக வளர்ந்தது ஒரு சிக்கலான நிலையை நோக்கி வளர்கிறது என்று ரைலர் கூறினார். இவரது கோட்பாடு டார்வினுடைய இயற்கை விஞ்ஞானப் படிமலர்ச்சிக் கொள்கைக்கு ஒப்பானதாகக் காணப்பட்டது. இதனால் ரைலர் முதல் முதலாக விஞ்ஞான ரீதியாக சமயத்துக்கான ஒரு ஆரம்பத்தையும் வரைவிலக்கணத்தையும் காண முற்பட்ட மானிடவியலாளராகக் கொள்ளப்படக்கூடிய நிலைக்கு உயர்த்தப்பட்டார் எனலாம்.

ரைலரின் ஆவியியம் என்ற கோட்பாட்டிற்குப் பின்னர் உயிரியம்(Animatism) என்ற கோட்பாட்டு விளக்கம் சமயத்துக்குக் கொடுக்கப்பட்டது. இக்கோட்பாடு ரைலரின் ஆவியிய கோட்பாட்டுக்கான மேலதிக விளக்கமாக அல்லது ஆவியியத்தின் பின்வடிவமாக அல்லது உயிரியம் ஆக வளர்ச்சியடைந்தது. இதனை R.R மராட்,(R.R,Marret) (1866-1909) என்பவர் அவரது சமயத்தின் முகப்பு (Threshold of Religion) எனும் நூலில் முன்வைத்தார். "உயிரியம்" என்ற பதம் உயிர்ப்பூட்டப்பட்ட ஒரு பொருளை, ஒரு சந்தர்ப்பத்தை, ஒரு நிலையைச் சுட்டுகின்றது எனக் குறிப்பிட்டார்".[3]

ஓர் இரகசியமான சக்தி உயிருடனிருப்பினும் இன்னும் தனியாகப் பிரிக்கப்படாத சக்தி இருக்கிறது என்ற கருத்து, செல்வாக்குப் பெற்றிருந்த நிலையில் தற்சார்பற்றசக்தி('மனா') பற்றிய சிந்தனையும் ஆரம்பமானது. உயிரினங்களுக்கும் ஆவி உண்டென்பதையும், உயிரற்ற (un-animism) பொருட்களிலும் ஆவி உண்டு என்பதையும் மனிதனைச் சார்ந்த ஆவி உண்டென்பதையும் நம்ப மறுத்தாலும், மனிதன், பொருள் இயற்கை முதலானவற்றைச் சாராத உயிர்ப்புத் தன்மையுடைய ஆற்றலில் நம்பிக்கை கொண்டிருந்தான். அது 'மனா'(power) என அழைக்கப்பட்டது. இவ்வகை மனா பற்றிய நம்பிக்கையிலிருந்து தொன்மைச் சமயம் தோன்றியது என மராட் கூறினார்.

உயிரியம் என்ற சமயக் கோட்பாட்டைத் தொடர்ந்து போலிப்பொருள் வழிபாடு (fetishism) தோற்றம் பெற்றது. "Fetishism" என்ற சொல் போர்த்துக்கீசச் சொல்லிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியதாகும். இதற்கு செய்யப்பட்ட பொருள், அல்லது மயக்குவது என்று பொருள். ஆபிரிக்காவின் சகாராப் பகுதியில் குடைந்து செய்யப்பட்ட சிற்பங்கள் அல்லது செதுக்கப்பட்ட உருவங்கள், போலிப் பொருள் வழிபாட்டுப் பொருள்களாகக் கணிக்கப்பட்டன. அதேபோல், விலங்குகளின் எலும்புகள், மரத்தில் செதுக்கப்பட்ட உருவங்கள், களிமண்ணால் செய்யப்பட்ட உருவங்கள், போன்றவைகள் ஒரு அதீத சக்தியுள்ள பொருட்களாகக் கணிக்கப்பட்டன. அந்தப் பொருட்களிலுள்ள அச்சக்தியை மனித அறிவினால் விளங்கிக் கொள்ள முடியாததால் அவை புனிதப் பொருளாகக் கருதப்பட்டு உயர்ந்த இடத்துக்குத் தள்ளப்பட்டன. இந்த நிலையில்தான் சார்ள்ஸ் டி பிரஸ்ஸர்ஸ் (Charles De Brosses) என்ற பிரெஞ்சுக்காரரின் "போலிப் பொருள்களை வழிபட்டதிலிருந்துதான் சமயங்கள் தோற்றம் பெற்றன" என்ற கருத்து முக்கிய இடம்பெறத் தொடங்கியது.[4]

இன்றும் செப்பினால் செய்யப்பட்ட அச்சிரத்தை(அட்சரம்) மந்திரித்துக் கட்டுதல், கறுப்பு நூல்களை அணிதல், புனித மண் (இன்றும் மடுமாதா கோவிலில் உள்ள களிமண் புனிதமாகக் கருதப்படுவதைக் குறிப்பிடலாம்) எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்துவதும் போலிப் பொருள் வழிபாட்டின் தொடர்ச்சியாக இன்றும் மக்களிடையே நிலவுவதை நாம் காண முடிகின்றது.

போலிப்பொருள் வழிபாட்டினைத் தொடர்ந்து குலக்குறி வழிபாட்டு மரபு தோற்றம் பெற்றது. குலக்குறி என்பது ஒரு குலத்துக்கே உரியதான சின்னம் அல்லது அடையாளமாகும். அக்கால மக்கள் மத்தியில் காணப்பட்ட மனிதனுக்கும் அவனது குலத்துக்கும் இடையில் தொடர்புபடுகின்ற ஒன்றாக அக்குலக்குறி காணப்பட்டது. இந்த வகையில் ஆரம்பகால மனிதன் குலக்குறியுடன் தொடர்புபட்ட வகையில் காணப்பட்டான். இதனால் ஒரு தனியனுக்கும் ஒரு குழுவுக்கும் அல்லது ஒரு குலத்துக்கும் ஒரு விலங்குடன், அல்லது பொருளுடன் உறவு முறை இருப்பதாக நம்பப்பட்டது. அந்த குலம், அந்த பொருளிலிருந்து தோற்றம் பெற்றிருக்கலாம். அல்லது ஒழுக்க(moral) ரீதியாக அந்தப் பொருள் விலக்கப்பட்டதாக (taboo) இருக்கலாம். ஏதோ ஒரு வகையில் அந்தப் பொருளுக்கும், அந்தக் குழுவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இத்தொடர்பின் நிமித்தம் மக்கள் அப்பொருளை நேசித்து மதிப்பளித்து, வழிபடத் தொடங்கினர். இதிலிருந்து "குலக்குறி வழிபாட்டு முறை தோற்றம் பெறலாயிற்று".[5]

இக்குலக்குறி முறை வெறுமனே, ஒரு சடப்பொருளுடன் தொடர்புபட்ட ஒன்றாக மாத்திரமன்றி, ஒட்டுமொத்த சமூகப் பெறுமானமாகவும் சமூகச் சட்ட முறைகளாகவும், சில திருமண உறவுமுறை விதிகளாகவும், கண்ணுக்குப் புலப்படாத அம்சங்களாகவும் காணப்படலாம். இந்த வகையில், குலக்குறியின் இயல்பு அல்லது அக்குலக்குறிக்கும் தனி மனிதனுக்கும் அல்லது குழுவுக்குமான தொடர்பு கருத்துருவான மறை மெய்ஞான உறவாக வணக்கத்துக்குரிய உறவு முறையாக, ஒரு சமூக நியதியாகக்கூடக் காணப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான குலக்குறிச் சின்னம் அக்கால மக்கள் மத்தியிலே அம்மக்களின் நண்பனாக, பாதுகாவலனாக ஒரு உறவினராக, மூதாதையராக, உதவியாளராக கருதப்பட்டிருந்தது. அத்தோடு, அவை வியப்புக்கும் ஆச்சரியத்திற்கும் உரிய பொருட்களாகவும் இருந்தன. அக்கால மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தன்னிருப்பை நிச்சயப்படுத்திக் கொள்ளவும் அக்குலக்குறியைச் சார்ந்திருந்தான். அதனால் அவன் அதனோடு மூழ்கிப் போயிருந்தான் என்று கூடக் கூறலாம். இதனால் அவனுக்கு ஒரு சமூக அந்தஸ்துச் சின்னமாக அக்குலக்குறி மாறியது. அதுமட்டுமன்றி, அக்குலக்குறியைக் கொல்லுதல், உண்ணுதல், தொடுதல் கூட விலக்கப்பட்டு ஒரு புனிதமான அம்சமாகவே அக்குலக்குறி கருதப்பட்டது.

எனவேதான், குலக்குறி என்பது ஒரு பொருள்சார் வழிபாட்டு அம்சமாக மட்டுமன்றி, பல சமயப் பண்புகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு கூட்டுச் சமய, சமூக அடையாளமாகவும் காணப்பட்டது. உதாரணமாக, குலக்குறி, மந்திரத்தோடு தொடர்புபட்டதாகவும், மூதாதையர் வழிபாட்டில் ஆன்மா பற்றிய கருத்துக்கள், சக்திகள், ஆவிகள் பற்றிய சிந்தனைகள் என்பன அடக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம். இந்த அடிப்படையிலேயே அனைத்து சமயக் கூறுகளையும் உள்ளடக்கிய குலக்குறி வழிபாட்டு முறை சமயத் தோற்றத்துக்கும் சமயக் கொள்கை உருவாக்கத்திற்கும் ஆரம்பமாக இருந்திருக்க வேண்டும். இதனாலேயே எமில் துர்க்கைம், தனது சமய ஆராய்ச்சிக்கு குலக்குறி வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டார் எனக் கூறலாம். இக்கோட்பாடு சமய ஆராய்ச்சியில் ஒரு முக்கியமான இடத்தைப் பின்னர் பெற்றிருந்தது.

குலக்குறியிலிருந்து சமயம் தோன்றியது போன்று, அக்காலத்தில் மந்திரமும் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்ததனால், மந்திரத்திலிருந்து சமயம் தோற்றம் பெற்றது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. J.G Fraser போன்ற அறிஞர்கள் தமது சமயம் பற்றிய ஆய்வில், "சமயத் தோற்றத்தின் மூலம் மந்திரம் எனக்கூறி, மந்திரத்திலிருந்து தோற்றம் பெற்ற சமயம் பின் விஞ்ஞான நிலைக்கு வளர்ச்சியடைந்தது"[6] என்றார். இதன்படி மந்திரம் சமயம் - விஞ்ஞானம் என்ற ஒரு படிமுறை வளர்ச்சியை தனது ஆய்வில் கண்டறிந்தார்.

மந்திரம் சார் சமய நிலையினைத் தொடர்ந்த ஒரு சமயத் தோற்றம் குறித்த கோட்பாடாக பிதிர் வழிபாடு / மூதாதையர் வழிபாடு சமயத்தின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது என ஹேபட் ஸ்பென்சர் (Herbert Spencer - 1820 - 1903) தனது சமயத் தோற்றம் பற்றிய கோட்பாட்டில் குறிப்பிடுகிறார். அவரது பார்வையின் அடிப்படையில் நோக்குகின்ற போது, "சமயம் என்பது பிதிர் வழிபாட்டில் இருந்தே தோற்றம் பெற்றது".[7] அதாவது இறந்துபோன தங்களது மூதாதையரின் ஆவி அக்கால மனிதருடன் இருக்கின்றது எனவும், அது அவர்களை வழிநடத்துகின்றது எனவும் ஊகித்த மனிதன், அப்பிதிர்களை நாம் சாந்தப்படுத்தாமல் விடும்போது அங்கே நமக்கு தீமைகள் ஏற்படும் எனவும் அம்மூதாதையரின் நல்லாசி இருக்கும்போதே நாம் நன்றாக வாழமுடியும் எனவும் நினைத்து அவ் இறந்த மூதாதையர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடத் தொடங்கினர். அவ்வாறு அவர்களை நினைவுகூர்ந்து வழிபடத் தொடங்கிய நிலையில்தான், சுயம் என்பத தோற்றம் பெற்றது என கேபட் ஸ்பென்சர் (Herbert Spencer) கூறினார்.

மேலும், இவர் சமயத் தோற்றத்துக்கு பிதிர்வழிபாடே ஆரம்பம் எனக் கருதிய போதிலும், அப்பிதிர் வழிபாட்டிற்கு அவர்களின் மீது ஏற்படும் பயம், உதாரணமாக வாழ்பாவர்கள், வாழ்ந்து மடிந்தவர்களின் நல்லாசியைப் பெறவும், அவர்களுக்குப் பயந்தும் வாழ்ந்தார்கள். அந்தப் பயமே சமயத் தோற்றத்திற்குக் காரணம் எனக் கூறினார்.

அவரைத் தொடர்ந்து உளவியல் பகுப்பாய்வாளரான சிக்மன்ட்புரொய்ட் (Sigmund Freud) சமயங்களின் தோற்றம் குறித்துப் பேசும்போது, மனித மனத்தில் ஏற்படும் ஒருவகை பய உணர்வே சமயத் தோற்றத்திற்கு வித்தாக அமைகிறது எனக் கூறினார்.[8] அத்துடன் சமயங்கள் மனதுக்கு வெளியிலிருந்து தோன்ற முடியாது எனவும் கூறினார். சமயம், கடவுள் இரண்டையும் மனதில் கண்ட புரொய்ட் சமயம் தோன்றுவதற்கு இடமளிக்கும் மனதிலேயே சமயம் நிலைத்து நிற்கிறது எனக் கூறினார்.

இவரைத் தொடர்ந்து கார்ல் யுங்க் (Card Jung), வில்லியம் ஜேம்ஸ் (William James) போன்ற உளவியலாளர்களும் சமயத்தின் தோற்றத்தை "மனித மனங்களிலே கண்டனர்".[9] ஆனால், இவர்களது அணுகுமுறை சிக்மன் புரொய்டினுடைய (Sigmund Freud) அணுகுமுறையிலிருந்து வேறுபட்டவையாக அமைந்திருந்தன. உதாரணமாக, சிக்மன் புரொய்ட் (Sigmund Freud) சமயம் மனிதனுக்குத் தடையாக இருக்கிறது எனக் கூறி, சமயத்தைப் பிணியுள்ள சமயம், பிணியற்ற சமயம், என இரண்டாகப் பிரித்தார். பிணியுள்ள மனதில் இருந்து பிணியுள்ள சமயமும், பிணியற்ற மனதிலிருந்து பிணியற்ற சமயமும் தோன்றும் எனக் கூறும் புரொய்ட் (Sigmund Freud) சமயம் ஏதோ ஒரு விதமாக மனித அறிவு ஆராய்ச்சிக்குத் தடையாகவுள்ளது எனக் கண்டார். ஆனால், வில்லியம் ஜேம்ஸ் (William James) யுங் (Carl Jung) போன்றவர்கள் சமயம் மனிதனுக்கு நன்மை செய்கின்றது எனக் கூறினர்.

பிற்காலங்களில் தோன்றிய பொருள்முதல்வாதச் சிந்தனையாளர்களான கார்ல்மாக்ஸ், லெனின் போன்றோர் சமயத்தை "மனித சமூகத்துக்கும் தனி மனிதனுக்குமான ஒரு போதையாக "அபினியாக"[10] பார்த்தனர். இப்பின்னணி பிற்காலத்தில் மேற்கத்திய நாடுகளில் சமய சார்பற்ற சிந்தனை வளர்ச்சியடைந்து பொருள் முதல்வாதம் மேலோங்க வழியமைத்தது.
மேற்படி அமைந்த சமயத் தோற்றம் குறித்த அறிஞர்களின் கருத்துக்களை இரண்டு பெரும் பிரிவுக்குள்ளே அடக்கி விடலாம்.

1. வெளியான சமய அம்சங்களை வைத்து சமயத் தோற்றத்தை வரையறுத்து அணுகியவர்கள். (உதாரணம்: எமில்துர்க்கைம் (Emil Durkhiem). ஈ.வி.ரைலர் (E.B.Tylor), கேபர்ட் ஸ்பன்சர் (Herbert Spencer) இவர்கள் சமூகத்துக்குள் சமயத்தைக் கண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உள்ளார்ந்த சமய அம்சங்களை வைத்து சமயத்தை வரையறுத்தவர்கள். உளவியலாளர்களான புரொய்ட் (Sigmund Freud) கார்ல்யுங் (Carl Jung), வில்லியம் ஜேம்ஸ் (William James) போன்றவர்கள் உளத்தில் சமயத்தைக் கண்டனர்.

இந்தப் பின்னணியில்தான் ருடோல் ஒட்டோ (Rudolf Otto) என்பவர் சமயத்துக்கு உள்ளார்ந்த ரீதியிலே 'புனிதம்' என்ற ஒன்று குறித்து மனிதன் அனுபவிக்கின்ற அனுபவமே சமயம் என வரையறுக்கின்றார்.[12] இது சமயத் தோற்றத்துக்கு அவர் கொடுக்கும் இன்னுமொரு விளக்கமாகும்.

இந்த அடிப்படையில் காலத்துக்குக் காலம் சமூக, மானிடவியல், உளவியல் அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக அவர்கள் கண்டுகொண்ட சமயம் குறித்த அணுகுமுறைகளும், அதனைத் தொடர்ந்த கோட்பாடுகளும் உருவாக்கம் பெற்றன. அவையே சமய ஆராய்ச்சிக்கு வழிகாட்டுகின்ற ஒரு செல்நெறியாக பிற்கால சமய ஆராய்ச்சியாளர்களுக்கு உதவியது எனலாம்.

REFERENCE:

1. Peter B.Clake, 1993, **Religion Defined and Explained** " Article – The Definition and Essence of Religion, Macmillan Press, p.3)
2. லூர்த் தே.2000 (2nd edit). "நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படையில்" (சமயத் தோற்றம்,).நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் தூய சவேரியாார் (தன்னாட்சி) கல்லூரி பாலையங்கோட்டை -627002 ப.318
3. Ibid – P.320
4. Anthhony Giddens. 1994 "**Sociology**" Basic Concept of Religion, 4th Edition P.529.530.
5. பத்சவத்சல பாரதி 2000. "பண்பாட்டு மானிடவியல்" புதிய பதிப்பு வெளியீடு மணிவாசகர் பதிப்பகம் பக். 315,.
6. Peter B. Clake, 1993, "**Religion Defined and Explained**" Article – The psychological approaches to the Study of Religion Macmillan Press Ltd., P-175.
7. Ibid -P 180.
8. Ibid - P181
9. Keith Roberts. A 1984. **"Religion in Sociological Perspectives"** The Dorsey Press Chicago Illinois, P.93.
10. Andre Beterlle- **"Religion as a Subject for Sociology"** Articles on Economic and Political Weekly August 29, 1992.
11. **Max Weber "Origins of Religion"** (article) - www.Sociology and Religions.as. **Max Weber and World denying love:** A look at the Historical Sociology of Religion – www.Sciology and Religions.ac

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து அறிவியற்புலத்தில் மருத்துவஇயல் -ஒரு நோக்கு-

-சயனொளிபவன் முகுந்தன்-

அறிமுகம் :

இன்றைய காலகட்டத்தில் எத்துறைசார் அறிவும் விஞ்ஞானபூர்வமான அணுகு முறையினையும் அறிவியற் கருத்துக்களின் செழுமையினையும் கொண்டமைய வேண்டியது எதிர்பார்ப்புக்குரியது. இந்துநாகரிப்புலத்தில் அண்டவியல் வானியல், இயற்பியல், இரசாயனவியல், மருத்துவம் போன்ற முறைசார் அறிவியற்புலங்களும் இரசவாதம், சோதிடம், குண்டலினியோகம், காயசித்தி உபாயங்கள் போன்ற முறைசாரா அறிவியற் புலங்களும் காலாதிகாலமாகக் காத்திரமான வளர்ச்சியைப்பெற்று வந்துள்ளன. அந்தவகையில் இந்துப் பண்பாட்டு வரலாற்றில் மருத்துவக்கலையின் மூலங்களை அடையாளங்காண்பதும் அம்மூலங்களிலிருந்து மருத்துவஇயல் பற்றிய இந்து சமூகத்தினரின் பாரம்பரிய சிந்தனைமரபைப் பற்றிய ஒருபரிமாணத்தைத் தரிசிக்க முயல்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிணியினைப் போக்குதல் ஆரோக்கியம் காத்தல் என்பதனூடாக நீண்ட ஆயுளைத்தரவல்ல முறைமையால் இந்துக்களுடைய மருத்துவக் கலையானது ஆயுர்வேதம் என வழங்கப்பட்டது. பிற்காலத்தில் இது சித்தர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட முறைமையால் சித்த மருத்துவம் என்ற பெயருடன் தென்னாட்டில் பிரபல்யம் பெற்றது.

வைதீகப்பாரம்பரியம் :

இருக்குவேதத்தில் இடம்பெற்றுள்ள ஓஷதிசூக்தம் இந்துக்களின் மருத்துவ சிந்தனை மரபின் முக்கியமான ஆரம்ப நிலையாகும்... வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் திரிதாது என ரிக்வேதம் சுட்டியுள்ளதுடன் கட்புலன், செவிப்புலன் குறைபாடுகளை நீக்கும் தேவ மருத்துவர்களாக அஸ்வினி குமாரர்களை அவ்வேதம் போற்றுகிறது.

சுக்கிலயசுர் வேதத்தில் குஷ்டம், இதயநோய், காசநோய், சித்தசுவாதீனம் ஆகிய பிணிகள் அவற்றுக்கான குணங்குறிகளுடன் தெளிவாக அடையாளங்காணப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றிற்கான சிகிச்சைகள் மருந்தளவிலன்றி மந்திர உச்சாடனங்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்து மருத்துவ வரலாற்றில் அதர்வவேதம் தனித்துவமான வகிபங்கைப் பெற்றுள்ளது. இதன் பேஷஜானிசூக்தானி, ஆயுஷ்யானிசூக்தானிப் பகுதிகள் மருத்துவ சிந்தனைகளை அதிகம் உள்ளடக்கியுள்ளன. ஒரு முழுமையான மருத்துவசாஸ்திரத்துக்கே உரிய பண்புகளோடு நோய் அறிகுறிகளை எடுத்துக்கூறி நோயைத் தெளிவாக அடையாளங் காணுகின்ற அதர்வவேத்தின் சில பகுதிகள் வியக்கத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனின் அகஞ்சிவப்புக் கதிர்களுக்கு மஞ்சட்காமாலை நோயைக் குணப்படுத்துகின்ற ஆற்றல் உண்டென்பதனை இன்றைய மருத்துவ ஆராய்ச்சிகள் கண்டறிந்துள்ளன. அதர்வ வேதத்தில் மஞ்சட்காமாலை பற்றிய குறிப்புக்கள் இவ்வாறு அமைகின்றன

" இவன் நோய்நீங்கி மஞ்சளாகாமலிருக்க
நீண்டகாலம் வாழ உன்னைச் சிவப்புக்கதிர்களால் சூழ்கிறோம்
சூரியனை அனுசரித்து உனது இதயநோயும் காமாலையும் நீங்குக" [1]

பெரும்பாலான நோய்களுக்குக் காரணம் கட்புலனாகாத நோய்க்கிருமிகளே என்பதனை நுணுக்குக்காட்டிகள் கண்டறியப்படாத கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திலேயே இவ்வேதம் உறுதிபடக் கூறியுள்ளது. அதர்வ வேதத்தின் 2ம் காண்டத்தின் 66ம், 67ம் சூக்தங்களாக அமையும் "கிருமிநாசம்"என்ற பகுதி இதற்குத் தக்க சான்று பகரும்.

மனித உடற்கூற்றியல் தொடர்பாகவும் குருதிச்சுற்றோட்டம் தொடர்பாகவும் துல்லியமான சில சிந்தனைகள் இவ்வேதத்தில் இடம்பெற்றுள்ளன. இதயத்திலிருந்து சுத்த இரத்தத்தை எடுத்துச்செல்லும் நாடிகளைப் பற்றியும் அசுத்தரத்தத்தை (ஒட்சியிறக்கப்பட்ட) இதயத்திற்கு எடுத்துவருகின்ற நாளங்களைப் பற்றியும் அதர்வ வேதத்தில் தெளிவாக வேறுபடுத்தி உரைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நாடிகளில் பாய்கின்ற பிரகாசமான சிவப்பு நிறமுடைய குருதி "அருணா" எனவும் நாளங்கள் தாங்கி வருகின்ற கருஞ்சிவப்பான குருதி "லோஹினி" எனவும் வேறுபடுத்தி அழைக்கப்படுகிறது. இவற்றில் பாய்கின்ற குருதியின் வேகம், நிறம் ஆகிய பண்புகளில் காணப்படும் தெளிவான வேறுபாட்டை இன்றைய உடற்கூற்றியலாளர்களும் வியக்கும் வகையில் அதர்வம் இனங்காட்டியுள்ளது.

" இப்புருடனில் துரிதமாயும் சிவப்பாயும்
சிவந்தும் கறுத்தும் கலங்கியும் நிதானமாயும்
மேலுங்கீழுமாய் குறுக்குமாகி அதிகம் பாய்ந்தோடும் நதியோட்டத்திற்கு
தனித்தனியோடும் நீர்களை எவன் செய்தான்" [2]

என்ற பாடற்பகுதியை இதற்கு உதாரணம் காட்டலாம். நோய்களிலிருந்து பாதுகாக்கவல்ல பலவகையான மருந்து வகைகளின் பெயர்களையும் இவ்வேதம் குறிப்பிட்டுள்ளது. அந்தவகையில் கருச்சிதைவைத் தடுக்க உதவும் பிருஷ்ணிபர்ணி என்ற பச்சிலை மருந்து (இது பிற்காலத்தில் சுஸ்ருதசம்ஹிதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது) குஷ்டரோகத்தை நிவர்த்தி செய்யவல்ல இரஜனீ என்ற மருந்து, தலைவலி மற்றும் கபாலத்துடன் தொடர்புடைய வலிகளைச் சீர்செய்யவல்லதான கர்ணசூலம் என்ற ஒளடதம், வெண்குஷ்டத்திற்கு மருந்தாகும் ஆஸுரியின்செடி போன்ற மூலிகை மருந்துகளை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.[3] மேலும் இவ்வேதத்தின் 108ம் சூக்தம் விடமுறிவுச் சிகிச்சை பற்றி விரிவாகப் பேசுகிறது. வாரணாவதி என்ற ஒளடதமும் அபஸ்கம்பம் என்ற மூலிகையும் விடமுறிவை ஏற்படுத்தக்கூடியன என்பதையும் அதர்வம் சுட்டிக் காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் புரிந்துவிடக்கூடாது என்பதற்காகவே திட்டமிட்டுப் பிரயோகிக்கப்பட்டுள்ள சங்கேத மொழிகளும் குழுக்குறிகளும் விடுகதை போன்ற பாடல்களும் இவ்வேதத்தில் ஆழ்ந்துகிடக்கும் மருத்துவ உண்மைகளை முழுமையாக வெளிக்கொணரமுடியாது அரண் செய்கின்றன. எவ்வாறாயினும் இந்துக்களால் வளர்த்தெடுக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவக்கலையின் ஆழமான ஆரம்பநிலைப் போக்குகளை அதர்வ வேதத்தில் அடையாளங்காண முடிகிறது.

ஆயுர்வேதம் :

அதர்வ வேதத்தின் கிளையாகவே அமையப்பெற்ற ஆயுர்வேதமானது ஆரம்ப காலத்தில் 1,00,000 சுலோகங்களையும் 1000 அத்தியாயங்களையும் உடையதாய் தோன்றியது என்பது நம்பிக்கை. ஆயினும் அது மனித அறிவிற்கு ஏற்றவகையில் 10,000 சுலோகங்களாகச் சுருக்கப்பட்டது. கி.மு. 800க்குப் பின்பு ஆத்திரேயர், தன்வந்திரி ஆகிய இரண்டு ஞானிகள் ஆயர்வேத மரபினை செழுமைப்படுத்தியவர்களாக அறியப்படுகின்றனர்.

ஆத்திரேயர் மரபு :

ஆத்திரேயர் 46,500 சுலோகங்களைக் கொண்ட ஆயர்வேத நூலொன்றை இயற்றியதாகவும் இவரது சீடர்களான அக்கினிவேசர், பெல, ஜடகர்ண, பராசர, ஹரித, காரபாணி ஆகியோரும் தனித்தனியான நூல்களை இயற்றியதாகவும் அறியப்படுகிறது. இவர்களுள் அக்கினிவேசர் இயற்றிய நூல் மட்டுமே கிடைத்துள்ளது. இவருடைய நூலைத் தழுவியே பிற்காலத்தில் சரகசம்ஹிதையைத் தான் இயற்றியதாகச் சரகர் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. அக்கினிவேசர் தவிர்ந்த ஏனையோரின் நூல்கள் மறைந்துவிட்டபோதும் அவற்றின் தொகுப்பாகவே தமது அட்டாங்கஹ்ருதயசம்ஹிதை என்ற நூல் அமையப்பெற்றதாக சிங்ஹகுப்த சேனாவாகப்பட்டர் குறிப்பிட்டுள்ளார்.

தன்வந்திரி மரபு :

தன்வந்திரியாரே ஆயர்வேதத்தினை எட்டுப் பிரிவுகளாகப் பிரித்து வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவையாவன-

1. காயசிகிச்சை, 2. பாலசிகிச்சை (குழந்தை வைத்தியம்), **3. கிரகசிகிச்சை** (மனநல மருத்துவம்) **4. சாலாக்யதந்திரா** (கண், காது, மூக்கு, தொண்டை), **5. சல்யதந்திரா** (அறுவைச்சிகிச்சை), **6. விஷதந்திரா** (விடமுறிவு மருத்துவம்), **7. இரசாயனதந்திரா** (மூப்பியல்), **8. வாஜிகரணதந்திரா** (ஆண்மலடு, அலித்தன்மை, கருவளர்ச்சிக்கான சிகிச்சை) என்பனவாகும். தன்வந்திரியாரே சிகிச்சாதத்துவ விஞ்ஞானம், சிகிச்சாதர்சனம், சிகிச்சாகௌமுதி ஆகிய ஆயர்வேத நூல்களையும் இயற்றியதாக அறியப்படுகிறது.[4]

ஆயினும் இந்நூல்கள் கையளிப்புப் பாரம்பரியத்தில் உள்ள குறைபாட்டால் என்றோ அழிந்து போயின. தன்வந்திரியே ஆயுர்வேதத்தில் சத்திரசிகிசிச்சை முறைமையின் முன்னோடியாகவும் கருதப்படுகிறார். இவர் மனிதருக்கு உண்டாகும் நோய்களை ஆதி ஆத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்வீகம் என 3 வகையாக இனங் காட்டியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) **ஆதிஆத்மிக நோய்கள் -** உடல், மனம் சம்பந்தப்பட்டவை இவை பரம்பரையாக ஏற்படலாம் கருவில் இருக்கும்போது ஏற்படும் அதிர்ச்சிகளால்,குறைபாடுகளால் ஏற்படலாம். உடல்நோய்கள் பெரும்பாலும் வாதம், பித்தம், கபம் ஆகிய 3 தோஷங்களால் தோன்றுகின்றன மனநோய்கள் பெரும்பாலும் ராஜசம், தாமசம், சாத்விகம் ஆகிய முக்குணங்களில் ஏற்படும் சமநிலைக் குழப்பத்தாலும் குறிப்பாக ராஜசம்,தாமச குணங்கள் மேலோங்குவதால் உண்டாகின்றன.

2) **ஆதிபௌதிக நோய்கள்-** சூழ்நிலை நெருக்கடிகளால் தோன்றுவன. உள்வெளிக் காயங்கள், விஷஜந்துக்கள் ஆகியவற்றால் ஏற்படுகின்றன.

3) **ஆதிதெய்விகம் -** மூன்று பிரிவுகளை உடையது.

- காலப்பிரவர்த்தம் - காலநிலை மாற்றங்களால் உருவாகும் நோய்கள்
- தெய்வபலப்பிரவர்தம் - மனிதசக்திக்கு அப்பாற்பட்டவை
- சுபாவபலப்பிரவர்த்தம் - உடலின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்களால் உண்டாவன.

சரகசம்ஹிதை :

சரகர் எனும் ஞானியால் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் ஆயுர்வேத மருத்துவ நூல் இதுவாகும். இந்த நூலானது அதன் விடய மகத்துவம் கருதி பாரசீக, அரபி, இலத்தீன் மொழிகளில் கி.பி. 1ம் நூற்றாண்டில் மொழி பெயர்க்கப்பட்டது.

சரகசம்ஹிதை 120 அத்தியாயங்களை உடையது. அவை சூத்திரஸ்தானம், நிதானஸ்தானம், விமானஸ்தானம், சரீரஸ்தானம். இந்திரியஸ்தானம், சிகிட்சாஸ்தானம் கல்பஸ்தானம், சித்திஸ்தானம் என எட்டுப்பகுதிகளாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. முப்பது அத்தியாயங்களை கொண்ட சூத்திரஸ்தானத்தில் மருத்துவத்திற்கான பொது விதிகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. நிதானஸ்தானத்தில் 8 அத்தியாயங்கள் உள்ளன. இப்பகுதியில் நோயை இனங்கண்டறிதல் பற்றிய பலவிடயங்கள் பேசப்பட்டுள்ளன. விமானஸ்தானமானது 8 அத்தியாயங்களை உடையது. உணர்வு, தொடுகை, ருசி பற்றிய விடங்களை இப்பகுதி குறிப்பிடுகிறது.[5]

சரீரஸ்தானம் என்ற பகுதியிலும் 8 அத்தியாயங்கள் உள்ளன. உடற்கூற்றியலைப் பற்றியும் கருவளர்ச்சி, பிரசவம் பற்றியும் இதில் விரிவானகுறிப்புக்கள் உண்டு. இந்திரியஸ்தானம் 12 அத்தியாயங்களைக் கொண்டு விளங்குகிறது. வருமுன்காத்தல் என்ற அடிப்படையில் சுகாதாரத்துடன் தொடர்புடைய பலவிடயங்கள் பேசப்பட்டுள்ளன.

சிகிச்சாஸ்தானம் என்ற பகுதியே உள்ளடக்கத்தால் பெரியது. இதில் 30 அத்தியாயங்கள் உள்ளன. நோய்களுக்கான சிகிச்சை முறைகள் பற்றிய ஆழமான விவரணங்கள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. பன்னிரண்டு அத்தியாயங்களை உடைய கல்பஸ்தானத்தில் மருந்துகளின் வகைகள், அவற்றை உருவாக்கும் முறைகள், அளவீடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியான சித்திஸ்தானத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 அத்தியாயங்கள் உள்ளன. இப்பகுதியில் பக்கவிளைவுகள், ஒவ்வாமை பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை நயக்கத்தக்கதாகும்.

மனித உடலானது கோடிக்கணக்கான கலங்களால் ஆனது என்பதனை அன்றே கூறியுள்ள சரகசம்ஹிதை அக்கலங்கள் பஞ்சபூதங்களால் உருவானது எனவும் 7 வகையான திசுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடுகின்றது. **ரசம்** (பிளாஸ்மா), **மாமிசம்** (தசைகள்), **மேதஸ்** (கொழுப்பு), **அஸ்தி** (எலும்பு), **மஜ்ஜா** (என்புமஜ்ஜை), **ரத்தம்** (அணுக்கள்), **சுக்லம்** ஆகியனவே அவ்வேழுமாகும். இவ்வேழுவகையான திசுக்களுக்கும் சாரமாக உள்ளது **ஓஜஸ்** என்ற பொருளாகும்.

ஜீரணத்தின்போதும் வளர்சிதை மாற்றங்களின் பொழுதும் வாதம், பித்தம், கபம் ஆகிய முத்தோசங்களும் வேறுசில உபதாதுக்களும் கழிவுப்பொருட்களும் உண்டாகின்றன இச்செயற்பாடுகள் ஒருசமநிலையில் நடைபெறுகின்றன. அச்சமநிலை குழம்புகின்ற சந்தர்ப்பங்களில் நோய்கள் உண்டாகின்றன எனச் சரகசம்ஹிதை குறிப்பிடுகிறது.[6]

வாதம் காரணமாக 80 விதமான நோய்களும் பித்தம் காரணமாக 40 நோய்களும் கபம் காரணமாக 20 விதமான நோய்களும் உண்டாகின்றன. இவை மட்டுமன்றி பிராணன், உதானன், சமானன், வியானன், அபானன் என்ற 5 விதமான வாயுக்களின் வரிசை மாற்றம், சேர்க்கை ஆகியவற்றின் விளைவாக 62 விதமான நோய்கள் உண்டாகும் எனச் சரகர் குறிப்பிட்டுள்ளார்

இவற்றுள்ளே பிரதானமான 149 நோய்கள் பற்றிய விரிவான தகவல்கள் சரகசம்ஹிதையில் இடம்பெற்றுள்ளன. அவற்றுக்கான சிகிச்சைக்குப் பயன்படக்கூடிய 341 தாவர மூலிகைகள் பற்றியும் விலங்குகளிலிருந்து பெறப்படும் 177 மருந்துகள் பற்றியும், 64 விதமான கனிமப் பொருட்கள் பற்றியும் மிக விளக்கமாகச் சரகசம்ஹிதை குறிப்பிட்டுள்ளது.

சுஸ்சுருதசம்ஹிதை :

ஆயர்வேத மருத்துவக்கலையின் சத்திரசகிச்சை முறைமைகள் பற்றி வெளிவந்த மிகத்தெளிவான மருத்துவக் கையேடாக சுஸ்சுருதசம்ஹிதை திகழ்கிறது. இதனுடைய காலம் கி.மு.1000 ஆக இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் ஊகமாகும். ஸுத்திரஸ்தானம் நிதானஸ்தானம், சரீரஸ்தானம், கல்பஸ்தானம், சிகிச்சாஸ்தானம், உத்தரஸ்தானம் என ஆறு பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் உத்தரஸ்தானம் பிற்சேர்க்கையாகும் ஸுத்திரஸ்தானத்தில் 46 அத்தியாயங்கள் அமையப்பெற்றுள்ளன. இப்பகுதி சிறப்பாக அறுவைச்சிகிச்சை பற்றிப் பேசுகின்றது.அறுவைச்சிகிச்சை பற்றிக்கற்கின்ற மாணவர்கள் முதலில் மனித உடற் கூற்றியலைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.எனவே இறந்த உடல்களை அறுத்துச் செய்யப்படும் சோதனைகள் இன்றியமையாதவை என்பதனை மிகவும் அழுத்தமாகச் சுஸ்சுருதர் கூறியிருக்கிறார். மேலும் சத்திரசிகிச்சைக்கு முன்பு நோயாளியை உணர்வு மறக்கச் செய்வதற்கான உபாயமாக மதுவை அருந்த வைத்தல் இன்றியமையாதது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகின்ற 101 வகையான கருவிகள் பற்றியும் அவற்றின் அமைப்புமுறைகள் பற்றியும் சுஸ்சுருதசம்ஹிதையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடலில் உள்ளே பொதிந்துவிட்ட அந்நியப் பொருட்களை வெளியேற்ற மருந்துகளை உள்ளே செலுத்த உதவும் குழல்கருவிகளைப் பற்றியும் குத்துவதற்கும் துளைபோடுவதற்கும் சுரண்டுவதற்கும் தைப்பதற்கும் உதவுகின்ற கூர்மையான கருவிகளைப்பற்றியும் தெளிவான குறிப்புக்கள் இந்நூலில் விரவியுள்ளன.[7]

சத்திர சிகிச்சைக்குப் பின்பு கட்டுப்போடுவது முக்கியமான விடயமாகும். அவ்வாறான 14 விதமான கட்டுக்களை பற்றியும் அவற்றிற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் பற்றியும் சுஸ்சுருதர் கூறியுள்ளார். மேலும் இப்பகுதியில் அறுவைச்சிகிச்சை செய்யமுன்பு காரப்பொருள் அல்லது நெருப்பினால் சூடுபோடுவது, கெட்ட இரத்தத்தை வெளியேற்ற அட்டைகளைக் கடிக்கவிடுவது போன்ற செயல்முறைகளும் விளக்கப்பட்டுள்ளன. எட்டுவிதமான அறுவைச்சிகிச்சை முறைகள் பற்றியும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நிதானஸ்தானம் 16 அத்தியாயங்களை உடையது. நோய்களின் அறிகுறி அவை தோன்றுவதற்கான காரணங்கள் நோய்வகைகள் அவற்றின் இலக்கணங்கள் பற்றி இங்கே விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆயுர்வேத மருத்துவக்கலையின் அடிப்படையைக் கற்க விரும்புவோருக்கான பாடவிதானமாக இதனைக் கருதலாம்.

பத்து அத்தியாயங்களைக் கொண்டதாகச் சரீரஸ்தானம் விளங்குகிறது. இப்பகுதியில் சிறப்பாகத் தாய்சேய் மருத்துவம், பற்றிச்சிலாகித்துப் பேசப்படுகிறது. கருவுருவாகும் வழிமுறைகள், கருச்சிதைவு ஏற்படாது தடுக்கும் வழிமறைகள் பற்றி இவ்வத்தியாயத்தில் குறிப்புக்கள் உள்ளன. சிகிச்சாஸ்தானம் 40 அத்தியாயங்களை உடையது. இரசாயனவாஜீகரண சிகிச்சை முறைகள் பஞ்சகர்மாமுறை போன்றவை இப்பகுதியில் ஆராயப்பட்டுள்ளன. வாதநோய், குட்டநோய், நீரிழிவு, அக்கி, விதைவீக்கம் கட்டிகள் போன்றவற்றுக்கான சிகிச்சை முறைகளும் சிகிச்சாஸ்தானத்தின் முதல் இருபது அத்தியாயங்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

இருபத்து இரண்டாம் அத்தியாயத்தில் உதடு, நாக்கு, தொண்டை, பல் ஆகியவற்றில் தோன்றும் நோய்களுக்கான சிகிச்சை முறைகள் பற்றி விபரிக்கப்படுகின்றன. வாய் துர்நாற்றம், முரசுகரைதல் பற்சூத்தை, வரிசையின்றிப் பல் முளைத்தல், உள்நாக்கு வளர்தல் போன்றவற்றுக்கான சிகிச்சை முறைகளும் இவற்றில் உள்ளடக்கம். மனிதர்கள் நீண்ட ஆயுளும் ஆண்மையும் பெற்று வாழ்வதற்கான காயகல்பங்கள் பற்றிய விபரங்கள் 26-30 வரையிலான அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. 31–40 அத்தியாயங்களில் இன்றைக்கு மேல்நாடுகளிலும் பிரபல்யமாகியுள்ள ஆயுர்வேத சிகிச்சை முறையான பஞ்சகர்மா முறை பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியிலே மனித உடலில் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடிய 27 இடங்களையும் அதற்குப் பயன்படுத்தக்கூடிய 6 வகையான உபகரணக் கூட்டங்களையும் சுஸ்ருதர் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார். சிறுநீரகக்கல், பிஸ்டுலா எனப்படும் ஆசனவாயிலிலுள்ள முளை, மூலநோய், பிரசவ அறுவைச்சிகிச்சை (சிசேரியன்) ஆகிய அறுவைச்சிகிச்சைகளும் இவற்றுள் உள்ளடக்கம் என்பதும் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாட்டில் மருத்துவப் பாரம்பரியம் :

சங்ககாலத்திலும் மூலிகை வைத்தியம் பற்றிய அறிவு நன்கு பரவியிருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களே சான்றாகின்றன. புறநானூற்றில் உடல் முழுவதும் விழுப்புண் பெற்றிருந்த வீரனின் உடலானது மக்களால் மருத்துவப்பயன்பாட்டிற்காக வெட்டப்பட்ட மூலிகைமரம் போலக் காட்சியளிப்பதாக பாடற்குறிப்பொன்று உள்ளது.

"மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி"

புறநானூறு 180

மருத்துவன் தனது அறிவைச் சமூகப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டுமே அன்றி குறுகிய தன்னலசிந்தை உடையவனாகத் தனது வித்தையைக் கரந்துவைத்தல் சமூகத் துரோகம் எனக் கலித்தொகை வலியுறுத்தியுள்ளது.

"வருந்திய செல்லல் தீர்த்த திறனறி யொருவன்
மருத்தறை கோடலின் கொடிதே"

வீரயுகமான சங்ககாலத்தில் போர்கள் மனித வாழ்வின் தவிர்க்கமுடியாத பகுதியாயின. இப்போர்களிலே அடையும் விழுப்புண்களுக்கான சத்திரசிகிச்சை முறைகள் பற்றிய அறிவை அக்காலச்சமூகம் பெற்றிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக "சிரல் பெயர்ந்தாற் போல நெடுவள்ளூசி" கொண்டு மார்பிலேற்பட்ட விழுப்புண்ணைத் தைத்தமை பற்றிப் பேசுகின்ற பதிற்றுப்பத்துபாடலைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் புகழ்பெற்ற மருத்துவர்கள் பலர் இருந்திருப்பர். ஆயினும் மருத்துவன் தாமோதரனார் என்பவர் ஒரு புலவராயும் இருந்த காரணத்தினால் அதிகமாக அறியப்படுகிறார். பிற்காலத்தில் திருக்குறளில் திருவள்ளுவர் "மருந்து"என்கிற அதிகாரத்தையே அமைத்துள்ளமை கவனிக்கத்தக்கது

கி.பி.5ம் நூற்றாண்டு தொட்டுப் பல்லவராட்சிக் காலத்தின் இறுதிவரை (கி.பி. 9ம் நூற்றாண்டு) தென்னாட்டில் நடைமுறையில் இருந்த இந்து மருத்துவப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கான மூலங்களாகப் பல்லவர் காலத்துக்குரிய கல்வெட்டுக்களையும் இலக்கியங்களையும் கொள்ளலாம். பல்லவ மன்னர்களால் அக்காலத்து மருத்துவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட நிலங்கள் **மருத்துவப்பேறு** எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டன. மூலிகைககளின் பெறுமதி உணரப்பட்ட காரணத்தால் அவற்றைப் பயிரிடுவோர் அரசாங்கத்திற்கு வரிசெலுத்தப்படவேண்டியவராயினர். எடுத்துக்காட்டாக **கருசலாங்கண்ணி** என்ற மூலிகையைப் பயிரிடுவோர் **கண்ணீட்டுக்காணம்** என்ற வரியையும் செங்கொடிவேலி, சித்திரமூலம் என்கிற பெயர்களால் அழைக்கப்படுகின்ற மூலிகைக் கொடியைப் பயிரிடுவதற்காக **செங்கொடிக்காணம்** எனப்படுகின்ற வரியையும் அரசாங்கத்திற்குச் செலுத்தினர் என்பதனைப் பல்லவர்காலக் கல்வெட்டுக்களினூடாக அறியமுடிகிறது.[8]

மேலும் பல்லவர் காலத்தில் **பாகூர், சோழிங்கூர், காஞ்சிபுரம்** ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட **கடிகை** எனப்படுகின்ற புகழ்பெற்ற கல்லூரிகளில் **சரகசம்ஹிதை, அஷ்டாங்கஹ்ருதயம், சுஸ்சுருதசம்ஹிதை** ஆகிய ஆயுர்வேத சாஸ்திரங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கப்பட்டதைச் சாசனச் செய்திகள் உறுதி செய்கின்றன. பக்தி இயக்கம் தொழிற்பட்ட பொழுது சைவநாயன்மார் புரிந்த சமூகத் தொண்டுகளில் மருத்துவ சேவையும் ஒன்றாகும். வெப்பு நோயைத் தீர்த்தலையும் விடமுறிவு செய்தமையையும் வெறுமனே அற்புதங்கள் என்ற அளவில்மட்டும் நோக்குவது தவறாகும். கண்ணப்பர் வரலாற்றினூடாக மூலிகை மருத்துவமும் **ஊனுக்குஊன்** என்ற மருத்துவ விதிமுறையும் (கண்ணிற்குகண் அப்புதல்) அக்கால சமூகத்தின் அறிவிற்கு அப்பாற்பட்ட விடயங்களல்ல என்பதை உணரமுடியும்

" வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்

மாாளாத காதல் நோயாளன்............."

என்கிற குலசேகராழ்வாரின் வரிகளினூடாகப் பல்லவர்காலச் சமூகத்தில் அறுவைச் சிகிச்சை முறைகள் வழக்கத்தில் இருந்தன என்பதை ஊகிக்க முடிகிறது.

சோழ சாம்ராஜ்யம் தென்னாட்டில் நிறுவப்பட்டபொழுது இந்துக்களின் பாரம்பரிய மருத்துவ அறிவும் மிகக் கச்சிதமாக நிறுவனமயப்படுத்தப்பட்டது. திருக்கோயில்கள் ஊடாக நிர்வாகம் நடத்துவதில் கைதேர்ந்தவர்களான சோழர்கள் மருத்துவ சாலைகளையும் கோயில்களை அண்டியே நிறுவியிருந்தனர். **சுந்தரசோழன் ஆதுலர்சாலை** என்ற பெயரில் தஞ்சைப் பெரியகோயிலுடன் இணைவுபெற்ற மருத்துவசாலை ஒன்றைக் குந்தவை நிறுவியிருந்ததாக 1ம் இராசேந்திர சோழனின் 3ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இதுதவிரவும் திருமுக்கூடல் என்ற இடத்தில் உள்ள திருமால் ஆலயத்தில் **வீரசோழன்** என்ற பெயருடைய மருத்துவசாலை ஒன்று நிறுவப்பட்டிருந்தமை பற்றிச் சாசனக் குறிப்புக்களால் அறியமுடிகிறது. பதினெட்டுப் படுக்கைகளைக் கொண்டதாக அறியப்படுகின்ற இதனை வீரராஜேந்திரசோழன் நிறுவியதாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. **சல்லியக்கிரியை செய்வோன் (அறுவைச்சிகிச்சை), பரியாரம் செய்வோன் (அறுவைச் சிகிச்சைக்கு ஒத்தாசை புரிவோன்), மருந்திடும் பெண்கள், மூலிகை சேகரிப்போர், ஈரங்கொல்லி (சுத்திகரிப்புத் தொழிலாளர்), திருமெய்காவல்** ஆகிய ஊழியர்கள் அங்கே பணியாற்றினர் என்பதனைக் கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறியமுடிகிறது.[9]

மருத்துவர்கள் அரசாங்கத்தின் போஷிப்பைப் பெற்றிருந்தமைக்கும் சான்றுகள் உள்ளன. விடமுறிவு மருத்துவர்களுக்கு **விடிஹரபோகம், மருத்துவப்பேறு** ஆகிய பெயர்களில் மானியம் வழங்கப்பட்டதனை உத்தரமேரூர் கல்வெட்டிலிருந்து அறிய முடிகின்றது.

சோழர்காலத்தில் பாவனையில் இருந்த ஆயுர்வேத மருந்துகள் :

வீரசோழன் மருத்துவசாலையில் ஒரு வருடத்திற்குத் தேவையான மருந்துகளின் பட்டியல் கல்வெட்டில் பதியப்பெற்றுள்ளது. அவற்றுள் பிராஹ்மியம், வாசஹரிதகி, தஸமூலஹரிதகி ஹேரண்டதைலம், பஞ்சாகத்தைலம், லசுநாதியேரண்டதைலம், மண்டூரவடாகம் வஜ்ரகல்பம் உத்தமகர்ணாதித்தைலம் சுநேத்ரி விமலை தம்ராதி கல்யாணலவணம் பில்வாஹரிதகி கண்டிரம் திரவத்தி பலா கடும்பூரி என்பன வாசித்தறியப்பட்ட மருந்துகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழி	தமிழ்-வழக்கு
வாச	ஆடாதோடை
ஹரிதகி	கடுக்காய்
தஸமூலம்	தசமூலம்
பலா	சித்தாமுட்டி
லசுநா	உள்ளி
ஏரண்ட	சித்தாமணக்கு
பில்வ	கூவிளை-வில்வம்
மண்டூர	இரும்புத்துாள்(கிட்டத்துாள்)
பல்லாதக	செங்கோட்டை

(ஒருமருந்தில் இடம்பெற்றுள்ள பிரதான மூலிகையின் பெயரைக்கொண்டே அம்மருந்திற்குப் பெயரிடுவது ஆயுர்வேதமரபாகும். இதுமட்டுமல்லாது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதான மூலிகைகள் சேர்க்கப்படும்பொழுது ஒரு மூலிகையின் பெயருடன் ஆதி என்ற தொடரையும் இணைத்துப் பெயர் சுட்டப்படுவதுமுண்டு.) [10]

சோழர்கால இலக்கியங்களுள் ஒன்றான கம்பராமாயணத்தில் விபீடணன் கூற்றாக அமையும் பின்வரும் பாடல்வரிகள் கவனிக்கப்படவேண்டியன.

' உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் போக்கி
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினார் துயரம் தீர்வர் '

அறுவைச்சிகிச்சையின் படிநிலைகளை இவற்றினிடையே கம்பன் அநாயாசமாகக் கூறிச் சென்றிருப்பது நயக்கத்தக்கது.

விஜயநகர நாயக்கர் காலத்திலும் இந்து மருத்துவப் பாரம்பரியம் தனித்துவமான வளர்ச்சியினைப் பெற்றிருந்தது. ஸ்ரீரங்கம் கோயிலில் புகழ்பெற்ற மருத்துவமனை ஒன்று நிறுவப்பட்டிருந்தது என்பதையும் அங்கே ஆயுர்வேதத்தின் ஆதர்சபுருஷராகக் கருதப்படும் தன்வந்திரியாருக்குக் கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது என்பதனையும் சாசனங்களுடாக அறியமுடிகிறது. இக்காலத்தில் தோன்றிய ஆதீனங்களும் தமது சமூகந் தழுவிய சேவைகளுள் ஒன்றாக மருத்துவ சேவையையும் ஆற்றிவந்தன.

சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பு :

இந்துப் பண்பாட்டு மரபில் சித்தமருத்துவம் தனித்துவமான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. ஆயுர்வேத மருத்துவ முறைமைகளுடன் பலநிலைகளில் சித்தமருத்துவம் ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற போதிலும் குறிப்பாக உலோகவகைகள் இரசவர்க்கங்கள் போன்றவற்றைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் முறைமைகளால் இது தனித்துவம் பெற்று விளங்குகிறது. (***"The therapeutic of Siddha medicine consists mainly of the use of metals and minerals, where as in the earlier Ayurvedic texts there is no mention of metals and minerals .In the Siddha texts from the times Mecury, Sulphur, Copper, Arsenic& variety of Other metals and minerals figure prominently as the therapeutic agents."*-DR.Narayanaswami**) [11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமருத்துவமானது பொதுவாக முப்பெரும்பிரிவுகளில் செயற்படுத்தப்படும். அவையாவன:

1. **தேவமருத்துவம்** - இரசம், பாடாணம், கந்தகம், உப்பு உலோக வர்க்கங்களால் சித்தமருத்துவ முறைப்படி தயாரித்த கட்டு, மாத்திரை, களங்கு, பற்பம், சிந்தூரம் போன்ற வகையறாக்களால் மேற்கொள்ளப்படுவது.

2. **மனிதமருத்துவம்-** தாவர-மூலிகைகளால் செய்யப்பட்ட குடிநீர், சூரணம், இரசம், பிட்டு, வடகம், இளகம், மாத்திரைகள் கொண்டு மேற்கொள்ளப்படுவது.

3. **ராஜச மருத்துவம்-** சூடுபோடுதல், அட்டை விடுதல், சலாகைபோடுதல், கொம்பு கட்டுதல், இரத்தம் வாங்குதல் ஆகிய முறைகள்

நோயாளியைப் பரிசோதித்தல், நோயை இனங்காணுதல், சிகிச்சையளித்தல் எனத் திட்டமான ஒழுங்குமுறைகளைச் சித்தமருத்துவம் கடைப்பிடித்துவந்துள்ளது. நோயாளியைப் பரிசோதித்தல் என்ற வகையில் அவரின் நாடித்துடிப்பு, உடல் வெப்பநிலை, சிறுநீர், மலம், நாக்கு, கண்கள், தொனி, நிறம் ஆகியவற்றைப் பரிசோதிக்கும்படி சித்த மருத்துவம் அன்றே அறிவுறுத்தியுள்ளது.

“நயமுறு வாகடத்தோர் கைநாடியை நன்நாவை
வியனுறு கண்ணை மெய்யின் பரிசத்தை நிறத்தை மெய்யை
செயமுறு மலசலத்தை செப்பிய சத்தந்தன்னைப்
பயமறத் தெளிந்திவ் எட்டும் பார்ப்பது பண்புதானே”

அங்காதிபாதம் நாடிப்பரிசோதனை

வாதம், பித்தம், கபம் ஆகிய முத்தோசங்களும் நாடித்துடிப்பில் பிரதிபலிப்பதனால் நாடிப்பரிசோதனை சித்த மருத்துவத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. நாடியைத் தொட்டுணர்வதற்கு உடலில் 10 இடங்கள் திருமூலரால் அடையாளங்காட்டப்படுகின்றன.

“ தாதுமுறை கேள்தனித்த குதிச்சந்து
ஓதுரு காமியம் உந்தி நடுமார்பு
காது நடுமூக்கு கண்டம் கரம் புருவம்
போதுறு உச்சிபுகல் பத்தும் பார்த்திடே”

என்ற வகையில் நாடித்துடிப்பை உணர்வதற்கு குதிச்சந்து காமியம் உந்தி நடுமார்பு காது நடுமூக்கு தொண்டை(கண்டம்) கரம் புருவம் உச்சி ஆகிய 10 இடங்கள் திருமூலரால் சுட்டிக்காட்டப்படுகிறது. மணிக்கட்டில் இது இலகுவாக உணரப்படக்கூடியது. மணிக்கட்டில் 3 விரல்களை வைத்து பெருவிரலின் கீழ் வாதமும் நடுவிரலில் பித்தமும் இடது விரலில் சிலேத்துமமும் உணரப்படும்.[12]

நாடிகள் இயங்கும் பாங்கினை மயில், அட்டை, ஓணான், தவளை, பாம்பு, விட்டில் போன்ற உயிரினங்களின் அசைவினை உவமையாகக் கொண்டு விளக்குவதும் சித்த மருத்துவ மரபாகும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அன்னமே கோழி ஓணான் முயல்என நடக்கில் வாதம்
பின்னையோர் ஆமை அட்டைபெயர்திடில் பித்தம் என்ப
சொன்னதோர் விழிமடந்தாய் துலங்கிய தவளை பாம்பு
முன்னமே மையமென்றும் மொழிந்தனர் நாடிதானே"

காரிஎம் மாதா பிள்ளை கர்ப்பமே முற்றி நின்றால்
கூரியவாதநாடி குண்டல குழப்போல் பாயும்
வீரிய மூன்றாம் திங்கள் விட்டில்போல் பதைத்துநிற்கும்
பாரிவை எட்டாம் திங்கள் பையவே புழுப்போல்ஓடும்"

குணபாடம் நோயை இனங்காணுதல்

சரீரத்துக்கு ஏற்படும் நோய்களை சித்தமருத்துவம் 4448 என அடையாளங் கண்டுள்ளது.

" நாமப்பா அப்படியே நிசமாய்ச் சொன்னோம்
நாலாயிரத்துநானூற்று நாற்பத்தெட்டே"

அகத்தியர்வைத்தியகாவியம் 1500

இந்நோய்களை கழிச்சலென்ற திராணியிலே விதங்கள் ஆறு கண்நோய்கள் தொண்ணூற்றாறு, பதினெட்டுக்குஸ்டம், பாண்டுவகை அஞ்சு, சன்னி பதின்மூன்று, சயம் தொண்ணூற்றாறு, குன்மங்கள் எட்டு, எண்பதாம் வாதம் என்றவாறு அவற்றின் வகைப் பாடுகளையும் சித்தமருத்துவம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.[13]

நோயின் அறிகுறிகளைக் கொண்டு நோயை அடையாளங்காணுதல்,அதற்கான சிகிச்சை முறை, நோயாளிக்கான ஆலோசனை ஆகிய மருத்துவப்படிமுறைகளை சித்தமருத்துவம் மிகத் தெளிவாக அனுசரித்துச்சென்றிருக்கிறது. இதற்குரிய ஒரு எடுத்துக்காட்டாக நவீனமருத்துவ உலகிற்கு சவாலாக உள்ள நீரிழிவு நோயை சித்த மருத்துவம் எவ்வாறு அணுகுகிறது என்பதை எடுத்துக்காட்டலாம். நீரிழிவு நோயின் அறிகுறி பற்றி வைத்திய சிந்தாமணி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

" நீரேஅழியும் நாளிகைதோறும்
நிரம்பக்கலயம் தனிலிட்டு
காரே இணங்கும் குழலாளே
காய்ச்சிப் பார்த்தால் பாணியதாய்
நேராய் அதுவும் இனித்திருக்கும்
நீரும் தரையில் விட்டாக்கால்
சீராய் எறும்பு ஈ மொய்க்கும்
செய்யுங்குணங்கள் செப்பக்கேள்"

என்றவாறு நாளிகைதோறும் சிறுநீர் கழிக்கும் குணம், அதைக்காய்ச்சிப்பார்த்தால் பாணிபோலாகும் தன்மை, இனிப்புச்சுவையிருத்தல், ஈஎறும்பு மெய்த்தல், ஆகிய அறிகுறிகளை விளக்கியிருக்கக் காணலாம். நீரிழிவு நோயாளர்கள் உப்பு பச்சையரிசி என்பவற்றையும் இனிப்புப்பணடங்களையும் தவிர்க்கும்படி வைத்தியசிந்தாமணி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ......படிக்குப்பூசை உப்பாகா பச்சையரிசி தானாகா
அடிக்கடிக்கு நீராகா ஆகாப்பண்டம் தானாகா
......மனிதர்க்குண்டா நீரிழிவே"

நீரிழிவு நோய்க்கென பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுள் ஆவாரை நாவல் கடலழிஞ்சில் மருதம்பட்டை கோஸ்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய கசாயமும் ஒன்றாகும் என்பதனை தேரையர்கசாயம்நூறு என்ற சித்தமருத்துவ நூலிலிருந்து அறியமுடிகிறது.

" ஆவிரங் கொன்றை நாவல்
அலைகடல் முத்தம் கோட்டம்
மேவிய மருதந் தோலும்
விரைந்துடன் ஒக்கக் கொண்டு......."

தேரையர்கசாயம்நூறு

விடமுறிவு :

விடமுறிவு பற்றியும் நஞ்சுத்தன்மையான தாவரப் பகுதிகளுக்கு விடமுறிவைத் தரக்கூடிய தாவரங்களையும் அடையாளங்கண்டு அவற்றை பின்வரும் சித்த மருத்துவப் பாடல் எதிரெதிராகப் பட்டியற்படுத்துகின்றது.

"எட்டிக்கு நாவல் இருதோன்றிக்கு தான்றிக்காய்
வட்டமுலை தாமரையாய் ஆவிரைக்கள்ளிக்கு
அரிக்குக் கடுக்காய் நெய்தேனுக்கு வெந்தகரி
எருக்கிலைக்கு வள்ளி இயங்கும் பழமாகும்
நேர்வாளம் மிகுத்தால் நீள்வசம்பு நன்றாகும்
வேத்துச்சிவதைக்கு வெள்வேல் மிகநன்றாகும்
....
வெற்றிலையோடு எண்ணை விழுங்கிக் குடிப்பார்க்கு
முற்றிய தேங்காய்ப்பால் முறிக்கும் மருந்தாகும்
இத்தனையாம் நஞ்சுவகைகள் முழுதுக்கும்
ஒத்தபொது மருந்து உளவாம் அவையிரண்டே
அவுரியொடு சீந்தில் அவையென்றறிவீரே" 14

அனுபானம்—பத்தியம் :

சித்தமருத்துவமானது நோய்க்கான மருந்துகளை கொடுக்கும்போது தேன் பழச்சாறு போன்ற அனுபானங்களையும் சேர்த்துக்கொடுத்தல் நன்றெனப் பரிந்துரை செய்கின்றது.

"ஊட்டடா அனுபானத்துறையோடொக்க"

அகத்தியர்காவியம்1500 – பாடல்673

மேலும் புளி உப்பு மாப்பண்டம் இறைச்சி தயிர் காரம் பெண்போகம் ஆகியன நீக்கப்பட வேண்டும் என்கிற பத்திய விதியை குறிப்பிடுகின்றபோதும் இவை நோய்க்குநோய் மாறுபடும் எனவும் குறிப்பிடுகிறது.

" நீக்கிடு புளிகசப்பு நீக்கினால் மெத்தநன்று
போக்கிலே கொள்வீராகில் பெறுப்பது வெகுநாள்செல்லும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வநம்பிக்கை :

இந்துப்பண்பாட்டு மரபின்படி சித்தமருத்துவர்களும் நெய் சிந்தூரம் எண்ணை போன்ற மருந்துவகையறாக்களைத் தயார்செய்யும் போதும் அவற்றை நோயாளிக்கு அளிக்கும்போதும் தெய்வங்களை நினைத்து பூசை செய்வது வழக்கமாகும். அம்பிகை, விநாயகர், சிவன், வைரவர் ஆகியோர் பொதுவாக சித்தமருத்துவ நூல்கள் பலவற்றிலும் இவ்வாறு பூசிக்கப்படவேண்டியவர்களாகக் கூறப்படுகின்றனர்.

"ஆயிபதம் பூசித்து அடுப்பிலேற்றே
நின்றாடும் ஈசனுக்குப் பூசைசெய்து
நனைவோடே காசெடைதான் உண்ணச் சொல்லே"

அகத்தியர்காவியம்1500 – பாடல் 500

சத்திரசிகிச்சை :

சித்தமருத்துவமானது அறுவைச்சிகிச்சையை அசுர வைத்தியம் என்கிறது. அகத்தியர் சஸ்திராயிதவிதி எனும்பெயரில் இன்று கிடைக்கப்பெறும் தொகுப்பொன்றில் அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படும் 26 ஆயுதங்கள் பற்றிய தகவல்கள் உள்ளன.

கத்தி சத்திரம் கவின் குறும்பி வாங்கியும்
முக்கவா தன்னுடன் முள்ளுவாங்கியும்
ஆழிக்கோலும் அடுத்த பிறையுடன்
தத்தரிக்கையுடன் பகைரை வாங்கியும்
முச்சலாகையொடு முனிமொழியோட்டும்
செப்புக்கீழையும் சீரியசலாகையும்
வட்டகைதன்னுடன் வளர்பஞ்சமுகமும்
செப்புச்சலாகையும் கொம்பும் குடோரியும்
வெங்கலக்குழலும் ஈயச்சலாகையும்
சாயக்கோலும் கண்கத்தி தண்டும்
இவையிவை ஆயுதம் இருபத்தாறும்
சிவனவன் அருளால் திகழ் சத்திராயுதமே 15

மேற்குறிப்பிட்ட ஆயுதங்களுள் சஸ்திரம் (சத்திரம்) என்னும் ஆயுதமே தலையாயது. ஆறங்குலநீளமும் ஆறுகளஞ்சு (33கிராம்) நிறையும் வேப்பிலை போன்ற வடிவமும் கொண்ட இது கட்டி பிளவை போன்றவற்றை அறுக்கப்பயன்பட்டதாக அறியமுடிகிறது.

சித்தவைத்திய மூலங்கள் :

நவநாதசித்தர் மரபுடனும் பதினெண்சித்தர் மரபுடனும் சித்தவைத்தியமானது நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. கையளிப்புப் பாரம்பரியத்திலும் ஆவணப் படுத்தலிலும் ஏற்பட்ட குறைபாடுகளால் சித்தவைத்திய நூல்களிற் பெரும் பாலானவை இன்று எமக்குக் கிடையாதொழிந்துள்ளன. சித்தர்கள் அனைவருமே மருத்துவ ஞானமுடையவர்களாக விளங்கியிருப்பினும் அகத்தியர், திருமூலர், போகர், புலிப்பாணி, பாம்பாட்டிச்சித்தர், தேரையர், இராமதேவர், போன்ற சிலரின் படைப்புக்களே இற்றைவரை அறியப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியர் - அகத்தியர் பெருந்திரட்டு, வைத்திய சிந்தாமணி, குருநாடி 235, அகத்தியர்-1500

திருமூலர் - திருமூலர்வைத்தியம் 600, திருமந்திரம் 1000,

போகர் - போகர் 7000, சிகிச்சைவெண்பா, மூப்புச்சூத்திரம்

தேரையர் - தேரையர் தைலவர்க்கம், வைத்தியக்காப்பியம், நோய் மருந்தளவை, மருந்துபாரதம், நோயணுகாவிதி, கஷாயம் 100, பதார்த்தகுணம் தைல வர்க்கச்சுருக்கம், நீர்நிறக்குறி

இராமதேவர் - வைத்திய சிந்தாமணி 700, வாதவைத்தியம் 400, செந்தூரச் சூத்திரம் 155, எடைபாகம் 16, பாம்பாட்டிச்சித்தர் - சித்தர் ஆரூடசிந்து, கருவூரார் பலதிரட்டு 300

தமிழ் வாகடம் :

தென்நாட்டில் ஆயர்வேத சித்தமருத்துவப் பாரம்பரியங்களின் இணைப்பாக வாகட நூல் விளங்குகிறது. வாகடர் இயற்றிய அட்டாங்கஹிருதயசம்ஹிதையின் தமிழ்மொழி பெயர்ப்பே வாகடம் என்க் கூறுவாரும் உளர். ஆயினும் இது தவறாகும். தென்னாட்டுச் சித்தமருத்துவப் பாரம்புரியத்தை உள்வாங்கித் தோன்றிய நூலாகவே இதனைக் கருதல் வேண்டும். இந்நூற்றிரட்டு கி.பி.11-13ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தமிழ் நாட்டில் தோன்றியதாகச் சிலர் கருதுகின்றனர். ஆயினும் இக்கருத்து சர்ச்சைக்குரியது. வடமொழி ஆயர்வேத சாஸ்திரங்களில் கூறப்படாத நாடிப்பரிசோதனை நுட்பங்கள் வாகடநூலில் விளக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

ஆயினும் தமிழ் வாகடநூலின் பெரும்பகுதி கையளிப்புப் பாரம்பரியத்தின் குறைபாடுகளால் அழிந்துபோக எஞ்சிய பகுதிகளிலிருந்து ஆங்காங்கு கிடைத்த பாடல்களைத் தொகுத்தனர்.பாடல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவை அகத்தியர் 500, அகத்தியர் 2000, அகத்தியர்காவியம் 1500 எனப் பெயரிடப்பட்டன. தமிழ் வாகடம் இன்று முழுமையாகக் கிடைக்கப்பெறாத போதிலும் அதனுடைய உள்ளடக்கம் எவ்வாறு அமையப்பெற்றிருந்தது என்பதற்கு பின்வரும் பாயிரப்பாடல் வரிகள் சான்றுபகர்கின்றன.

"பாயிரம் முதலாய்த் தானம் பஞ்சபூதத்தினோடு
வாயுவும் பத்துநாடி வரிசையப்படியே நாடி
நோய்வரும் படியசாத்யம் நுகரினிற் கஷாயம் சூர்ணம்
தூயலேகியம் நெய்மாத்திரை துலங்கிய
சொன்னதோர் தயிலம் மிக்க வடகத்தோடு
சுவைரசவர்க்கமலால்
அன்னபூ அட்டை கொம்பு அரியசத்திரத்தினோடு
இன்னமுங் கேளாய் ரட்சை இதுமுதல் நயனரோகம்
முன்னமே பெரியோர் சொன்ன முதுதமிழ் பாடல்தானே" அகத்தியர் 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து பஞ்சபூதங்கள், தசவாயுக்கள், கருஉற்பத்தி, நாடிப் பரிசோதனை, நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் (நிதானம்), குணங்குறிகள் மருந்து வகைகளான கஷாயம், சூர்ணம், லேகியம், நெய்மாத்திரை, வடகம், இரசவர்க்கங்கள், ஆகியவற்றுடன் சத்திரசிகிச்சை விதி, அட்டைவிதி, கொம்புவிதி, நயனவிதி ஆகிய வழிமுறைகளையும் உள்ளடக்கிய முழுமையான மருத்துவக்கலைக்களஞ்சியமாக தமிழ் வாகடநூல் அமைந்திருந்தமையை ஊகிக்க முடியும்.

மனித உடற்கூற்று மரபியல் - Human Genetics

பெற்றோரின் மரபுவழிப்பட்ட "பண்புகள் குழந்தைக்கு அமைதல் குறித்தும் சித்த மருத்துவம் தீர்க்கமான சிந்தனைகளைக் கொண்டிருந்தது.

" ஏய் அங்கு அலந்த இருவர்தம் சாயத்துப்
பாயும் கருவும் உருவாம் எனப்பல
காயம் கலந்தது காணப் பதிந்தபின்
மாயம் கலந்த மனோலயம் ஆனதே" (திரு.மந் 268)

அதாவது, சுக்கிலமும் சுரோணிதமும் கருவாகப் பெண்ணின் கருப்பையில் பதியும் பொழுதே ஆண், பெண் ஆகிய இருவரின் உடலில் கலந்துள்ள மாயாகாரியத் தத்துவங்களும் மனத்தின் எண்ணம் உணர்வு முதலானவையும் பதியும் என்று திருமூலர் உரைப்பார். இதனை இன்றைய மேலைத்தேய மரபணுவியல் ஆராய்ச்சிகளும் உறுதி செய்கின்றன. "**ஜீன்கள் என்பவை மரபுவழிப் பண்புக்கூறுகளைத் தாங்கிநிற்கும் அலகுகளாக குரோமோ சோன்களில் அமைந்துள்ளன. பாலணுக்களாகிய** (GAMETES) **விந்துவிலும்,** (SPERM) **அண்டத்திலும்** (OVUM) **உள்ள குரோமோசோன்களின் ஜீன்களே குழந்தையின் நிறம், அறிவு, இரத்தவகை, உடல்நிலை, மனப்போக்கு ஆகியவற்றை மரபுவழி முடிவு செய்கின்றன**". Dr. V. Kapur & Dr. R.K. Suri - Basic Human Genetics [16]

இன்றைய மருத்துவ அறிவியலின்படி ஒரு குழந்தை ஆணாகப் பிறக்கவேண்டுமா அல்லது பெண்ணாகப்பிறக்க வேண்டுமா என்று நிர்ணயிப்பவை **பால்நிர்ணய குரோமோ சோன்களாகும்.** இதில் பெண்களுக்கு எப்பொழுதுமே x குரோமோசோன்களாகத்தான் இருக்கும். ஆணிடமிருந்து வெளியேறும் கோடிக்கணக்கான உயிரணுக்களில் பாதி x குரோமோசோன்களாகவும் மீதி y குரோமோசோன்களாகவும் இருக்கும். இவற்றில் x குரோமோசனுள்ள உயிரணு பெண்ணின் x கருமுட்டையுடன் சேர்ந்தால் x x ஆகி பெண்குழந்தை உண்டாகும். Y குரோமோசோன் உள்ள உயிரணு எனின் xy ஆகி ஆண்குழந்தை உருவாகும். என்பதே இன்றைய அறிவியல் முடிவு.

" ஆண்மிகில் ஆணாகும், பெண்மிகில் பெண்ணாகும்"

திருமந்.287. 12

எனத் திருமந்திரம் குறிப்பிடுகின்ற செய்தி இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. ஆண்மிகுதல் என்பதை y உள்நுழைதல் என்றும் பெண்மிகுதல் என்பதை x உள்நுழைதல் என்றும் கருத இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக :

இந்துநாகரிகம் என்ற ஆழ்ந்தகன்ற விடயப்பரப்பை வெறுமனே சமயத்தளத்தில் இருந்து மட்டுமே விளங்கிக்கொள்கின்ற அல்லது விளக்க முற்படுகின்ற முற்கற்பிதங்களை கடந்து இந்துப்பண்பாடு என்ற எண்ணக்கருவின் உண்மையான வீச்செல்லைகளைப் பற்றிய புரிதல்கள் அவசியமானதாகும். அந்தவகையில் இந்துப் பண்பாட்டின் அறிவியற் கூறுகளில் ஒன்றான ஆயுர்வேத–சித்தமருத்துவப் பாரம்பரியத்தின் மூலங்களினை அறிந்துணர்தல் இன்றியமையாததாகும்.

உசாவியவை :

01. ஜம்புநாதன்.எம்.ஆர் (மொழிபெயர்ப்பு) அதர்வவேதம். (22ம் சூக்தம்)
ஜம்புநாதன் புத்தகசாலை,சென்னை,1940
பக் 72

02. மே.கூ.நூ, பக் 79

03. நஜன், வேதமாதா,
பிரதீபாபிரசுரம; சென்னை 1997
பக் 34

04. ஸ்ரீ ராமதேசிகன்.எஸ்.என், சுஸ்ருதசம்ஹிதை பகுதி 2
இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி இயக்குனர் அகம்,
சென்னை,1995, பக்

05. சந்திரா.எஸ்., அறிவியல் முன்னோடிகள்,
விசுபதிப்பகம்,
சென்னை.1990 பக்41-42

06. www.Hinduuniverse

07. சந்திரா.எஸ்., மே.கூ.நூ ,பக்55-56

08. தட்சணாமூர்த்தி.அ தமிழர் நாகரிகமும் பண்பாடும்
யாழ் வெளியீடு,
சென்னை, 2005 பக் 366

09. தட்சணாமூர்த்தி.அ
மே.கூ.நூ ,பக் 367

10. Charropadhyaya.C(ed) **Studies in the History of Science in India**
New Delhi,1987

11. Narayana swami,V **Introduction to the Siddha System of Medicine**
I.I.S.R, Delhi 1987
Page 04

12 .கோவேந்தன்,த,பண்டையமருத்துவமும் பயன்தரு மூலிகைகளும்,
திருமகள் நிலையம்
சென்னை,1989 பக்-73

13. மாதவன்.இரா (உரை) அகத்தியர் வைத்திய காவியம்-1500
தமிழ் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்,1994
பக் 70

14 கோவேந்தன்,த மே.கூ.நூ, பக் 93

15 கோவேந்தன்,த மே.கூ.நூ, பக் 89- 90

16 மலர் ,அ. மெய் பொய்யன்று-திருமூலர், வள்ளலார்
திபார்க்கர் வெளியீடு
சென்னை 2002.
பக் 152-153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் - நவீனத்துவம் அல்லது நவீனப் பின்னியம் (Post - modernism) ஒரு சமூக நோக்கு

- ச.சசிதரன் -

அறிமுகம் :

கடந்த பல தசாப்தங்களாக கோட்பாடு, கலைகள், விஞ்ஞானங்கள் என்பவற்றை ஆட்சிப்படுத்தி, சமூகவியல் தழுவிய சிந்தனைகளை 'உலுக்கி எடுக்கும்' ஒரு கட்டளைப் படிம மாற்றீடாக (Paradigm Shift) பின்-நவீனத்துவம் குறித்துரைக்கப்படுகிறது. சென்ற நூற்றாண்டின் எண்பதுகளின் மத்தியிலிருந்து கல்வியில் சார் ஆய்வுத்துறையின் ஒரு புலப்பார்வைக்கான சாளரமாகச் செல்வாக்குப் பெற்ற இப் பின் நவீனத்துவக் கோட்பாடு, அடிப்படையில் சிக்கல் தன்மை வாய்ந்த சிந்தனைப் போக்காகும். அது பிரத்தியேகமான நீண்ட, பல்படித்தான விவாதங்களுக்கு இட்டுச் செல்லுகின்ற ஒரு வகையான கருத்துக்களின் கூட்டாகவும் உள்ளது. கலை, கட்டடக்கலை, இசை, திரைப்படத்துறை, சமூகவியல், இலக்கியம், தொடர்பாடற்துறை, நாகரிகப் போக்குகள், செல்நெறிகள், அதனோடு இணைந்த கருத்தியல் தாக்கங்களையும் இதனோடு இணைத்துள்ளமையை அவதானிக்கலாம்.

பின்-நவீனத்துவம் என்பது, (Post - Modernism) வரலாற்றின் எந்தக் கட்டத்தில், எத்தகைய சமூகப் பின்புலங்களின் நிலைகளின் கீழ் ஒரு கோட்பாட்டியற் சிந்தனையாக கருக்கொள்ள ஆரம்பித்தது என்பதைத் தெளிவுபடப் பகுத்து, ஆய்வு செய்து, தெரிவிக்க இயலாத காரணத்தால், அதனை சமூக வரலாற்றின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் இருத்துவதும், வகை குறிப்பதும் சிரமசாத்தியமாக இருக்கிறது. எவ்வாறாயினும், நவீனத்துவம் (Modernism) என்கிற சிந்தனை முறையினை / இயக்கத்தினை ஒரு 'சரளமாகக்' கொண்டு பின் நவீனத்துவம் பற்றிச் சிந்திப்பது எளிதான முறையாக அமையலாம்.

நவீனத்துவமும் அதன் சமூகப் பின்புலமும் :

இருபதாம் நூற்றாண்டின் முற்கூறுகள், கைத்தொழில் மயப்புரட்சியின் சமூக, பொருளாதார, பண்பாட்டு விளைவுகளின் துலாம்பரமான காலகட்டமாக அமைந்திருந்தது. தொழிற்சாலை (Factory System) முறைமையும், நகரமயமாக்கமும் (Urbanization), பாரம்பரிய தொடர்பாடல் முறையின் இடத்தை வெகுசனத் தொடர்பாடல் ஊடகங்கள் பிடித்துக் கொண்டமையாலும் சமூக அசைவியத்தினாலும் (Social Mobility) கலை, இலக்கிய வடிவங்களிலும் கணிசமான மாற்றங்கள் ஏற்படலாயின. எனவே, அவற்றை விமர்சிக்கும் பார்வையிலும், பாங்கிலும் மாற்றம் கொள்ள வேண்டிய இந்தப் பின்புலத்தில், மேலைத்தேய கலைகள் பற்றிய, அழகியல். தளத்தினின்றே 'நவீனத்துவத்தின்' வெளிப்பாடும், கருத்தியல் உருவாக்கமும் கருக்கொள்வதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கலாம். பார்வைப் புலக்கலைகள் (Visual Arts) இசை, இலக்கியம், நாடகம் என்பவற்றுடன் தொடர்புற்றதனால், 'நவீனத்துவம்' பரந்தளவில் ஒழுக்கம், சீர்மை என்பவற்றினை கலை வடிவங்களில் தேடிய ஓர் அழகியல் வாதம் தழுவிய சிந்தனை முறைமையாகவே முத்திரையிடப்பட்டது. அது கலைகள் பற்றின ஆதி விக்டோறியா காலத்துத் தராதரங்களை நிராகரித்தது. கலைகளின் உருவாக்கம், அவற்றின் அளிக்கை முறை, அவற்றை நுகரும் தன்மை, கருத்துக்கள் என்பவற்றையும் நவீனத்துவவாதம் விமர்சித்தவாறு, புதிய சிந்தனைகளை முன்வைக்கத் தொடங்கியது. இத்தகைய கலை/அழகியல்தளம் சார்ந்து ஒரு புதிய அலை எழுந்த காலகட்டமாக கி.பி. 1910-1930 வரையிலுமான ஆண்டுகள் குறிக்கப்படுகின்றன. இக்காலப் பரப்பினை "அதி உயர் நவீனத்துவ காலகட்டமாக" (Period of High Modernism) பின் வந்த ஆய்வறிவாளர் குறிப்பிடுவர். இக்காலகட்டத்தில் நவீனத்துவ இலக்கியத்துறை சார்ந்த முக்கிய பிரமுகர்கள் கவிதை, புனைகதை என்பன எவ்வாறு இருக்க வேண்டும், எவற்றை, எந்தப் பாங்கில் சொல்ல வேண்டும் என்பன பற்றி மீள்வரையறை செய்தனர். அவர்களுள் Woolf, Joyee, Eliot, Stevens, Kafka, Proust முதலானோர் குறிப்பிடத்தக்கோர். இவர்களே இருபதாம் நூற்றாண்டு நவீனத்துவவாதத்தின் பிதாமகர்களாகக் கருதப்படுகின்றனர்.

இலக்கிய நோக்கில் நவீனத்துவத்தின் குணாம்சங்கள் :

எனவே நாம் தெரிவித்தவாறு, நவீனத்துவத்தின் ஆரம்பகாலக் கோட்பாட்டுச் சட்டகமும் (Framework of theory), அதன் கருத்தியற் சாரமும் கலை, இலக்கியத் தளத்தையே அடி நிலையாகக் கொண்டுள்ளன. அதன் வழி, நவீனத்துவம் உட்கொண்டிருந்த குணாம்சங்களாகப் பின்வருவன அமையும்.

1. குறித்ததோர் எழுத்தாக்கமானது, அதனை வாசிப்போர் மனதில் கருத்தூன்றியதாய் அமைதல் வேண்டும். / உணர்வுத் தாக்கம் ஏற்படுத்தவும் வேண்டும். இப்பண்பு காட்சி வழிப்பட்ட கலைகள் சார்ந்தும் வலியுறுத்தப்பட்டது.

2. கதை சொல்பவர் / படைப்பாளியின் பார்வைக் கோணத்தினின்றும் புறவயமாக விலகிச் சென்று, திட்பமான அபிப்பிராயங்களையும், தெளிவான ஆசார நிலைகளையும் அழுத்தமான முறையில் கவனித்தல். எடுத்துக்காட்டு Faulkner இன் பல்படித்தான - எடுத்துரைப்புக் கதைகள் (Mulitiply - Narrated Stories)

3. இனங்காண முடியாத, வேறுபடுத்தி அறிய முடியாத வடிவப்பண்பு, புனைகதை ஆவணம் போலவும், கவிதை, உரைநடை போலவும் தோற்றுதலைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டு : T.S.எலியட்டின் (T.S.Eliot) கவிதைகைள் "ஆவணத்தன்மை" பெற்றுக் காணப்படல்.

4. துண்டாடப்பட்ட எழுத்து வடிவங்களிலும் (Fragmented forms) தொடர்ச்சித் தன்மையற்ற எடுத்துரைப்பு வடிவங்களிலும் (Discontinuous Narratives) அவ்வாறே எழுந்தமாறான / வெவ்வேறு விடயங்களை மையப்படுத்திய எழுத்துப் போக்குகளை அழுத்தம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பிரதிபலிப்பு சார்ந்த, நாட்டம் மிக்க தன்மை / கலையுற்பத்திப் பணி தொடர்பான பிரதிபலிப்பு ரீதியான சுயபிரக்ஞை மிகுந்த நாட்டம். இங்கு, ஒரு கலைப்படைப்பு எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது/நுகரப்படுகின்றது என்பது பற்றி படைப்பாளியிடத்திலும் தன்னுணர்வு காணப்படும்.

6. விரிவானதும், எடுப்பானதுமான முறைசார் அழகியல் (Elaborate formal Aestheties) நிராகரிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஆகக்குறைந்தளவிலான வடிவங்களும், மிகையான அழகியல் கோட்பாடுகளும் நிராகரிக்கப்படுகின்றன.

7. ''உயர்வு'', ''தாழ்வு'' என்பன போன்ற தராதர வேறுபாடுகளும் மறுக்கப்படுகின்றன. இத்துடன் சனரஞ்சகப் பண்பாட்டம்சங்களும், அவை தொடர்பான விநியோகிப்பு (Supply), நுகர்வு (Consumption) என்பனவும் நிராகரிக்கப்படுகின்றன.

இவ்வாறு கலை, இலக்கியத்தளம் சார்ந்த, நவீனத்துவத்தின் குணாம்சங்கள் அல்லது கலை பற்றிய அதன் சித்தாந்த முன்வைப்புக்கள், பின்வந்த காலப் பகுதியில் பின்-நவீனத்துவச் சிந்தனைகளுக்கு ஒரு நுழைவாயிலைத் திறந்துவிட்டன.

நவீனத்துவமும், பின் நவீனத்துவமும் – கருத்தியல் வேறுபாடுகள் :

நவீனத்துவம் போலவே, பின்-நவீனத்துவமும் முன் சொன்ன குணாம்ச வலியுறுத்தல்களை இன்னும் இறுக்கமான வகையில் பின்பற்ற முற்படுகின்றது. கலைகள் என்பவற்றுக்கும் அப்பால், சமூக தோற்றப்பாட்டியல் விடயங்களிலும், இனத்துவம் முதலான மனித குலப்பிரிவினைகள் சார்ந்தும் பேதங்கள் கற்பிக்கப்படுவதனை பின் நவீனத்துவம் நிராகரிக்கிறது. நவீன கலையும், அதன் வழியான சிந்தனையும் மனிதர் மத்தியில் சுய விழிப்புணர்வுக்குச் சார்பாகவே பின்-நவீனத்துவமும் இயங்கியுள்ளது. எனினும் கட்டவிழ்ப்புச் செய்தல் (Deconstruction) துண்டாடலும், தொடர்ச்சி அற்றதன்மை (விசேடமாக எடுத்துரைப்பு வடிவங்களில்), கட்டமைப்பு மீறல், மையப்பகுதி நீக்கம் முதலான விடயங்கள் சார்ந்த பின்-நவீனத்துவமானது, நவீனத்துவ சிந்தனைகளினின்றும் வேறுபட்டே காணப்படுகின்றது.

நவீனத்துவமானது வரலாறு மனிதரின் அகவயத்தன்மை பற்றிய துண்டாடப்பட்ட ஓர் அபிப்பிராயத்தை முன் வைக்கவே முற்படுகின்றது. (எடுத்துக்காட்டு : Woolf இன் "To the Lighthouse" ஆனால் மறுபுறம் துண்டாடல் பற்றிய அபிப்பிராயத்தை துன்பியல் தன்மையுடனேயே அது நோக்குகிறது. நவீன வாதிகள் (Modernist) நவீன வாழ்க்கையில் இழக்கப்பட்ட ஐக்கியம், ஒருங்கிசைவு, அர்த்தப்பாடு என்பவற்றை நவீன கலைப் பணிகளோடு மீள எய்திக் கொள்ளலாம் என்று கருதுகின்றனர். ஏனைய மானுட நிறுவனங்கள் செய்ய முடியாத ஒன்றை கலைகள் செய்கின்றன என்ற ரீதியில் அவர்கள் கலை சார்ந்த விடயங்களுக்கு ஒரு முதன்மையை வழங்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை பற்றிய பின்–நவீனத்துவப் பார்வை

நவீனத்துவச் சிந்தனை போலன்றி, பின்-நவீனத்துவமானது துண்டாடலின் தன்மைகள் குறித்து வருத்தம் கொள்வதற்குப் பதிலாக மகிழ்ச்சி கொள்கின்றது. அதனுடைய கருத்துக்கள் சமூக தோற்றப்பாடுகளின் மீதான எதிர்மறை உணர்வைப் பிரதிபலிக்கின்றன. "உலகம் என்பது அர்த்தமற்றது. எனவே கலையானது உலகுக்கு ஓர் அர்த்தப் பாட்டினை வழங்கும் என்று எதிர்பார்த்து, எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம்" என்பதான நவீனத்துவத்தின் குரலாக உள்ளது.

பிரெடெரிக் ஜேம்சனின் (Freedric Jameson) கருத்துப்படி, இவ்விரு சிந்தனைப் புலங்களுமே முதலாளித்துவ படிநிலைகளைத் தொடர்ந்து முகிழ்த்து வளர்ந்த பண்பாட்டு அமைப்பாக்கங்களாக உள்ளன. இந்த இடத்தில் ஜேம்சன் குறிப்பிடும் முதலாளித்துவப் படிநிலைகள் மூன்று வகையான காலகட்டங்களாகப் பகுத்து நோக்கப்படலாம்.

1) பதினெட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பா உட்பட சந்தை அடிப்படையிலான முதலாளித்துவத்தின் செல்வாக்கு நிலவியது. இம் முதலாங்கட்ட காலம் பிரத்தியேகமான தொழில்நுட்ப அபிவிருத்தியுடன் தொடர்புபட்டது. நீராவி இயந்திரக் கண்டறிகையும் (Time - Space), காலம் வெளி சார்ந்து ஏற்பட்ட விரைந்த தொழில் நுட்பமயமாக்கமும், யதார்த்தவாத அழகியலும் (Realism) என்றவாறு இதற்கு நாம் எடுத்துக்காட்டுகளை முன்வைக்கலாம்.

2) இருபதாம் நூற்றாண்டின் மத்தியில், குறிப்பாக இரண்டாவது உலகப் பெரும் போர்க்காலம் வரையிலும் நவீனத்துவமானது, தனியுரிமை முதலாளித்துவத்தினால் தனது குணாம்சங்களைப் பெற்றுக் கொண்டது. இதனோடு மின்னியல் மற்றும் உள்ளக இயந்திர நுட்பங்களின் வளர்ச்சியையும் இணைத்துக் கொள்ளலாம்.

3) தற்போது நாம் இருக்கும் காலகட்டம் பல்தேசிய நுகர்வுவாத முதலாளித்துவத்தின் செல்வாக்கால் சூழப்பட்ட நிலைமை (பண்ட உற்பத்திக்குப் பதிலாக பண்டங்களின் சந்தைப்படுத்தல் / விற்பனை / நுகர்வு என்பனவே அழுத்தம் செய்யப்படுகின்றன.) பின்-நவீனத்துவம் இக்கட்டத்தில் அணுவியல், இலத்திரனியல் தொழில்நுட்பங்களோடும் இடைத்தொடர்பு கொண்டமைகின்றது.

நவீனம் எனப்படுகின்ற பிரக்ஞைபூர்வமான காலப்பகுதி எப்போது ஆரம்பமானது 'நவீனத்தன்மை' (Modernity), 'நவீனத்தன்மை அல்லாதது' (Non - Mordenity) என்பனவற்றை எவ்வாறு பிரிப்புச் செய்வது என்பன தொடர்பில் ஆய்வறிவாளர்களின் விவாதம் நிகழ்ந்தபடி உள்ளது. வரலாற்றாசிரியர்களின் நோக்கில், நவீனத்தன்மை மிக்க காலகட்டம், அறிவொளிக் கால யுகத்திலேயே ஆரம்பித்துவிட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவொளி யுகத்தின் சிந்தனைகள் எவ்விதமான நவீனத்துவக் கருத்தியலுக்கு வழிகோலின என்பது பற்றி ஒரு சுருக்கமான பகுப்பாய்வினை மேற்கொண்ட Jan Plax பின்வரும் கருத்துக்களை எடுத்து விளக்கியுள்ளார்.

1) ஒரு ஸ்திரமான, ஒருங்கிசைவான, புரிந்துகொள்ளத்தக்க "சுயம்" (Self) ஒன்று உள்ளது. அது விழிப்புணர்வு மிக்கது; பகுத்தறிவானது; சுயாதீனமானது; சர்வவியாபகமானது. அதனில் பௌதீக நிலைமைகளோ, வேறுபாடுகளோ குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தாது.

2) அச் 'சுயம்' தன்னையே அறிந்துகொண்டது. அவ்வாறே தர்க்கம், பகுத்தறிவு என்பவற்றுக்கு சூழவுள்ள உலகினையும் புரிந்து கொள்கிறது.

3) புறவயம் சார்ந்த தர்க்கவியலின் ஊடாக, உற்பத்தி ஆக்கப்பட்ட அறிவு முறையானது. விஞ்ஞானத்தால் ஏற்பட்டது. ஏனெனில் உலகப் பொதுமையான உண்மைகளை விஞ்ஞானம் மட்டுமே எடுத்துரைக்க முடியும். (விஞ்ஞானம், தனிநபர் அந்தஸ்தையோ / புரிந்து கொள்பவர் அந்தஸ்தையோ கருத்தில் கொள்வதில்லை)

4) விஞ்ஞானத்தினால் உற்பத்தி ஆக்கப்படும் அறிவு "உண்மையானது"; நிலைபேறானது.

5) விஞ்ஞானத்தினால் உற்பத்தி ஆக்கப்பட்ட அறிவும், உண்மையும் எப்போதும் முன்னேற்றத்துக்கும், பூரணத்திற்கும் வழிகோலும். (விஞ்ஞான அறிவை மனிதகுல அழிவிற்குப் பிரயோகிப்பதில் விஞ்ஞானம் பொறுப்பாக மாட்டாது) எல்லா மானுட நிறுவனங்களையும், நடைமுறைகளையும் விஞ்ஞானத்தினால் பகுப்பாய்வு செய்ய முடியும்.

6) எது உண்மை என்பதற்குத் தர்க்கவியலே இறுதித் தீர்ப்பாளன். எனவே, எது சரியானது, எது நல்லது, எது சட்டபூர்வமானது, அறநெறியானது என்பதற்கும் அதுவே உரைகல். தர்க்கத்தால் கண்டுபிடிக்கப்பட்ட அறிவுக்கு அமைவான கீழ்ப்படிவினைக் கொண்டுள்ளதே சுதந்திரமாகும்.

7) தர்க்கத்தால் ஆட்சிப்படுத்தப்படும் உலகில் "உண்மை" எப்போதும் ஒரே வகையானதாகவே இருக்கும். அவ்வாறே "நல்லது", "சரியானது", "அழகு" என்பனவும் ஒரே தன்மையானதாக இருக்கும். எனவே எது "உண்மை" எது "சரி" என்பதற்கிடையில் முரண்பாடு இருக்க முடியாது. அதன்வழி, சமூகநீதியில், எல்லா வகையிலும் பயனுள்ள அறிவுக்கு விஞ்ஞானமே 'கட்டளைக்கல்லாக' (Pardigm) உள்ளது. நடுநிலையானதும், புறவயமானதுமான விஞ்ஞான அறிவை உற்பத்தி செய்யும் விஞ்ஞானிகள் ஏனைய விடய ஆர்வங்களால் உந்தப்படக் கூடாது. (பணம், வலு போன்றவை)

8) மொழி அல்லது கருத்து வெளிப்பாட்டு முறைமை, அறிவை உற்பத்தி செய்து பரப்பும் மொழிவடிவம் என்பன தர்க்க ரீதியானதாக இருக்க வேண்டும். மொழியின் தர்க்கபூர்வத் தன்மைக்கு அது திறந்த தன்மையைக் கொண்டிருத்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் பொருள்களுக்கும், அவற்றை விபரிக்கும் வார்த்தைக்கும் இடையில் புறவயமான தொடர்பிருக்க வேண்டும். மேலே விபரித்த கருத்துக்களே மனிதநேய அடிப்படைச் சிந்தனைகளாக உள்ளன. இன்னொரு மட்டத்திலான பார்வையில் அவற்றைப் பரிசீலிக்கும் போது, நவீனத்துவவாதத்தின் அடிப்படைகளாகவும் இவை உள்ளன. 'நவீனம்' என்பது அடிப்படையில் 'ஒழுங்கு' (Order) பற்றியது. பகுத்தறிவு (Rationality), பகுத்தறிவுமயவாக்கம் (Rationolializatin) என்பவற்றிலும் அது சிரத்தை கொண்டது. இத்தகைய ஒருங்கிசைவான அறிவு விசாரணையினின்றும் அது ஒரு தெளிந்த அறிவைக் கொண்டு வருகிறது. எத்துணை அளவு பகுத்தறிவை உபயோகிக்க முடிகிறதோ, அத்துணை அளவு சமூக ஒழுங்கைப் பேண முடியும் என்பதாக நவீனத்துவம் உத்தேசிக்கிறது. இதனூடாக ஒழுங்கு, ஒழுங்கின்மை தொடர்பாக கரிசனையும், அவற்றை மையப்படுத்திய சொல்லாடல்களும் (Discourse) நவீன சமூகத்தில் முதன்மை பெறுகின்றன.

லியோடார்ட் (Francois Lyotard) என்னும் பின்-நவீனத்துவவாத ஆய்வறிவாளர் சமூகங்களின் ஸ்திரப்பாட்டினை நிலை நிறுத்தும் முயற்சியை 'முழுமைத்துவம்' (Totality), முழுமையாக்கும் முயற்சி (Totalize System) என்பவற்றுக்கு சமப்படுத்தி நோக்கியுள்ளார். இதே எண்ணக்கருவை, டெரிடாவும் (Derrida) ஒழுங்குப்பாட்டின் பூரணத்துவம் என்ற கருத்தில் பயன்படுத்தியுள்ளார். முழுமைத்தன்மை, ஸ்திரத்தன்மை, ஒழுங்கு என்பன நவீன சமூகத்தின் பெருங்கதையாடலாக (Mass Narrative) பயன்படுத்தப்படுகின்றன. அவை ஒரு கலாசாரமானது, தன்னைப் பற்றியும், தனது நடைமுறைகள், நம்பிக்கைகள் பற்றியும் சொல்லுகின்ற கதையாடல்களாகக் கருதப்படுகின்றன.

ஒவ்வொரு நம்பிக்கை மரபுக்கும் / கருத்தியலுக்கும் பிரத்தியேகமான, சுயமான பெருங்கதையாடல் காணப்படும் என்பது லியோடார்டின் அபிப்பிராயமாகும். எடுத்துக்காட்டாக, மார்க்சீயத்தை (Marxism) எடுத்தால், முதலாளித்துவ வீழ்ச்சியுடன், கற்பனைவாத சமதர்ம உலகம் உருவாகும் என்பது அதனின் பெருங்கதையாடலாக உள்ளது.

அறிவின் பிரதான வடிவமான விஞ்ஞானம் உள்ளிட்ட, நவீன சமூகத்தின் கருத்தியல் யாவும், இத்தகைய "பெருங்கதையாடலில்" தங்கியுள்ளன. பெருஞ் சொல்லாடல் கதையாடல்களை விமர்சிக்கும் முனைப்போடு பின்-நவீனத்துவம் உள்ளது. முரண்பாடுகளும், ஸ்திரமின்மையும் பெருஞ் சொல்லாடல்களில் புதைந்து கிடக்கின்றன. அவற்றை பெருஞ் சொல்லாடல் 'முகமூடி' இட்டு மறைப்பதாய் உள்ளது. ஒழுங்கை உருவாக்கும் ஒவ்வொரு பிரயத்தனமும் மறுதலையாக அந்த ஒழுங்குப்பாட்டிற்குச் சம அளவான ஒழுங்கின்மைகளையும் ஏற்படுத்துகின்றன. இதனை நவீனத்துவம் வேறு வகையான உபாயங்களைக் கையாண்டு மறைத்து விடுகின்றது. இந்நிலையில் பின்-நவீனத்துவம் ஆனது, பெருங்கதையாடலை நிராகரிக்கிறது. ஆயின், உலக வியாபகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாடல்களுக்கு (Global Narratives) பதிலாக, உள்ளூர் மட்டத்திலான சிறிய கதையாடல்களை முன்வைக்கக் கோருகிறது. அத்தகைய சிறிய கதையாடல்கள் (Mini Narratives) சந்தர்ப்பங்களுக்கு இசைவானது; ஏற்பாட்டு ரீதியானது; அவசரத் தேவைக்கு உகந்தது; தற்காலிகமானது. அவை, 'சர்வதேச வியாபகம்', 'உண்மை' , 'தர்க்கம்', 'ஸ்திரப்பாடு' என்று எத்தகைய குணாம்சங்களுக்கும் உரிமை கோருவதில்லை.

அறிவொளிக்கால யுகத்தின் சிந்தனை போல் அல்லாமல், பின்-நவீனத்துவம் மொழிக் கட்டமைப்பை வித்தியாசமாகப் பார்க்கிறது. அதனது கருத்தில் சுட்டிக் காட்டப்படுவோர் (Signifiers) மட்டுமே முதன்மைப்படுத்தப்படுகின்றனர். எனவே ஸ்திரமான, நிலைபேறான யதார்த்தம் அங்கு காணப்படுகிறது. இதன்படி பின் நவீனத்துவ சமூகங்களில் ஆழ்நிலை உள்பொருளின்றி, வெறும் மேற்பரப்பு (Surface) மட்டுமே காணப்படும். வேறு வகையிற் கூறின், பின்-நவீனத்துவ சமூகங்களில் 'மூலங்கள்' (Originals) என்று எதுவும் இல்லை. பிரதிகள் / நகல்கள் (Copies) மட்டுமே காணப்படும். எடுத்துக்காட்டாக, ஓர் ஓவியம், சிற்பம் என்பதற்கு ஆயிரக்கணக்கான பிரதிகள் காணப்படினும், அவற்றின் மூலங்களுக்குத்தான் பெறுமதி இருக்கலாம்.

பின் நவீனத்துவம் பேசும் அறிவு :

கவனக்குவிப்பு என்ற வகையில் பின்-நவீனத்துவத்தின் பார்வை அறிவு, சமூக ஒழுங்கமைப்பு என்பன மீதும் படிந்துள்ளது. நவீன சமூகங்களில் 'அறிவு' எனப்படுவது 'விஞ்ஞானத்திற்கு' சமமாக்கப்பட்டுள்ளது. அது, கதையாடலினின்றும் பிரிப்புச் செய்யப்படுகின்றது. விஞ்ஞானம் நல்லது, தர்க்கமானது, ஏற்புடையது எனவும், கதையாடல் - தீயது, தர்க்கமற்றது எனவும் பிரித்துப் பார்க்கிறது. பின்-நவீனத்துவ சமூகங்களில், அறிவானது செயற்பாட்டியல் சார்ந்தது. இங்கு அறிவைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கிலன்றி, அதனை பயன்பாட்டு நோக்கிலேயே பெற்றுக் கொள்கின்றனர். சரூப் (Sarup) என்பார் சுட்டுவது போல, இன்றைய கல்விக் கொள்கையானது, பயிற்சி, செயற்திறன் என்பனவற்றிலேயே கவனம் கொள்கின்றது. மாறாக, கல்வியில் பொதுநிலைப்பட்ட பரந்த, மானுட இலட்சியங்கள் புறந்தள்ளப்படுகின்றன.

இன்றைய பின்-நவீனத்துவ சமூகங்களில் அறிவு ஆனது பகிரப்படும் ஒன்றாகக் காணப்படுகிறது. அத்துடன் சேமிக்கப்படுவதாயும், வெவ்வேறு வழிமுறைளில் ஒழுங்கமைக்கப்படுவதாயும் உள்ளது. அறிவின் உற்பத்தியிலும் நுகர்விலும் இலத்திரனியல், கணனித் தொழில்நுட்பம் ஆட்சிப்படுத்துகின்றமையை அவதானிக்கின்றோம். கணனியில் சேமிக்க முடியாத மீள ஒழுங்குபடுத்த இயலாத எதுவும் அறிவன்று" எனும் நிலைமை உருவாகியுள்ளது. இத்தகைய படிமமாற்றீட்டின்படி 'அறிவு' (Knowledge) என்பதற்கு எதிர்ப்பதம் அறிவின்மை (Ignorance) என்பதன் பதிலாக வெறும் சந்தடி (Noice) என்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியாடார்டின் கருத்தில், பின்-நவீனத்துவ சமூகத்துக்குள்ள முக்கிய பிரச்சினையாக அமைவது எது அறிவென்று எவர் தீர்மானிப்பது, அறிவையும், சந்தடியையும் எவ்வகையில் பிரித்தறிவது என்பது பற்றிய பிரச்சினையே. அறிவு எனப்படுவது ஒரு வகையான மொழி விளையாட்டினை (Language Game) முன்வைப்பதாக லியோடார்ட் கருதுகிறார். இதுபற்றி மிகச் சிறந்த எண்ணக்கரு விளக்கம் சார் கட்டுரையினை சரூப்பும் (Sarup) வரைந்திருக்கிறார்.

பின்–நவீனத்துவம் பற்றிய கருத்து நிலைகளும், விமர்சிப்பும்

இதுவரையிலும் நவீனத்துவவாதத்தை ஒரு சாளரமாய்க் கொண்டு, பின்-நவீனத்துவத்தின் கோட்பாடு அடிப்படைகளைப் புரிதலுக்குட்படுத்தும் எமது முயற்சியில் அது பற்றி எழுந்திருக்கும் கேள்விகள், விமர்சனங்களை அறிய முற்படுவது, அதனை மேலும் ஆழமான புரிதலுக்கு எடுத்துச் செல்லும். பின்-நவீனத்துவத்தின் அரசியற் சார்பு பற்றியும் அநேக கேள்விகள் உள்ளன. பிரதானமாக இக் கோட்பாட்டியக்கம் சமூக நிறுவனங்கள் / நியமங்கள் மீதான துண்டாடலை நோக்கியதா, அதற்கான உள்ளார்ந்த ஏற்பாட்டு ரீதியானதா, சமூகக் கட்டொருமைப்பாட்டைக் குலைத்து ஸ்திரமின்மையினை வியாபகப்படுத்தும் நோக்கிலானதா.... அல்லது 'கொஞ்சம் நன்மை', 'கொஞ்சம் தீமை' கலந்தது என்பதா... என்பன போன்ற கேள்விகளை இங்கு சுட்டலாம்.

இக்கேள்விகளை முன்வைத்து, பின்-நவீனத்துவம் பற்றிய விமர்சனங்களும் பரவலாக எடுத்துக் காட்டப்படுகின்றன. சிலர் நவீனத்துவத்திற்கு முந்திய யுகத்திற்கு (Pre - Modern Era) மீளவும் திரும்ப வேண்டும் என்கின்றனர். இவர்களின் சிந்தனை - பழமைவாய்ந்த அரசியல், சமய, தத்துவக் குழுக்களுடன் தொடர்புபட்டதாகும். இந்த இடத்தில், சமய அடிப்படைவாதம் (Religious Funda Mentalism) என்பதை, பின்-நவீனத்துவத்தின் பக்க விளைவாகக் கருதும் ஒரு விமர்சனப் பார்வை பற்றியும் குறிப்பிடலாம். (எடுத்துக்காட்டாக சல்மான் ருஷ்டியின் நூல், குறிப்பிட்ட சமயச் சார்பான பெருங்கதையாடலை, மீள்கட்டவிழ்ப்புச் செய்ய முற்பட்டதனால் அது பெருஞ் சர்ச்சைக்கு உள்ளானமை.)

பின்-நவீனத்துவம் துண்டாடலையும், பல்வகைப்பாடுகளையும் அழுத்தம் செய்வதானது, தாராளவாத, தீவிர சிந்தனைப் போக்காளருக்கு ஒரு கவர்ச்சியை வழங்குகிறது. பெண்நிலைவாதக் கோட்பாடுகளும் இத்தகைய கவர்ச்சி நிலையைப் பெற்று, இன்னுமொரு மட்டத்துக்கு வரலாற்றையும், சமூக நிறுவன இயங்கியலையும் மீள் கட்டவிழ்ப்பு நிலைமைக்கு உட்படுத்தி வருகின்றன.

வேறொரு மட்டத்தில் நோக்கின், பின்-நவீனத்துவம் ஆனது, உலகளாவிய நுகர்வுக் கலாசாரத்துக்கு பல மாற்றீடுகளை முன்வைப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில், இன்று தனிநபர் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில், 'அறிவு' ஆட்சிப்படுத்தப்படுகிறது. இதனால் பண்டங்கள் போலவே அறிவையும் சமத்துவ நுகர்வுக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலைமை உள்ளது. 'மாற்றீடு' என்கிற சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த வகையான நடவடிக்கை அல்லது சமூக முரண்பாடு சார்ந்ததாக உள்ளது. அவசியமான வகையில் உள்ளூர்மயமானது, பகுதியளவானது, மட்டுப்படுத்தப்பட்டது என்பவற்றில் அச்சிந்தனைகள் கவனஞ் செலுத்த வேண்டும்'' என்கிற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. இதன்வழி, அரசியல், உள்ளூர் நிலைமைகளை நெகிழ்ச்சித் தன்மையுடனும், எதிர்வுகூற முடியாத நிலை நின்றும் கோட்பாட்டாக்கம் செய்வதற்கான வழிமுறையினைப் பின்-நவீனத்துவம் முன் வைக்கிறது எனலாம். எனவே, அதனது சுலோகம் "உலகலாவிய சிந்தனை, உள்ளூர்மய நடவடிக்கை" (Think Globally : Act Locally) என்பதாகவும் கொள்ளப்படலாம்.

முடிவுரை :

'நவீனம்' (Modern) நவீனத்துவம் (Modernity), நவீனத்துவவாதம் (Modernism) என்னும் எண்ணக்கருக்களையும், அவற்றின் சமூகப் பின்புல, வரலாற்று நிலைமைகளையும் ஒரு 'பார்வைப் பலகணியாக' கொண்டு இதுவரையிலும் நாம் புரிந்துகொள்ள முயற்சித்த, பின்-நவீனத்துவம் எனப்படுகின்ற கோட்பாட்டு அடிப்படைகள் ஓர் ஆரம்ப மட்டத்திலான சிந்தனைகளே ஆகும். இன்று பின்-நவீனத்துவத்திற்கும் பின்னரான கருத்தியல் தளங்களை நோக்கி மேற்குலகம் விரைகிறது. தென், தென்கிழக்காசியப் பிராந்தியங்களில் இத்தகைய மேற்குலகின் வாத, விவாதங்களும், கருத்து நிலைகளும் எவ்வகையில் உள்வாங்கப்படுதல் வேண்டும் என்பது பற்றியும் வெவ்வேறு அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படுகின்றன. பூகோளமயமாதலின் மிக நுட்பமான, தந்திரோபாய மட்டத்திலான நவகாலனித்துவ ஆதிக்கங்களின் வடிவமாக மேலைப்புலம் சார்ந்த 'கருத்துக்களும்' எம்மையும், எமது சிந்தனைகளையும் தாக்கும் சமகாலத்தில் பின்-நவீனத்துவத்தை எமது சமூக வாழ்வியலின் அடிநிலைகுலையாமல் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பது தொடர்பிலும் சமூக விஞ்ஞான நிலைநின்று சிந்திக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

உசாத்துணை :

1. The Blackwell Dictionary of 20th Contury Sociae thought' (Ed) William Outhwaite and Tom Bottomore
2. Oxford Dictionary of Sociology - Gordan Marshall (Ed), Oxford university Press, 1998.
3. A Dictionary of Cultural and Critical Theory - Michael Payre (ed) - 1996, Blackwell Publishers. P.P.233-235
4. Arran E.Gare - Post Modernism and the Environmental Crisis, Routledge, 1995.
5. Norris, Christopher (Ed) - What's Wrong with post modernism
6. Fukmyama, Francis - The End of History and the last man, penguin Books, 1992.
7. Lyotard, Jean Francois - The Post Modern Condition - A Report on Knowledge. The Anniversity of Minnesota Press, 1993.
8. Levi Strauss, Claude - Tristes Tropiques, Pocket Book Edition, 1977.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண் அச்சகம் - 05, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு. 065-2222597